Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් ஜூன் 23-29, 2002

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 465



## சந்திரிகாவின் புதிய வியூகம்

## மலையகத்தின் தலைமைப் போட்டி

## 'காற்றாடியின்' காற்றுவாக்கில்

## பார்த்த ஞாபகம் இல்லையோ?



## நினைத்து நினைத்து சிரிக்க...

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## ஆன்மீகம்

### கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கும் ஜனம் பாக்கியமுள்ளது!

இந்த உலகத்திலே நமக்கு உபத்திரவமுண்டு. ஆனாலும், இயேசு உலகத்தை ஜெயித்ததால் அவரை விசுவாசிக்கும் நமக்கு ஜெயங்கொள்ள அதிகாரம் உண்டு. வியாதிகள், கஷ்டங்கள் வரலாம். நாம் செய்யவேண்டியது நமது சுயத்தின் மேல் நம்பிக்கை வைக்காது கர்த்தர் மேல், தேவபலத்தின் மேல் நம்பிக்கை வைக்கவேண்டும்.

"உலகத்திலுள்ள மருத்துவர்கள் என்னை விடுவிப்பார்கள் என்று கருதுவீர்களானால் ஒருவேளை கைவிடப்படலாம்."

(லூக்கா 8:43-47)

இந்த ஏழை ஸ்திரீ பன்னிரண்டு வருஷ காலமாய் வேதனைப்பட்டாள். மருத்துவர்களால் அவளை விடுவிக்கமுடியவில்லை. இறுதியாகத் தன்னை சிருஷ்டித்த கர்த்தரிடத்தில் தனது விசுவாசத்தை வைத்தாள். தன்னை முற்றிலுமாக வெறுமையாக்கினாள். அவளது ஆவி தன்னை உள்ளடக்கிய கர்த்தரிடமாய் முறையிட்டது. நீ ஆவியிலே நிறைந்து யாக்கோப்பைப் போல் போராடி நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்று ஜெபி. உண்மையாய் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

வை.அக்ஷாள் கமலா, கல்கிஸ்ஸை.



### சிறப்புடைய சங்கடஹர சதுர்த்தி

நமக்கு வரும் சங்கடங்கள் அனைத்தையும் நீக்கிச் சௌபாக்கியம் தரவல்லது சங்கடஹர சதுர்த்தி விரதம். ஆவணி மாதம் தேய்பிறைச் சதுர்த்தி தினத்தில் இவ் விரதத்தைத் தொடங்க வேண்டும். இரவு சந்திரன் உதயமாகும்போது விநாயகரை வழிபட்டுச் சந்திரனுக்கு அர்க்கியம் தர வேண்டும் என்கிறது சாஸ்திரம். அன்று சந்திரன் தெரியாமல் இருந்தால் அடுத்த நாள் பூஜை செய்ய வேண்டும்.

மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தி மிகவும் உயர்வானது. அதுவும் செவ்வாய்க்கிழமை அமைவது மிகவும் விசேஷம். அது மஹா சங்கடஹர சதுர்த்தி என அழைக்கப்படுகிறது. அந்த நாளில் காலை முதல் உபவாசம் இருந்து கணபதியைத் தியானிக்க வேண்டும். இரவு பூஜை முடித்த பின்-கணேச நிவேதனத்தை மட்டும் உண்டு உறங்க வேண்டும்.

அனுமன் சீதையைக் கண்டதும், தமயந்தி நளனை அடைந்ததும், அகலிகை கௌதமரை அடைந்ததும் இவ் விரதத்தின் மகிமையால்தான். இடையூறு நீங்கி விரும்பியதைப் பெற இவ் வழிபாடு பெருந்துணை செய்யும். ஒவ்வொரு மாதமும் தேய்பிறைச் சதுர்த்தி இரவில் சந்திரன் உதயமான பின் இப் பூஜையைச் செய்தல் சிறந்தது.

வி. வித்யா, குருக்கள் வளவு, அச்சுவேலி.

### பிரபஞ்சக் கண்ணோட்டம்

"நிச்சயமாக சிந்திக்கக்கூடிய மக்களுக்கு இதில் பல சான்றுகள் உள்ளன" (39-42) அல்-குர்ஆன்.

"ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்பதையும், வானம் எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும், மலைகள் எவ்வாறு நாட்டப்பட்டுள்ளது என்பதையும், பூமி எவ்வாறு விரிக்கப்பட்டுள்ளது என்பதையும் அவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டாமா?"

(சூறதுல் காஸியா)

"நிச்சயமாக வானம், பூமி ஆகியவற்றின் படைப்பிலும், இரவும், பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் உள்ளன."

(3-170)

"நிச்சயமாக உங்களுக்கு (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற கால்நடைகளிலே) தக்க படிப்பினை உண்டு. அவற்றின் வயிற்றிலுள்ள சாணத்திற்கும், இரத்தத்திற்கும் இடையில் இருந்து கலப்பற்ற பாலை அருந்துவதற்கு இனிமையாகப் புகட்டுகின்றோம்."

(14-64)

"நிச்சயமாகப் பகுத்தறியக்கூடிய மக்களுக்கு இதில் பல சான்றுகள் உள்ளன."

(16-12)

பஸ்மிறா எம். இப்றாஹிம், கல்முனை-04.

## கவிதைப் போட்டி இல.462

பரிசுக்குரிய கவிதை

### ஏக்கம்

நச்சுப்பாம்பை மடக்கி என்ன
நடுக்கடலைக் குடைந்து என்ன
அணுவைப் பிளந்து என்ன
அண்டத்தை அளந்து என்ன
விண்ணுக்குள் புகுந்து என்ன
விந்தைகள் படைத்து என்ன
மனிதத்தை இழந்துவிட்டோமோ-மனிதப்
புனிதத்தைப் புதைத்துவிட்டோமே!

பூ.மலர்விழி, மட்டக்களப்பு.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### குடி(பறி)க்கப் போகின்றாய்?!

புதருக்குள் புதைக்கப்பட்ட
கண்ணிவெடியே
உன்னால்...
இழந்து நிற்பது
என் கால்களை
மட்டுமல்ல...
வாழ்க்கையையும்
சேர்த்துத்தான்...
மீண்டும் யார் வாழ்வைக்...?


மும்தாஜ் ஏ.முத்தாலிப், அநுராதபுரம்.

### நஞ்சு மனிதன்!

கொடிய விடப் பாம்பையும்
பிடியால் மடக்கியாண்டு
விடம் கறக்கவல்ல மனிதா -உன்
அடிமனத்துறை விடத்தினை
யாராலும் அகற்றமுடியவில்லை - அது
உலகையே நஞ்சாக்குவதை - நீ
உணர்வதுதான் எப்போது?
உலகைத் தூய்மையாக்குவதும் எப்போது?

ஜி.ஸ்ரீநேசன், மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.465



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 23.06.2002

கவிதைப் போட்டி இல.465
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### நிச்சயமாய்...

மண்ணிலே விதை போட்டு
மரமாகி கனி கொடுத்து
களிப்புற்று நாமிருந்த
காலம் போய்...
மண்ணிலே புதைத்த வெடிகளை
மறுபடியும் தோண்டி இங்கு
இழப்பதற்கு இருக்கும் உயிரை
தடுத்து நாம் நிறுத்திவிட்டால்...
தலைவைத்துப் படுக்கலாம் தரையில்...

மனோ கோபாலன், ஹப்புத்தளை.

### மாறாக் கலக்கம்

உன்னைக் கண்டால்
உதறல் எடுக்கிறது
உறக்கம் வர மறுக்கிறது
உண்மையில் நீ ஒழிந்து
உண்மைச் சமாதானம்
உலவும் காலம்
உண்டாகும்வரை
உள்ளத்துடிப்பின் வேகம்
ஒருபோதும் தணிவதற்கில்லை.

க.அல்- ஆஸாத், ஏறாவூர்-03.

### ஆபத்து

புதையல் கிடைத்ததாய்
பெருமிதம் கொள்ளாதே - நீ
பெருவிரல் கொண்டழுத்தி
பேராசையில் திறப்பது - உடன்
பேராபத்தைக் கொண்டுவரும்
பேய் என்று அறியாயோ?

க.யோகேஸ்வரன், கஹகல்லையூர்.

### மிஞ்சுமா?

நான் அஞ்சினால்
இதற்கு அஞ்சுகின்ற
மக்கள் மிஞ்ச முடியாது
ஆதலால் இறைஞ்சுகின்றேன்
செயலிழக்கும்வரை
என் கரங்கள் உடலினிலே
மிஞ்ச வேண்டுமென்று

ஐ.சங்கர், பண்டத்தரிப்பு.

### வானவில்

தொலைந்துபோன
முகவரிகள்
தொலைந்துகொண்டு
இருக்கின்றன
தோழனே,
உன் பெயர்
தொல்பொருளாயாவது
இருக்கட்டும்...

ஏ.எஸ்.ஷர்மிலா, அனுராதபுரம்.

### எத்தனை கருவியய்யா

தமிழனை அழிக்கவென்று
எத்தனை வடிவிலய்யா
வந்துவிட்டது எவ்வளவோ...
வைத்தவனுக்கே தெரியாமல், நின்று
தடுமாறுகின்றான், வந்தவன்
என்ன செய்வான் பாவம்!
எம்மினம் அழிக்கவென்று எத்தனை
கருவியய்யா?

என்.இந்துமதி, வவுனியா.

### வதந்திகள்

உன்னுடைய கைகள் பட்ட
இடமெல்லாம் சிலந்தி வலைகள்
போல கண்ணிவெடிகள் - ஆனால்
உன் முகம் தெரியாத
ஆட்களுக்கோ இதனால்
ஏகப்பட்ட வதந்திகள்.

கிருஷ்ணன் சிவா, மஸ்கெலியா.

### உழைத்த கரம்!

உழைத்து இரத்தம் போல சிவந்து
இருக்கும் இந்தக் கரங்களில்
உருண்டையாய்
சுருண்டிருப்பது இந்த உலகமோ?!
யார் கண்டா...
உழைக்கும் கரங்களுக்குள்
உலகமும் அடிமையாகலாம்!

எம்.எச்.எப்.ஷர்மிலா, அக்குரண.

### ஆசை

எம் ஊர் பார்க்கும் ஆசை
எனக்கும்தான் உள்ளதம்மா
புதைத்துவைத்த மிதிவெடிகள்
அகற்றிவிட்ட செய்தி கிடைத்ததும்
ஒன்றாகச் செல்வோமே இப்போது
நீ உறங்கு


சிவகுமார், திருமலை.

### நோக்கமென்ன?

கனிந்துவரும் அமைதிதனை
கனிய வைக்க அகற்றுகின்றனரா
அன்றேல்-
கருகவைக்க புதைக்கின்றனரா
இந்த நிலக்கண்ணிவெடியை?

அ.சந்தியாகோ, கண்டி.

## வாசக[ர்] சாலை



அன்புள்ள தினமுரசே!

உன்னுடைய ஆற்றலும்
சிறப்பும் நீடித்து நிலைத்து
உன் புகழ் வானுயர முதலில்
வாழ்த்துகிறேன்.

சோ.ராமசாமி அவர்களின் "துக்ளக்" இல் வெளிவந்த கட்டுரையை "தினமுரசில்" பிரசுரித்திருந்ததைக் கண்டு மகிழ்ச்சி. L.T.T.E பற்றி யதார்த்த விடயங்களைக் கொண்டு,நல்ல பரிபாஷையில் சோ கூறும் கருத்துக்கள் பிரமாதம். அவர் சினிமாவில் பேசும்போது எவ்வாறு நகைச்சுவையில் பேசுவாரோ. அதே போல மனக்கண் முன் நின்று பேசுகிறார். ஆனால், சினிமா வசனமல்ல, சிதைந்து போன மானுடத்தின் மரண ஓலங்கள், அறுந்து போன வாழ்க்கை முடிச்சுகள், கூக்குரலின் குணப்பாடுகள், சிதறிச் சிதைந்து போன கலாசார விழுமியங்கள் எல்லாம் எழுந்து முழங்காலில் நின்று பேசுவதாகத் தோற்றமளித்தது. என்போன்ற, துக்ளக் பத்திரிகை வாங்கிப் படிக்க முடியாதவர்களுக்கு ஒரு நல்ல வரப்பிரசாதம் இது.

வாசகர், எஸ் தம்பி.

முத்தான தினமுரசே!

வாரம் ஒருமுறை பவனி வரும் நீ வாசகர் எம்மை வியப்பிலாழ்த்துகிறாய். நெட்டிலிருந்து நீ தரும் படங்கள் எம்மைப் பிரமிக்கவைக்கின்றன. இவ்வாரம் தமிழ்நாட்டுப் பெண்ணாக லியனாடோ டாவின்சி அற்புதமோ அற்புதம். இன்னும் உனது அட்டைப்படங்களின் ஆக்கமும், சித்தரிப்புக்களும் அற்புதம். உனது படைப்புக்கள் யாவுமே அற்புதம். இன்னும் பல ஆக்கங்களும் அருமை. மீண்டும் மீண்டும் உனது பணி தொடர வாழ்த்துக்கள்.

கை.ரமேஸ், பொத்துவில்.

❊❊❊

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து
அம்சங்களும் சூப்பர்.

சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் மகிழ்ச்சிப்படுத்தும் உன் பணி தொடர வாழ்த்துகிறேன்.

ஜெ.திவ்வியராஜன், கிருலப்பனை.

வாழிய முரசே!
திக்கெட்டும் தமிழ்மொழியின் தேனான புகழ்பரப்பி
மக்களின் மனங்கவர்ந்த மதுரமிகு தினமுரசே
பக்கங்கள் பத்திரண்டில் பல்சுவை விடயமீந்து
பக்குவமாய்ப் பத்தாண்டிற் பதிக்கின்றாய் பாதங்களை.

அரசியற் கட்டுரைகள் அருமையான சிறுகதைகள்
முரசம் எனும்பேரில் ஆசிரியர் சிந்தனைகள்
தரத்திற் குறைவில்லாத் தமிழ்மணக்கும் தேன்கிண்ணம்
இரசமென இதயந்தொடும் ஆன்மீக முத்துக்கள்.

சிந்திக்க வைக்கின்ற சிந்தியா வின்பதில்கள்
இந்தியச் சினிமாவின் பிந்திய தகவல்கள்
நந்தமிழ் மழலையர்க்கு நயமிகுபாப் பாமுரசு
சொந்தமான மலையகவாழ் மக்களுக்கும் பக்கமொன்று.

அதிரடி அய்யாத்துரை அரசியல் வாதிகளின்
புதினங்கள் பலகூறிப் புன்னகைக்கச் செய்திடுவார்
காதிலபூ கந்தசாமி கனபேரின் கதைசொல்லி
ஏதுமறி யாதவர்போல் எல்லாம்கற் பனையென்பார்.

இன்னுமுண்டு உன்னிடத்தில் இல்லைவார்த்தை என்னிடத்தில்
தொண்ணூற்று மூன்றிற் தொடங்கிய உன்சேவை
இந்நாட்டுத் தமிழர்க்கும் இடம்பெயர்ந்த நம்மவர்க்கும்
என்றென்றும் கிடைக்கட்டும் வாழியநீ பல்லாண்டு.

கீதா நிஷான், கொட்டாஞ்சேனை.

## உங்கள் பக்கம்

### தேவை சிறந்த இலவச சேவை

நோய் என்பது உயிரினத்திற்குத் தவிர்க்க முடியாதபடி அமைந்துள்ள ஒரு சாபக்கேடாகும். ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு அங்கு இல்லையாயினும் நோய்களை வருமுன் காப்பதில் பணம் படைத்தவனுக்கு வசதிகள் பலவுண்டு. சாதாரண தரத்தில் வாழ்க்கை நடத்துபவர்களுக்கு நோய் நன்கு முற்றிய பின்னர் கூடச் சரியான மருத்துவ வசதி கிடைக்கும் என்றில்லை.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஒரு நோயாளி வைத்தியசாலை மட்டத்தில் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாகின்றான்.

எமது நாட்டில் ஒரு நோயாளியை அரச பொது வைத்தியசாலையில் அனுமதித்தால் அங்கு அவனுக்குப் படுக்கை வசதியிருக்காது. பலதரப்பட்ட மக்களால் வைத்தியசாலை நிரம்பி வழிவதால் அடிப்படை வசதிகள் எல்லாமே தகர்ந்துபோய்த்தானிருக்கும். இருக்கும் வசதியைக் காட்டிலும் அதிகூடிய நோயாளிகளை அனுமதிக்க வேண்டியிருப்பதால் வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் தொழிலாளர்கள் மனத்திலும், "நடப்பது நடக்கட்டும்" என்ற மனோபாவம் தான் ஓங்கி நிற்கிறது. வீட்டில் அன்பான மனைவி, பிள்ளைகளின் கவனிப்புப் பறிபோவதாலும் இயற்கையாகவே அமைந்திருக்கக்கூடிய சுகாதார சுற்றுப்புறச் சூழல் பறிபோனதாலும் நோயாளியின் வருத்தம் உச்சக்கட்டத்தை அடைவதுடன், வருத்தம் கண்டுபிடிக்கப்படாத நிலையிலேயே அவன் வைத்தியசாலையை விட்டு வெளியேற்றப்படும் அல்லது வெளியேறும் சந்தர்ப்பங்களும் அதிகமாகவே உள்ளன.

ஒரு ஆணுக்கோ பெண்ணிற்கோ நாற்பது வயதுக்கு மேல் நீரிழிவு, இரத்த அழுத்தம், இருதய நோய்கள் போன்ற இன்னோரன்ன பல நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகவே இருக்கும். இதன் பொருட்டு முற்கூட்டியே சில மருத்துவ பரிசோதனைகளைச் செய்யக்கூடுமாயின் ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை மேற்கொள்வதும் இலகு. இவ்வசதிகளை இலவச மருத்துவ மனையில் பெற்றுக்கொள்வதென்பது சாத்தியமில்லை.

அதே சமயம் தனியார் "கிளினிக்"குகளை எடுத்துக்கொண்டால் தலைநகரிலும் சரி, பிற நகரங்களிலும் சரி வசதிகள் இருக்குமளவிற்கு அவற்றைச் சாதாரண மக்கள் பெறக்கூடிய அளவில் நியாயமான கட்டண விதிப்பு இருக்காது. இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு, இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவு, இரத்த அழுத்த அளவு போன்ற சாதாரண ஆய்வுகளுக்கே நூற்றுக்கணக்கான ரூபா விதிக்கப்படுகிறது. அதனை மருத்துவ நிபுணரிடம் காட்டிக் கலந்தாலோசிக்க வேண்டுமாயின் அதற்கு மற்றொரு தொகை!

எனவே, சில பாரிய நோய்களுக்கும் முக்கியமாகப் பிரசவத்திற்கும் இலவச மருத்துவ வசதிகள் கிடைக்கவேண்டியது கட்டாயத்தின்மேல் கட்டாயம் மட்டுமல்ல, மனித சமுதாயம் நிறைவேற்றவேண்டிய முக்கிய பணியாகும் அது!

வீ.என்.சந்திரகாந்தி, திருகோணமலை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# சிவாவின் இடத்திற்கு யார்?

## மரணிக்கும் முன்னரே முடிவானது!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமரர் சிவசிதம்பரத்தின் இடத்திற்குத் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த துரை ரட்ணசிங்கம் நியமிக்கப்படவுள்ளார்.

இவரது நியமனத்தைத் தடுத்து நிறுத்தி அந்த இடத்தை இணுவில் முத்துலிங்கம் என்பவருக்குப் பெற்றுக் கொடுக்கத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வி.ஆனந்தசங்கரி மேற்கொண்ட சகல முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன.

முத்துலிங்கத்தை நியமிக்கப் புலிகளிடம் அனுமதி கோரி வன்னி சென்ற ஆனந்தசங்கரி வெறுங்கையோடு திரும்பினார். வன்னியில் சங்கரிக்கு அதிர்ச்சி தரும் பதிலொன்று வழங்கப்பட்டதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

சிவசிதம்பரம் நோய்வாய்ப்பட்டிருந்ததால் அவர் விரைவில் இறந்து விடக்கூடும் என்று கருதிய கட்சியின் செயலாளர் இரா. சம்பந்தன் பல வாரங்களுக்கு முன்னரே புலிகளைச் சந்தித்து, சிவசிதம்பரம் இறந்தால் அவரது இடத்திற்கு துரை ரட்ண சிங்கத்தை நியமிக்கப் புலிகளிடம் அனுமதி பெற்றிருக்கிறார்.

ஏற்கனவே சம்பந்தனுக்கு வாக்குறுதியளித்துவிட்ட நிலையில் ஆனந்த சங்கரியின் கோரிக்கைக்கு இணங்க முத்துலிங்கத்தை நியமிக்க முடியாது எனப் புலிகளால் கூறப்பட்டுள்ளது.

சிவா இறப்பதற்கு முன்னரே அவரது இடத்திற்கு சம்பந்தனால் ஒருவர் தெரிவு செய்யப்பட்ட விவரத்தை வன்னியிலேயே ஆனந்தசங்கரி அறிந்து கொண்டதாகத் தெரியவருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் போட்டி உருவெடுத்துள்ள நிலையில் தமக்கு ஆதரவானவர்களைப் பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமிப்பதற்கு ஆனந்த சங்கரியும், சம்பந்தனும் போட்டி போடுவதாகக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

சிவாவின் இடத்தை நிரப்பும் போட்டியில் சம்பந்தன் வெற்றி பெற்றுள்ளதை அடுத்து ஆனந்த சங்கரி பலத்த ஏமாற்றத்திற்குள்ளாகியிருக்கும் அதேவேளை கட்சிக்குள் தனக்கு விசுவாசமானவர்களை ஒன்று திரட்டும் பணியில் அவர் மும்முரமாக ஈடுபட்டுள்ளார் எனக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. ■

## கூட்டணித் தலைவரைக் கூட்டணியே தெரிவு செய்யப் புலிகள் அனுமதி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பதவியை அந்தக் கட்சியின் விருப்பப்படியே ஒருவரைக் கொண்டு நிரப்பப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

சிவசிதம்பரத்தின் மறைவையடுத்து, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக யார் பொறுப்பேற்பது என்ற சர்ச்சை தொடரும் நிலையில் கட்சித் தலைமை வடக்கிற்கா?, கிழக்கிற்கா? கிடைக்க வேண்டும் என்ற வாதமும் இடம்பெறுகிறது.

இந் நிலையில் கட்சியின் தலைவரைத் தம் விருப்பப்படியே தெரிவுசெய்து கொள்ள, அந்தக் கட்சியின் உறுப்பினர்களுக்குப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தமிழரசுக் கட்சியில் இருந்து ஒருவரே தலைமை தாங்க வேண்டும் என்று கூறப்பட்டு வருகின்றது. ■

## மகேஸ்வரன் வன்னிக்கு இரகசிய விஜயம்

## மர்மம் என்ன?

இந்து கலாசார அமைச்சர் ரி. மகேஸ்வரன் கடந்த மாதம் 21ஆம் 22ஆம் திகதிகளில் வன்னிக்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து நம்பகமாகத் தெரியவருகிறது. மிகவும் இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட அமைச்சரின் இந்த இரண்டு நாள் விஜயத்தின் போது, வன்னியில் அவர் தங்கியிருந்த சமயம் நிலத்தில் உறங்க வைக்கப்பட்டதாகவும் போதியளவு உணவு கூட அவருக்குக் கிடைக்கவில்லை எனவும் புலிகளின் வட்டாரங்களிலிருந்து அறியக் கிடைக்கிறது.

மகேஸ்வரன் என்ன காரணத்திற்காக இவ்வாறு வன்னி சென்றார் என்பது இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது.

இவரது வன்னிப் பயணம் குறித்து அரசாங்கத்திற்கோ ஐ.தே.க. தலைமைக்கோ தெரியாது. தனது சொந்த வாகனத்திலோ, அமைச்சுக்குச் சொந்தமான வாகனத்திலோ அங்கு செல்வதைத் தவிர்த்த அவர் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் பொறுப்பில் இருக்கும், யு.என்.டி.பி வாகனம் ஒன்றிலேயே பயணம் செய்திருக்கிறார்.

இதேவேளை மகேஸ்வரனிடம் புலிகளால் பெரும்தொகை பணம் கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. ■

## குடிபோதையில் ரவிராஜ்

## தினக்குரல் அலுவலகத்தில் அட்டகாசம்

தினக்குரல் பத்திரிகை அலுவலகத்துக்குள் குடிபோதையுடன் புகுந்த தமிழ்கட்சி கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அங்கு கடமையிலிருந்த பத்திரிகையாளர்களை மிரட்டி தகராறு செய்திருக்கிறார்.

தினக்குரலில் வெளியான செய்தியொன்று தொடர்பாக ஞாயிற்றுக்கிழமை காலை பத்திரிகை அலுவலகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எச்சரித்த ரவிராஜ் சிறிது நேரத்தில் தனது மெய்ப்பாதுகாவலர்கள் சகிதம் தினக்குரல் அலுவலகத்திற்குச் சென்றிருக்கிறார். பாதுகாப்பு ஊழியர்களை வாகனத்தில் இருத்திவிட்டுக் காரியாலயத்துக்குள் நுழைந்த ரவிராஜ் அங்கிருந்த ஊழியர்களை மிரட்டி, அவர்களைத் தாக்க முயற்சித்திருக்கிறார். அப்போது அவர் குடிபோதையில் இருந்தார்.

அவர் தகாத வார்த்தைகளால் பேசியதுடன் பத்திரிகையாளர்களுக்கு கடுமையான அச்சுறுத்தலையும் விடுத்திருக்கிறார். இவரது வெறியாட்டம் அளவு கடந்து சென்றதால் ஆத்திரமடைந்த சில ஊழியர்கள் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் அங்கு குழுமியவர்கள் குடிபோதையில் தள்ளாடிக் கொண்டிருந்த ரவிராஜை வாகனத்தில் ஏற்றி அனுப்பிவைத்தனர். இந்தச் சம்பவம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை கருத்தெதனையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ■

## "ஏக பிரதிநிதி என்ற கோட்பாடு உலகில் எங்கேயும் இல்லை"

## சுரேஷ் பிரேமச்சந்திரன் பேட்டி

புலிகள்தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற விடயத்தில் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புக்குள் முரண்பட்ட கருத்து நிலவுவதாகத் தெரிவித்திருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ் அணி) தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் "ஏக பிரதிநிதி" என்ற கோட்பாடு உலகில் எங்கேயும் கிடையாது என கூறியிருக்கிறார்.

புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஆயுதப் போராட்டம் நடத்துகிறது. நாம் பாராளுமன்றத்தின் ஊடாகத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருகிறோம். அதனால் எம்மைப் பிரித்துப் பார்க்க முடியாது எனவும் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்தக் கருத்துக்களை அவர் வெளியிட்டுள்ளார்.

சமாதானத்திற்கு எதிரான குழுக்கள் புலிகள் இயக்கத்திற்குள்ளும் இருக்கலாம். அவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்துள்ளார். ■

## தமிழர் புனர்வாழ்வுக் கழக

## அலுவலகம் கொழும்பில்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (T.R.O)கொழும்பில் தனது அலுவலகத்தைத் திறந்துள்ளது.

சர்வதேச ரீதியில் புலிகளுக்கான நிதி சேகரிப்பில் ஈடுபடும் இந்த அமைப்பு கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் அலுவலகம் ஒன்றை நடத்தி வருவதுடன் இங்குள்ள வெளிநாட்டு வங்கியொன்றில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்ற பெயரில் கணக்கையும் ஆரம்பித்திருக்கிறது.

இந்த அமைப்புக்கென கணக்கொன்றைத் திறப்பதில் உள்நாட்டு வங்கிகள் தயக்கம் காட்டியதாகவும், இதனையடுத்தே வெளிநாட்டு வங்கி ஒன்றில் கணக்குத் திறக்கப்பட்டதாகவும் அறியவருகிறது. இந்தக் கணக்கினை ஆரம்பிக்க கொழும்பில் உள்ள தமிழ்க்கட்சி உறுப்பினர் ஒருவர் உதவி புரிந்துள்ளார்.

இதேவேளை இந்த அமைப்புக்கென அவுஸ்திரேலியாவில் இருந்து கிடைத்த ஒரு தொகுதி நிதியை இலங்கை அரசாங்கம் தடுத்து வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ●

## எரிபொருள் விலை மீண்டும் உயரும்!

பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்களின் விலைகள் அடுத்த வாரம் முதல் மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளன.

சர்வதேச சந்தையில் பெட்ரோலியத்தின் விலை அதிகரித்துள்ளதால் தற்போதைய கையிருப்பு முடிவடைந்து புதிதாகக் கொள்வனவு செய்த எரிபொருட்களை சந்தைக்கு விடும்போது விலையதிகரிப்பு செய்ய வேண்டிவரும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஒரு மாத காலத்திற்குள் 2 ரூபா வீதம் 2 தடவைகள் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதால் ஏற்கனவே வாழ்க்கைச் செலவு மிகவும் அதிகரித்துள்ளது.

இம்முறை 50 சதம் அல்லது ஒரு ரூபாவினால் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்படவுள்ளது. ■

## மாற்று அரசாங்கம்

## ஜனாதிபதி சந்திரிகாவின் புதிய வியூகம்!

விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் 18ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் நிறைவேறாதுபோனால் பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தல்களை நடத்த அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அரசாங்கத் தரப்புச் செய்திகள் தெரிவித்திருக்கும் அதேவேளை டிசம்பருக்கு முன்னர் பிரதமர் பாராளுமன்றத்தைக் கலைத்தால் ஐ.தே.க.வில் உள்ள சிலரை இணைத்துக் கொண்டு மாற்று அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணி ஆராய்ந்து வருகிறது.

இது தொடர்பாக ஐ.தே.க.வின் இரண்டாவது தலைவர் என்ற ஸ்தானத்தில் இருப்பவருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமைக்கும் இடையில் ஏற்கனவே இரண்டு சுற்றுப் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றிருப்பதாகத் தெரிய வருகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்களுடன் முரண்பட்ட ஐ.தே.க.குழுவொன்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் மாற்று அரசாங்க யோசனைக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளது. ■

## நவீன்-ஆறுமுகன்?

## மலையகத்தின் தலைமைப் போட்டி

மலையகத்தில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் தலைமைக்கு மற்றொரு சவாலும் உருவெடுக்கத் தொடங்கியுள்ளது.

மறைந்த காமினி திஸநாயக்கவின் மகனான நவீன் திஸாநாயக மலையகப் பகுதிகளில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். அரசாங்கத்தின் இரண்டாம் பட்ச தலைவரும், நவீன் திஸநாயக்கவின் மாமனாருமான அமைச்சர் கரு ஜயசூரிய ஆறுமுகனுக்கு ஈடாக நவீனை வளர்க்கப் பெருமுயற்சி செய்து வருகிறார்.

மலையக மக்கள் முன்னணியினதும், அமைச்சர் சந்திரசேகரனினதும் சவாலை எதிர்கொள்ளும் ஆறுமுகன் அரசியல் ரீதியில் நவீன் திஸநாயக்கவுக்கும் முகம்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

மேல் கொத்மலை மின் உற்பத்தித் திட்டம் தொடர்பாக ஆறுமுகன் தொண்டமானுக்கும் நவீன் திஸநாயக்கவுக்கும் இடையில் பலத்த கருத்து மோதல்கள் கடந்த நாட்களில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. ■

## சுரேஸ் அணியால் மறக்கப்பட்ட பத்மநாபா!

ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் ஸ்தாபகரும் அதன் முன்னாள் செயலாளருமான பத்மநாபாவின் நினைவு நாளை இரண்டாகப் பிளவுற்றுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் ஒரு பிரிவு அனுஷ்டிப்பதுடன் மறுபிரிவு முற்றிலும் மௌனம் சாதித்து வருகின்றது.

வரதர் அணி தலைநகரில் பத்மநாபாவின் உருவப் படங்களடங்கிய சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது. மறுதரப்பான சுரேஷ் அணி பத்மநாபா என்றொருவரைத் தமக்குத் தெரியும் என்று காட்டிக் கொள்ளவே பயப்படுவது போல் மௌனமாக இருந்து வருகின்றது.

1990ஆம் ஆண்டு ஜூன் 19ஆம் திகதி பத்மநாபாவும் மேலும் 12 பேரும் சென்னை கோடம்பாக்கத்தில் வைத்துப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ●

# முரசம்

## மக்கள் சேவையா பதவி மோகமா?

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

தமிழ் மக்களின் இனப் பிரச்சினை இத்தனை காலம் இழுபடுவதற்கும், அரசியல் வழிமுறைகளில் நம்பிக்கையின்றி ஆயுத வழிமுறைகளுக்கு இளைஞர்கள் மாறிச் செல்வதற்கும் ஒரு பிரதான காரணமாக அமைந்தது எமது பாராளுமன்ற அரசியல் வாதிகளின் போலித்தனங்களே. தங்கள் கடந்தகால அரசியலுக்குப் பொறுப்பேற்காது தப்பிக்கொண்டு தற்போதைய அரசியல் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி மீண்டும் பாராளுமன்ற வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளும் ஆதங்கத்துடனேயே தற்போதும் அவர்கள் அரசியல் நடத்தி வருகிறார்கள்.

மக்களின் விடிவுக்காக என்று கூறி, தமிழ் தேசியக் கூட்டமைப்பென்ற பெயரில் நான்கு கட்சிகள் இணைந்து அமைத்த கூட்டு இப்போது பார்ராளுமன்றத்தில் ஒரு ஆசனத்துக்கு ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பவே மிகவும் கேவலமான முறையில் தமக்குள் மோதுகிறது. ஒருவரை எதிர்த்து ஒருவர் பகிரங்கமாகவே பத்திரிகை அறிக்கைகள் விடுகிறார்கள். இதன் மூலம் இவர்கள் மக்களுக்காக ஒற்றுமைப் படவில்லை, வெறும் பதவிக்காகவே ஒற்றுமைப் பட்டார்களென்பதையே வெளிப்படுத்தியுள்ளார்கள். பதவிக்காக அமைத்த கூட்டு, பதவியொன்றில் ஏற்பட்ட வெற்றிடத்தாலேயே பிளவு படும் நிலைக்குச் சென்று விட்டது. தாம் கூட்டுச் சேர்ந்த மற்றைய கட்சிகளிலேயே நம்பிக்கை வைக்க முடியாத இவர்களில் மக்கள் எப்படி நம்பிக்கை வைப்பார்களென்று இவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை. இம் மோதல் கூட்டுக் கட்சிகளுக்கிடையிலானதாக மட்டுமன்றி அதில் தத்தம் நிலைகளுக்கு ஆதரவு தேடி புலிகளையும் இதில் இழுத்து விடுமளவுக்குச் சென்றுள்ளது. ஆக, தமது ஒற்றுமை என்ற போலித் தோற்றத்தின் கையாலாகாத் தனத்தையே இதன்மூலம் நிரூபித்துள்ளார்கள். இம் மோதலானது கூட்டுக் கட்சிகளுக்கிடையிலானதாக மட்டுமன்றி அதில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சிக்கு உள்ளேயே பெரும் மோதலாக உருவெடுத்துள்ளது. கூட்டமைப்புக்கான தேர்தல் இலச்சினை, தேர்தல் கட்சிக்கான பெயர், மற்றும் கூட்டமைப்பின் செயலாளர் என்ற பதவி ஆகியவை தமிழர் விடுதலைக் கூட்டணியினதாகவே உள்ளன. இவற்றை வாய்ப்பாகப் பயன்படுத்திக் காலம் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரத்தின் வெற்றிடத்தை நிரப்பும் அதிகாரத்தைக் கூட்டணியே சுவீகரித்துக் கொண்டது. ஆயினும் அதற்குள்ளும் யாரை நியமிப்பதென்பதில் அதன் தலைவர்களுக்கிடையே மோதல் வெடித்துள்ளது. இவ் அற்பத்தனமான பதவீ மோதல் தமிழ் மக்களுக்கு இவர்களின் வேஷங்களைத் தோலுரித்துக் காட்டியுள்ளதுடன் முழுத் தமிழ் மக்களுக்குமே ஓர் அவமானமாக அமைந்துவிட்டது.

■■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ரணிலின் ராஜதந்திர வியூகம் புலிகளுக்கு வகுக்கப்படும் பொறி!

ரணில் பதவிக்கு வந்து ஆறு மாதத்துக்குள் நான்கு தடவை வெளிநாட்டு சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு விட்டார். அடுத்த மாதம் அமெரிக்கா செல்லவுள்ளார்.

இப் பயணங்களில், சிங்கப்பூருக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் இருதடவைகள் இந்தியாவுக்கும் சென்று வந்துள்ளார்.

இதேவேளை அவரது அமைச்சர்கள் பல வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுவிட்டனர். அண்மையில் தனியார் பஸ் வேலை நிறுத்தம் நிகழ்ந்தபோது 16 அமைச்சர்கள் வெளிநாட்டிலிருந்தார்களென்றால் இவ் வெளிநாட்டுப் பயணங்களின் தொகையை நாம் மதிப்பிடலாம்.

இவ் விஜயங்களின் நோக்கம் என்ன என்பது எவருக்கும் எழும் முதலாவது கேள்வியாகும்.

இங்கு பொருளாதார நோக்கம் கொண்ட விஜயங்களை விட அரசியல் நோக்கம் கொண்டவையே எமக்கு அதிக அக்கறைக்குரியனவாக உள்ளன.

எனினும் பொருளாதார உடன்பாடுகள்கூட அரசியல் நோக்கங்களுடன் மேற்கொள்ளப்படுவதையும் நாம் காண முடிகிறது.

இப்போது இலங்கையில் நிகழும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புகள் மத்தியில்தான் இவ் வெளிநாட்டுப் பயணங்களின் முக்கியத்துவம் எடுத்து நோக்கப்பட வேண்டியதாகியுள்ளது.

ரணில் ஒருபுறம் சமாதானத்துக்கான 'பச்சைக்' கொடியை ஏந்திக் கொண்டு, மறுபுறம் வெளிநாட்டு அரசாங்கங்களின் கைகளில் 'சிவப்பு'க் கொடிகளைக் கொடுத்துவிட்டு வருகிறாரோ என்பதே இப்போது எழுந்துள்ள சந்தேகம்.

வெளிநாட்டு உடன்பாடுகள் பல அடுத்தடுத்து, சடுதியாக நிகழ்ந்தேறுகின்றன. எண்ணிப் பாராத திடுக்கிடும் விடயங்கள் ஒப்பந்தமாகின்றன.

அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தமென்று கூறாத ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்ள உடன்பாடாகியிருக்கிறது. அதில் இலங்கையின் வான்பரப்பு, விமான நிலையங்கள், துறைமுகங்கள் என்பவற்றை அமெரிக்க யுத்த பாவனை உட்பட்ட பாவனைகளுக்கு வழங்கி, இலங்கைப் படைகளுக்கான பயிற்சி, யுத்தக் கருவிகள் ஆகியவற்றைப் பெறுவதற்கும் கூட்டு இராணுவ ஒத்திகைகளை மேற்கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, கண்ணிவெடி அகற்றும் படைகள் என்ற போர்வையில் அமெரிக்கர்கள் வடக்கு கிழக்கில் வலம்வரவும் ஏற்கெனவே ஒழுங்கு செய்யப்பட்டுவிட்டது.

அமெரிக்காவும், அதன் இலங்கைத் தூதரகமும் புலிகள் பற்றி அடிக்கடி எச்சரிக்கும் தொனியிலான அறிக்கைகளை விடுத்து வருகிறது.

அண்மையில் புலிகள் சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி வருவதாக அவர்களைக் கேவலப்படுத்தும் வகையிலான குறிப்பினை அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையில் வெளியிட்டிருந்தது.

புலிகளும் அமெரிக்காவின் இத்தகைய ஈடுபாட்டையிட்டு விசனித்துள்ளார்கள்.

அண்மையில் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட விஷேச அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் ஆற்றிய உரையொன்றில் தமக்கு மக்கள் ஆதரவு இருக்கும் வரையில் அமெரிக்கா மட்டுமல்ல உலகின் எந்த நாடு வந்தாலும் புலிகளை ஒன்றும் செய்ய இயலாது எனக் கூறியிருந்தார்.

இதற்கிடையே இலங்கை வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்னாண்டோ சென்றவாரம் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

அங்கே அவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷிடம் புலிகளை மடக்க உதவி கேட்டிருந்தார்.

அதேவேளை ரணில் தனது ஐரோப்பிய விஜயத்தின் போது சமாதான முயற்சிகளில் தனது பக்கத்துச் செயற்பாடுகளுக்கு ஆதரவு தேடுவதையே பிரதானமாகக் கொண்டிருந்தார்.

புலிகள் மீதான சர்வதேசத் தடைகள் நீக்கப்படாமலே இலங்கையில் பேச்சுவார்த்தைக்கு அவசியப்பட்ட அளவில் புலித் தடையை மட்டுப்படுத்தப்பட்டவாறு நீக்குவது பற்றிக் கலந்துரையாடியிருந்தார்.

பிருத்தானியாவில் வைத்து பிருத்தானியா மாதிரியைப் பின்பற்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாமெனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இது, ஒற்றையாட்சி முனிறயைத் தொடர்ந்து வலியுறுத்தும், அதற்கு பிருத்தானிய ஆதரவைப் பெறும் சாதுரியமான முயற்சியே.

பிருத்தானியா ஒற்றையாட்சி முறையைக் கொண்ட நாடு என்பதுடன் அங்கு, ஐரிஷ் பிரச்சினைக்கான தீர்வும் ஒற்றையாட்சி முறைக்கு உட்பட்டே வகுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழ்த் தரப்பினர் சமஷ்டி அல்லது சுயாட்சி அமைப்பையே குறைந்த பட்சம் எதிர்பார்க்கிறார்கள். அதைத் தட்டிக் கழிக்கும் ஒரு தந்திரமாகவே இது உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஒற்றையாட்சியையே வலியுறுத்தி வருகிறது.

கடந்த அரசாங்கத்தில் தீர்வுத் திட்டத்துக்கான பேச்சுவார்த்தைகளில், முன்மொழியப்பட்ட சமஷ்டி, அல்லது அதையொத்த ஆட்சி முறையை நிராகரித்து ஒற்றையாட்சியையே ஐ,தே.க வலியுறுத்தியிருந்தது.

இது ஒருபுறமிருக்க, இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன சீனாவுக்கு விஜயம் செய்து சீனப் பாதுகாப்பு அமைச்சருடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றையிட்டுப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன் வாயிலாக இலங்கைக்கு நவீன கடற்படைக் கப்பல்களைப் பெற்றுக் கொள்ளவும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவுக்கு இருதடவை விஜயம் செய்த பிரதமர் பல முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தங்களையும் உடன்பாடுகளையும் மேற்கொண்டுள்ளார்.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்குக் குத்தகைக்கு விடும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய எண்ணெய் விநியோகத்துக்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியப் படைகள் எண்ணெய்க் குதங்களுக்குப் பாதுகாப்பளிக்கும் காரணத்தை முன்னிட்டு திருகோணமலையில் முகாமிட வழிசமைக்கப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்தையிட்டு புலிகள் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள்.

அத்துடன், தென்னிந்தியாவின் தனுஷ்கோடிக்கும் மன்னாருக்கும் இடையில் பாலம் அமைக்கும் திட்டமொன்றை ரணில் தனது முதல் இந்திய விஜயத்தில் முன்மொழிந்து இரண்டாவது விஜயத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

**ரணில் ஒருபுறம் சமாதானத்துக்கான 'பச்சைக்' கொடியை ஏந்திக் கொண்டு, மறுபுறம் வெளிநாட்டு அரசாங்கங்களின் கைகளில் 'சிவப்பு'க் கொடிகளைக் கொடுத்துவிட்டு வருகிறரோ? என்பதே இப்போது எழுந்துள்ள சந்தேகம்.**



ஆனால், தற்போது நிகழ்ந்தேறும் வெளிநாடுகளுடனான உடன்படிக்கைகளைப் பார்க்கும்போது, புலிகளுக்கு ஒரு இறைச்சித் துண்டை வீசிவிட்டு, அத் துண்டுடன் புலிகள் காலம் கழித்துக்கொண்டிருக்கும்போது சுற்றி வளைத்து ஒரு இராஜதந்திர வேலியை அமைத்துவிடுவதே ரணிலின் நோக்கமாகத் தெரிகிறது.

இத் திட்டம் குறித்த பூர்வாங்க அறிக்கையை தயாரிக்க இரு நாட்டுப் பிரதிநிதிகளும் கொண்ட குழுவொன்று அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பாலமமைப்பதானது வெறும் சீமேந்துப் பாலமாக அன்றி இலங்கையில் இந்தியாவின் ஈடுபாட்டை அதிகரிக்கும் உறவுப் பாலமாகவே அமையும்.

இப் பாலம் இலங்கையைப் பற்றிப் பிடிக்கும் இந்தியாவின் கரமாகவே விளங்கும்.

இப்படியான பாலம் அமைக்கப்படுவதுகூட இதன் பாதுகாப்பு, மற்றும் குடிவரவு, குடியகல்வு, வீசா வழங்கல், பொருட்களுக்கான அனுமதி வழங்கல் போன்ற காரணங்களை முன்னிட்டு பல இந்தியத் திணைக்களங்களும், பாதுகாப்புப் படையினரும் வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

முதலில் திருமலையில் எண்ணெய்க் குத ஒப்பந்தம் மூலம் ஒரு பிடியும் அடுத்து மன்னாரில் பாலம் மூலம் இன்னொரு பிடியும் பெற்றுள்ள இந்தியாவிடம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சீமேந்துத் தொழிற்சாலையையும் கையளிப்பது பற்றி ஆலோசிக்கப்படுகிறது.

அதையும் இந்தியா பெற்றுக் கொள்ளுமானால், அங்கும் தனது பாதுகாப்பு படைகளை முகாமிடச் செய்ய வாய்ப்புள்ளது.

அத்துடன் நில்லாது, இந்தியாவுடன் கடற் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் மூலம் புலிகள் கடல் வழியாக இராணுவத் தளபாடங்களைத் தருவிப்பதைத் தடை செய்யவும், புலிகளின் கடல் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும் வழிவகை செய்யக்கூடியதாக இருக்கும்.

மேலும் புலிகளின் கடற் தாக்குதல்களின் போது இந்தியா தலையிடவும், அத் தாக்குதல்களை முறியடிக்கவும் இவ் ஒப்பந்தம் வழிவகுக்க முடியும்.

இவை தவிர இந்தியாவுடன் கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமான பயணிகள் கப்பல் சேவை, இலங்கைக்கான கோதுமை உதவி, இலங்கைக்கான இந்திய நிதியுதவிகள், இலங்கை இந்திய வர்த்தக ஏற்பாடுகள் போன்ற இதர உடன்படிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யுத்த நிறுத்தம் ஏற்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமுன்னரே ரணிலினால் புலிகளை முடக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பாரிய ராஜதந்திர வியூகம் இது.

யுத்த நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டபோது, அப் புரிந்துணர்வு உடன்பாட்டில் புலிகளுக்கே அதிக சாதகங்களெனவும், ரணில் புலிகளின் வலையில் வீழ்ந்துவிட்டாரெனவும் சிங்கள எதிர்த் தரப்புகளால் கூறப்பட்டன.

ஆனால், தற்போது நிகழ்ந்தேறும் வெளிநாடுகளுடனான உடன்படிக்கைகளைப் பார்க்கும் போது, புலிகளுக்கு ஒரு இறைச்சித் துண்டை வீசிவிட்டு, அத் துண்டுடன் புலிகள் காலம் கழித்துக் கொண்டிருக்கும்போது சுற்றி வளைத்து ஒரு இராஜதந்திர வேலியை அமைத்துவிடுவதே ரணிலின் நோக்கமாகத் தெரிகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் புலிகளுக்கு நிறைய விட்டுக்கொடுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது போலவும், புலிகள் யுத்தமின்றியே தமது கட்டுப்பாட்டை வடக்கு கிழக்கில் மேற்கொள்ளக் கூடியது போலவும் ஆரம்பத்தில் தோன்றமளித்தது உண்மையே.

இதில் கிடைத்த ஒரு நம்பிக்கைதான் புலிகளுக்கு இடைக்கால அரசாங்கமொன்றைக் கோரும் எண்ணத்தை ஏற்படுத்தியது.

அத்தோடு யாழ்ப்பாணத்துக்கான ஏ-9 வீதியை அபிவிருத்தி செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியை புலிகள் பயன்படுத்தலாமென்ற ஒரு ஆசைகாட்டும் யுக்தியும் கையாளப்பட்டு புலிகளை அதில் ஈர்த்து விட அரசாங்கத் தரப்பினர் முயற்சித்துள்ளனர்.

இவ்வகையான விடயங்களில் புலிகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்திவிட்டு, ரணில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த ஒப்பந்தங்களை மிகத் துரித கதியில் வெளிநாடுகளுடன் மேற்கொண்டு வருகிறார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்ததுடன் ஆயுதங்களைக் கீழே வைத்த புலிகள் அவற்றை மீளத் தூக்க விடாது தடைசெய்யும் ஏற்பாடுகளாகவே இவ் ஒப்பந்தங்கள் புலப்படுகின்றன.

தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தாண்டி அடுத்த கட்டமான பேச்சுவார்த்தைகளுக்கு காலடி எடுத்து வைப்பதில் தடங்கல்களும் சுணக்கங்களும் தோன்றியுள்ளன.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் இதற்கு அரசாங்கமே முழுக் காரணமெனக் குற்றம் சாட்டியுள்ளார்.

பேச்சுவார்த்தையில் பேச இருந்த விடயங்கள் இப்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

புலிகளின் கோரிக்கையான இடைக்கால நிர்வாகத்தைத் தட்டிக் கழிக்கவும், அல்லது அதில் புலிகள் எதிர்பார்க்கும் அம்சங்கள் சாத்தியமற்றதென ஆக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வெறும் இடைக்கால நிர்வாகத்தைப் பற்றியன்றி அரசியல் தீர்வுக்குரிய விடயங்களையே முதன்மைப் படுத்த வேண்டுமெனக்கூறி புலிகளின் கோரிக்கைகளை முக்கியத்துவம் இழக்கச் செய்யும் வகையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவற்றின் இறுதி வடிவம் எப்படி அமையும் என்பதுடன், அரசாங்கம் அமைத்துவரும் வெளிநாட்டு வியூகத்தைப் புலிகள் எவ்வாறு எடுத்துக் கொள்ளப் போகிறார்கள் என்பதே அடுத்த கட்ட நகர்வை தீர்மானிக்கும். ▫

நரன்

அண்டை மண்டலத்திலிருந்து


கானகன்

# இந்தியாவின் அடுத்த குடியரசுத் தலைவர் ஒரு விஞ்ஞானி

இந்தியாவில் குடியரசுத் தலைவர் பதவியென்பது ஒரு அலங்கார பொம்மைதான். நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போட வேண்டியது, மற்றப்படி புதுடில்லி வரும் பிற நாட்டுத் தலைவர்களுடன் கை குலுக்கிக் கொள்வது, விருந்தளிப்பது, இப்படியாக மக்கள் செலவில் சுகமாகக் காலத்தை ஓட்டுவது, இவையே ஒரு குடியரசுத் தலைவரின் கடமைகளாம் உண்மையான அதிகாரங்கள் எதுவும் இல்லாத அப் பதவிக்கு, இனி தனக்கு எதிர்காலம் இல்லை என்றுணரும் அரசியல்வாதிகளே ஆசைப்படுவர். பரந்துபட்ட அளவில் குடியரசுத் தலைவர் தேர்தலைப் பற்றி எந்த அக்கறையும் இருக்காது.

இன்றோ கடந்த ஒரு வாரமாக மிகப் பரபரப்பாகச் செய்தித்தாள்களிலும், தொலைக்காட்சிகளிலும் விவாதிக்கப்படும் விஷயம் அடுத்த குடியரசுத் தலைவரின் கீழ் இந்தியா எப்படியிருக்கும் என்பதுதான்.

தமிழகத்தைச் சேர்ந்த விண்வெளி விஞ்ஞானி ஏ.பி.ஜே அப்துல் கலாம்தான் அடுத்த குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பது ஏறத்தாழ உறுதியாகிவிட்ட நிலையில் நாடெங்கும் மத்தியதர வர்க்கத்தினரிடையே ஒரு பெரும் பரபரப்பு உருவாகியிருக்கிறது. கழுத்துக்குக் கீழும் முன் நெற்றியிலும் புரளும் சிகையினை சரியாகக்கூட ஒழுங்குபடுத்தாமல், சாதாரணமான கால்சராய் சட்டையில் காணப்படும் 71 வயது கலாமோ, எது நடந்ததோ, அது நல்லதாகவே நடந்தது; எது நடக்கிறதோ; அது நல்லதாகவே நடக்கிறது, எது நடக்குமோ, அது நல்லதாகவே நடக்கும் என்ற பகவத் கீதை வரிகளை மேற்கோள் காட்டிவிட்டு, சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் ஓர் அறையில் பதுங்கிக் கொண்டுவிட்டார். எவருக்கும் பேட்டி கொடுப்பதில்லை. அவரைப் பற்றிப் பல தரப்புகளிலிருந்தும் பல்வேறு விமர்சனங்கள். அவர் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. நேரம் வரட்டும், விரிவாகப் பேசுகிறேன் என்றுதான் கூறுகிறார்.



இடதுசாரிக் கட்சிகள் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றிய கேப்டன் லக்ஷ்மியை தங்கள் வேட்பாளராக அறிவித்திருக்கின்றன.

பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி முன்மொழிந்திருக்கும் அப்துல் கலாமை காங்கிரஸும் ஏற்றுக் கொள்வதாக அறிவித்துவிட்ட பிறகு அவரது வெற்றியைக் குறித்து எந்தவித சந்தேகமும் கிடையாது.

இந் நிலையில் அனைத்து மக்கள் தொடர்பு சாதனங்களும் போட்டி போட்டுக்கொண்டு கலாமின் தொடக்க காலங்களிலிருந்து அக்னி ஏவுகணை வரை அனைத்து நிகழ்வுகளைப் பற்றியும் விலாவாரியாக விவாதிக்கின்றன.

இதற்குமுன் குடியரசுத் தலைவர் தேர்தல் பரபரப்புக்குள்ளானது 1969 ல் தான். காங்கிரஸில் உட்கட்சி மோதல்கள் வெடிக்க, காங்கிரஸ் தலைமை சஞ்சீவ ரெட்டியினை முன்மொழிய, இந்திராகாந்தியோ வி.வி.கிரியை ஆதரிக்க ஒரே அமர்க்களம் அப்போது. இறுதியில் கிரி வென்றார், காங்கிரஸ் பிளவுண்டது, இந்திய அரசியலில் பாரதூரமான மாற்றங்கள் ஏற்பட்டன. அப்படி ஏதும் இப்போது நடக்கப் போவதில்லை.

கலாம் தேர்ந்தெடுக்கப்படுவதன் விளைவாக நாட்டு அரசியல் திசைமாறப் போவதில்லை. ஆனாலுங்கூட மக்கள் கூடுமிடங்களிலெல்லாம் அவரைப் பற்றித்தான் பேச்சு. எதிர்காலத்தில் பல்வேறு சோதனைகள் வரலாம், அவற்றையெல்லாம் சமாளிக்க குடியரசுத் தலைவராயிருப்பவருக்கு அரசியல் சட்டம் தெரிய வேண்டும், கலாமோ முழுநேர அரசியல்வாதியில்லை, முன்னனுபவம் கிடையாது, எனவே அவரை நாங்கள் எதிர்க்கிறோம் என்கிறார்கள் இடதுசாரிகள்.

அவர் அரசியல்வாதியாக இல்லாமல் இருப்பதே மக்களைப் பொறுத்தவரை மிகப் பெரிய சிறப்பம்சமாகப்படுகிறது. இதுவரை வந்து போனவர்களெல்லாம் குடியரசுத் தலைவர் மாளிகையிலிருந்து தேவையில்லாத அரசியல் பண்ணிக்கொண்டிருந்தார்கள், தங்கள் சொந்த வாழ்க்கைகளை மேம்படுத்திக் கொண்டிருந்தார்கள், மாறாக கட்டை பிரம்மச்சாரியான கலாம், தனது வாழ்க்கையினை விஞ்ஞானத்திற்காக, நாட்டுப் பாதுகாப்பிற்காக, மேம்பாட்டிற்காக அர்ப்பணித்துவிட்ட அவர், குடியரசுத் தலைவராவது நாட்டிற்கே பெருமை என்பதே மத்தியதர வர்க்கத்தினரின் புரிதலாக இருக்கிறது.தற்போதைய குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் ஒரு தலித். பொதுவாக கௌரவமாகவே, சிக்கல்களில் மாட்டிக் கொள்ளாமலேயே நடந்து வந்திருக்கிறார். காங்கிரஸும் மற்ற எதிர்க் கட்சிகளும் அவரே மேலும் ஐந்தாண்டு காலம் அப் பதவியில் இருக்க வேண்டும் என விரும்பின.

அவரோ குஜராத் தொடர்பாகவும், தாராள மயமாக்கல் விஷயத்திலும் தனது மனக்கசப்பினை வெளிப்படுத்தியிருக்கிறார். தவிரவும் அவர் ஒரு காங்கிரஸ்காரர். எனவே பாரதீய ஜனதாவினர் அவர் குடியரசுத் தலைவராக நீடிப்பதை விரும்பவில்லை. முன்பு இந்திரா காந்தியின் செயலராக பணியாற்றியவரும் தற்போது மகாராஷ்டிர மாநில ஆளுநருமான அலெக்ஸாண்டரை குடியரசுத் தலைவராக்கிவிடலாம் என்றனர். பாரதீய ஜனதா கட்சியின் மற்ற கூட்டாளிகள், குறிப்பாக தெலுங்கு தேசம் கட்சி, அலெக்ஸாண்டரை ஏற்றுக்கொள்ள மறுக்க, திடீரென்று அப்துல் கலாமை தேர்தலில் நிறுத்த முன்வந்தது அக் கூட்டணி.

விண்வெளி, ஏவுகணை போன்ற துறைகளில் புகழ் பெற்றவர் கலாம். தமிழ்நாட்டில் ராமநாதபுரம் மாவட்டத்தில் பிறந்து, வறுமையான சூழலிலும் தனது படிப்பினைத் தொடர்ந்து உயர் பதவியை எட்டிய கலாமைப் பற்றிய குறிப்பிடத்தக்க அம்சமே அவரது எளிமைதான்.

எவ்வளவோ சாதனைகள் படைத்தும் மிகுந்த தன்னடக்கத்துடன் திகழும் கலாம், தனி மனிதனைவிட நாடு பெரியது என இன்று மாணவர்களுக்குப் போதிப்பதோடு நிறுத்திக்கொள்ளவில்லை. அப்படி ஓர் அணுகுமுறையினை உளமாற ஏற்று, அதன்படி நடப்பவருங்கூட என்று கூறலாம்.

ஆனால், பிரச்சனை என்னவென்றால், ஏவுகணைகளையும், அணு ஆயுதங்களையும் ஆதரிப்பவர் அவர். மேலும் அவர் சங்க பரிவாரத்திற்கு வேண்டியவர். காஞ்சி சங்கராச்சாரியார் கலாமை தனது ஆத்ம நண்பரென்கிறார்.

# மத்திய மாகாண சபை முஸ்லிம் அமைச்சு பறிபோகும் நிலை!

மத்திய மாகாண சபையின் ஆட்சியை யார் கைப்பற்றுவது என்ற அதிகாரப் போட்டி சுமார் ஆறு மாத காலம் நீடித்து ஒருவாறு முடிவுக்கு வந்தது. மத்திய மாகாண சபையில் இருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியைக் கைவிட்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவ தெரிவிக்க முன்வந்ததை அடுத்து சபையின் பெரும்பான்மை பலத்தில் மாற்றம் ஏற்பட்டது. பல மாதங்கள் நீடித்த இழுபறி நிலை, சபையின் ஆட்சிப் பொறுப்பை ஐ.தே.க.விடம் கையளிக்க பொதுஜன ஐக்கிய முன்னணி இணங்கியதோடு முடிவுக்கு வந்தது.

இப்போதைய பிரச்சனை மாகாண சபைக்கான அமைச்சர்களை நியமிப்பதில் எழுந்துள்ளது. அதிலும் குறிப்பாக முஸ்லிம் அமைச்சர் ஒருவரை நியமிப்பதில் பலத்த முறுகல் நிலை தோன்றியிருக்கிறது.

மாகாண சபை உருவாக்கப்பட்டதன் பின்னர் கடந்த ஒன்றரை தசாப்த காலமாகவே மத்திய மாகாண சபையில் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் இருந்து வருவது வழக்கம். மாகாண சபையின் ஆட்சிப் பொறுப்பு இரண்டு பிரதான கட்சிகளில் எந்தக் கட்சியிடமிருந்தாலும் அந்தக் கட்சிகள் ஒரு முஸ்லிம் உறுப்பினரை அமைச்சராக நியமித்திருந்தன. ஆனால், இன்று மத்திய மாகாண சபையில் முஸ்லிம் விவகாரங்களைக் கவனிக்க அமைச்சர் ஒருவர்இல்லை. இதனால் மகாண சபை மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட பணிகள் மாதக் கணக்கில் தேங்கிக் கிடக்கின்றன.

இம்முறை முஸ்லிம் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படவில்லை என்பதை விட அதற்குக் கூறப்படும் காரணம்தான் மிகவும் கவலைக்குரியதாக உள்ளது.

மத்திய மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் இரண்டு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே நிலவும் இழுபறிதான் மாகாண சபைக்கு முஸ்லிம் அமைச்சர் ஒருவரை நியமிக்கத் தடையாக இருக்கின்றது.

மத்திய மாகாணத்திலிருந்து பாராளுமன்றம் சென்று அமைச்சராக உள்ள மூத்த ஐ.தே.க உறுப்பினர் ஒருவரும், மறைந்த ஏ.சி.எஸ் ஹமீதின் வாரிசாக அரசியலுக்கு வந்த ஒருவரும் இவ் விடயத்தில் தங்கள் செல்வாக்குகளைப் பயன்படுத்தி மோதி வருகின்றனர். அக்குரணை பகுதியைச் சேர்ந்த ஒருவரை நியமிக்க வேண்டும் என்று ஒரு தரப்பும், வேறொரு ஊரைச் சேர்ந்த ஒருவரை நியமிக்க வேண்டும் என முஸ்லிம் அமைச்சரின் தரப்பும் வாதிட்டு வருகின்றன. இரண்டு பிரிவினரும் இது விடயம் குறித்து பிரதமரிடம் முறையிட்டுள்ளதாகத் தெரிகிறது.

தத்தமது ஆதரவாளர்களை நியமிக்க மத்திய அரசாங்கத்தில் தமக்கிருக்கும் செல்வாக்கைப் பிரயோகித்து இந்த இருவரும் நடத்தும் பனிப்போரால் மத்திய மாகாணத்தில் வாழும் இரண்டரை இலட்சம் முஸ்லிம்களின் பலதரப்பட்ட பணிகள் கவனிப்பாரற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இந்த இழுபறியினால் மாகாண சபையின் முஸ்லிம் கலாசார அமைச்சுப் பணி ஏற்கனவே மாகாண முதலமைச்சரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கிடையேயான கௌரவப் பிரச்சனையைக் கைவிட்டு யாரேனும் ஒருவரை அமைச்சுப் பதவிக்கு நியமிக்க உடன்பாடு காணாது போனால் அடுத்து வரும் நாட்களில் முஸ்லிம் கலாசார அமைச்சராக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

மாகாண சபையின் செயற்பாட்டில் மத்திய அரசாங்கத்தின் பிராந்திய அமைச்சர்கள் தேவையின்றி மூக்கை நுழைப்பது அடிப்படையில் தவறான விடயம் என்பது ஒரு புறமிருக்க ஏற்கனவே இருந்து வந்த ஒரு அமைச்சுப் பதவியை ஒருவருக்கும் கிடைக்க விடாமல் தடுத்து வைத்திருப்பது முஸ்லிம்களுக்குச் செய்யும் துரோகம் அல்லாமல் வேறென்ன?

புதிதாக ஒன்றைப் பெறத்தான் எமது தலைவர்களுக்குத் திராணி இல்லையென்றால் கைவசம் இருக்கும் பதவிக்கு ஒருவரை நியமிக்கக் கூடவா அறிவில்லாமல் இருக்கிறார்கள்!

> தத்தமது ஆதரவாளர்களை நியமிக்க மத்திய அரசாங்கத்தில் தமக்கிருக்கும் செல்வாக்கைப் பிரயோகித்து இந்த இருவரும் நடத்தும் பனிப்போரால் மத்திய மாகாணத்தில் வாழும் இரண்டரை இலட்சம் முஸ்லிம்களின் பலதரப்பட்ட பணிகள் கவனிப்பாரற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

**EYE VIDEO**

DVD,VCD, Audio CD, Softwares & Mp3
மொத்தமாகவோ சில்லறையாகவோ
VCD, Audio CD
Recording & VHS To
CD Converting

No. M-11, Saunders Place,
Colombo-12, Tel: 01-387575

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |
| உள்ளூர் | ரூ. 850 | ரூ.450 | ரூ.250 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.


## லண்டன், பாரிஸ் இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும்
*இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்*

**டாக்டர் ஆர்.தியாகராஜன் DHMS,AMRSH (LON.).**

26.06.2002 முதல் லண்டன் பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார்.

மாறி மாறி வரும் ஆஸ்த்துமா (Asthuma), சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes), எக்ஸிமா (Eczema), மலட்டுத்தன்மை-பேறின்மை (Sterrility), ஆண்மைக் குறைபாடுகள் (Impotency), போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும்.

ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற்கொண்டு மனம், மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்றுநோக்கி ஒரு முழுமையான சிகிச்சையை பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

**முன்கூட்டிய பதிவுக்கு**

லண்டன் தொலைபேசி: 07984803488 / 07833341693
**email: homoeocare @ rediffmail. com**
தொடர்பு: 0091-9843051099 (இந்தியா) 0094-77602513 (இலங்கை)
பாரிஸ் விஜயம் 26.06.2002 முதல் 28.06.2002 வரை
பாரிஸ் தொலைபேசி: 0664099198, 0610225386, 0611401882
இலங்கை விஜயம் 20.06.2002 முதல் 24.06.2002 வரை

**The finest place for ladies complete beauty care**

திருமதி பிரேமா ஜெகன்
Mrs. Prema Jegan
*(Diploma in Beauty Culture India)*

- Eyebrow threading
- Bleach
- Facials (Herbal)
- Waxing
- Pedicure
- Manicure
- Bridal make up
- Mehindi
- Hair do
- Modern hair cuts & Style
- Perming
- Henna treatment
- Hair dye
- Anti dandruff skull massage

No.31A. Mary's Road. Colombo-4.
Phone: 595536,504989.
**10am to 6pm.**

*திருமண ஒழுங்குகள் யாவும் செய்து தரப்படும்*
*வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்கும், திருமண வைபவங்களுக்கும் மாத அடிப்படையில் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.*

## சிங்கப்பூரில் தங்குமிடவசதி

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.


விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, # 15-14 International Plaza, Singapore 079903
எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி எண்:
**அப்பு: 0065-975 14 941**
e-mail: lingam_wedding@hotmail.com


## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் .. 12 05 1930



ஆண்டவன் அடியில் .. 20 06 2001

**தம்பையா ஆறுமுகம்**

கைதடி கிழக்கு, கைதடி.

அன்பும் பண்பும் பாசமும் நிறைந்த பாசமிகு
பிதாவாகவும் எல்லோரினதும் அன்பிற்குப்
பாத்திரமாகவும், எமது குடும்ப ஒளிவிளக்காய்
பிரகாசித்து காலமெல்லாம் கண்ணயராது உழைத்து
எங்களை வளர்த்தெடுத்த அன்புத் தெய்வமே!
ஓராண்டு அல்ல, எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சம் உங்களைவிட்டு அகலாது
உங்கள் நினைவுகளுடன் வாழும்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
**தகவல்: ஆ. பூபாலசிங்கம் (மகன்), லண்டன்.**


சிற்பம் ஒன்று உங்கள்
முகத்தில் இருக்கும்
எங்கள் அழகுக்கலை அதை
மெல்ல மெல்ல எழுப்பும்



**Gayee Herbal** Beauty Care

- Bridal Dressing (Hindu,Buddhist,Christian,Muslim)
- Facial (Herbal, bleach with Facial, Aroma, 22k Gold Facial)
- Hair style & Beauty Culture Classes
- Cakes & Structure for order & Classes
- Boquet Making for order & Classes

மணப்பெண்ணிற்கு Facial, சடைநாகம்
Artificial Boquet இலவசமாக செய்து தரப்படும்.

**சிறப்புச் சலுகை**

5-7-2002க்கு முன்னர் பதிவு செய்யும் முதல் 15 மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.

No.16, Silva Lane,
Bambalapitiya, colombo-4.
Tel: 597367, 074-512804 Mobile: 071-200084.

## வெளிநாட்டு, உள்நாட்டு விமானப் பயணச் சீட்டுக்களுக்கு


குறைந்த கட்டணத்தில் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா போன்ற வெளிநாடுகளுக்கான விமான ஆசனப் பதிவுகளையும், உள்ளூர் விமான ஆசனப் பதிவுகளையும் விரும்பிய நேரத்தில் ஒழுங்குசெய்துகொள்ள நாடுங்கள்.

Travel Agent & Tour Operators



**WORLDWAYS**
Travels Holidays (PVT) LTD.
No:32, First Floor.R.A.De Mel Mawatha,
(Duplication Road) Colombo-4.
Tel: 075-344855, 075-367643, 075-367653. Fax:075-344899.
Email: worldways@zeynet.com

## நவசித்தர் மாந்திரீகம்



ஆவிகளின் தொல்லை, எதிரி தொல்லை, கிரக தோஷங்கள் விரும்பியவரை வசப்படுத்த, வேண்டாதவரை விலக்க, கல்வி, தொழில் முன்னேற்றமடைய, வீடு, வளவு காவல்செய்ய, குடும்பப் பிரச்சனை தீர, திருமணத்தடை, மனக்கவலை, காதலன் காதலி பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் நடைபெற இன்னும் அநேக பிரச்சனைகளுக்கு சித்தர்கள் கையாண்ட மாந்திரீகத்தின் மூலம் நிவர்த்தி செய்வதோடு, வாதம், பித்தப் பைத்தியம், சுவாதம் பார்வைக் குறைவு, முடியுதிர்தல் போன்ற நோய்களுக்கும் வைத்தியம் செய்யப்படும். மட்டக்களப்பு பரம்பரை சித்த, ஆயுள்வேத, மாந்திரீக மருத்துவர்,

Dr. P. T. M. PILLAI (S.A.M.P)
YOHANANTHA VAITHIYASALAI, 118/B MAIN STREET,
PANDIRUPPU-01, KALMUNAI, SRILANKA.

## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

* அஸ்மா * வீசிங் * தொய்வு * இழுப்பு * இளைப்பு * மாய்ச்சல் * மூச்சுத்தட்டல் * மூச்சடைப்பு * நெஞ்சுச் சளி * மண்டைச் சளி * கக்குவான் இருமல் * சாதாரண இருமல் * தடிமன் * மூக்கால் நீர்வடிதல் * மூக்கடைப்பு * நாசி அரிப்பு * மூக்கரிப்பு * மூக்கினுள் சவ்வு வளர்தல் * தும்மல் * கண்கடி * கண்ணரிப்பு * தலைவலி * பீனிசம்

போன்ற குணங்களுக்கு காஸ், பம், சேலைன் என்று பாவித்தும் சுகம் கிடையாத பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் நாட்டின் பல பாகங்களில் இருந்து வந்து உடலுக்குப் பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகள் மூலம் முழுக் குணமடைந்து செல்கிறார்கள். கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல், குளித்தல் போன்ற பல ஆலோசனைகளுடன் (அவரவர் தாய்மொழிகளில்) சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**ஒருமுறை வைத்தியம் செய்துபாருங்கள் பலன் தெரியும்**

**டாக்டர் சுறாஜ் சோமசுந்தரம்** (அஸ்மா சிகிச்சை நிபுணர்)
PHDH(Ind)... M.B.B.SCH(Cey) Govt Reg No: A 1553 (1970)
25, சில்வெஸ்டர் வீதி, கல்கிஸை, மவுண்ட்லெவினியா-(கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஒடியன் தியேட்டர்)

**☎ 074-201582**

பழைய நோயாளர்களும், முன் அனுமதிபெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4.00 மணி முதல் 7.00 மணிவரையும், செவ்வாய், வியாழன், சனிக்கிழமை நாட்களில் காலையில் 9.00 மணி முதல் 12.00 மணி வரையும் சிகிச்சை பெறலாம். புதிதாக வரும் நோயாளர்கள் மேற்கூறிய நாட்களிலும், நேரங்களிலும் தொலைபேசி இலக்கம் 074-201582 மூலம் தொடர்பு கொண்டு உங்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன் அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.

**DRESS WELL** Beauty Parlor

- BRIDAL DRESSING for Hindu,Christian, Buddhist & Muslim weddings.
- Facial,Eyebrow plucking,Waxing etc...
- Wedding Saree blouse,Cake making etc...
- Holding Individual & Group classes.

FEEL THE CHALLENGING VERSION OF NATURE

**Tailors தேவை !!**

Saree,Blouse,Under skirt,Indian shalvar என்பன
நேர்த்தியாகவும் கச்சிதமாகவும் தைக்கக் கூடிய பெண்கள் உடனடியாகத் தேவை!
சிறந்த ஊதியமும் வழங்கப்படும்!
தொடர்புகளுக்கு : 01-504726 072-823530

1/3, PERAKUMBA PLACE,
(Off Peterson Lane),COLOMBO-06
Tel : 504726 072 - 823530

## மலையாள மாந்திரிக வசியம்




உங்கள் வாழ்க்கையில் தொடர்ந்தும் தோல்வியா? நிம்மதியில்லையா? உங்கள் ஆசைகள் நிறைவேறவில்லையா? இதோ உங்களுக்கு ரிஷிகள் கையாண்ட மாபெரும் மலையாள மாந்திரிக சக்தி கவசம் என் கையில் உண்டு. கணவன்,மனைவி பிணக்குத் தீர்ந்து சுகபோக வாழ்வு பெற, பிரிந்த காதல் ஒன்று சேர, காதல் கைகூட, தீரா நோய் தீர, குழந்தைப் பாக்கியம் கிட்ட, திருமணம் நடக்க, கல்வியில் பெறுபேறு கிட்ட, குபேர வாழ்வு பெற, அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகக் கணிப்பு என்றுமே பிழைத்ததில்லை. நடப்பது, நடக்கப்போவது, நடக்க இருப்பது, இன்று,இந்த மாதம், இந்த வருடம் உங்களுக்கு எப்படி எனத் தெரிந்து அறிந்து செயல்பட ஜாதக ரீதியாகவும், கைரேகை ரீதியாகவும், காண்ட அடிப்படையிலும் அன்றன்றாட நிகழ்வுக்குத் தக்கவாறு அனுசரித்துச் செயற்பட மலையாள மாந்திரிக சித்தர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N) J.P அவர்களைச் சந்தியுங்கள். வெளிநாட்டவர்களுக்கு விஷேச சலுகை உண்டு. மாந்திரிக சக்திக்குப் பெருமிதம் எமது 39 வருட சேவையே! இவ்வரிசையில் நாம் ஒருவரே!

**இனி என்னைப் பற்றி**

அன்றன்றாடு அருள் சக்தி வழங்கிவரும் அம்மன் துர்க்கையின் அருள் அவ்வப்போது எனக்குக் கிடைக்கின்றது. இவைகளை ஒட்டியே இந்தச் சோதிட மலையாள மாந்திரிக நிறுவனம் ஒரு மாபெரும் P.K.SAMY ASSOCIATE (PVT) LTD வரையறுக்கப்பட்ட நிறுவனமாகச் செயல்படுகின்றது. இதையொட்டியே வாங்கும் பணத்திற்கு ரசீது வழங்குகின்றோம்.

* அதி விசேஷமாக வெளிநாட்டவர்களுக்கு ஏனோதானோ என்றில்லாது அவர்களின் எண்ணங்களை எண்ணியவாறு செயல்திறனைக் காட்டியதனாலேயே அவர்களின் ஆயிரக்கணக்கான ஆசீர்வாதக் கடிதங்கள் என்னிடம் இருக்கின்றன.

* உண்மைச் சேவை என்பதால் எனக்குப் பேராசிரியர் பட்டம் தந்தார்கள். கலாநிதி பட்டம் கிடைத்தது. அகில இலங்கை சமாதான நீதவானாக நியமித்தார்கள். கருணாகர பூசணம் பட்டம் கிடைத்தது. பங்களாதேசத்தில் சோதிட ஆராய்ச்சித்துறையில் என்னை அங்கத்தவராகச் சேர்த்துக்கொண்டார்கள். இன்னும் எத்தனை எத்தனையோ பட்டங்கள். இதற்குக் காரணம் எனது உண்மையான, மனச்சாட்சிக்கு விரோதமற்ற சேவையே! இனி உங்கள் குறை என்ன?



**இத்துறையில் விசா, மாஸ்டர் கார்ட் வசதி மற்றும் இன்ரர்நெட், வெப் சைட், ஈ மெயில், ஃபக்ஸ் வசதிகள் எம்மிடம் மாத்திரமே உண்டு.**

இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை. நுவரெலியாவில் மாத்திரமே கிளைக் காரியாலயம் உண்டு.

**கொழும்பில்**
162, கொட்டாஞ்சேனை வீதி,
மேபீல்ட் வீதி
(லிட்டில் ஃப்ளவர் பாலர் பாடசாலைக்கு முன்),
கொழும்பு-13.
தொலைபேசி: 466271, 466571, 342463, 466620, 431137, 466820
தொலைநகல்: 00941-344831

**நுவரெலியாவில்**
33, டெய்லி ஃபெயார் கொம்பிளெக்ஸ்,
கண்டி வீதி, நுவரெலியா.
தொலைபேசி: 052-22508, 35097, 23093, 23336, 23570
தொலைநகல்: 00945-235097
ஈ.மெயில்: drpksamy@sltnet.lk
வெப் சைட்: www.imexpolanka.com/drsami

# அலசுவது-இராஜதந்திரி

# இனப்பிரச்சனைத் தீர்வில் இந்தியாவின் செல்வாக்கு



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பரிவாரம் சகிதம் கடந்த வாரம் இந்தியாவுக்கு ஒரு விரிவான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

பிரதம மந்திரியாகப் பதவியேற்று ஆறு மாத காலத்திற்குள் அவரின் இந்தியாவுக்கான இரண்டாவது பயணம் இதுவாகும்.

இவ் இந்திய விஜயத்திற்கு முன்பாக பிரிட்டன் உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கும் ரணில் பயணஞ்செய்திருந்தார்.

இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு அடித்தளமிடும் விதத்தில் புலிகளின் தலைவருக்கும், பிரதமர் ரணிலுக்குமிடையே கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்படிக்கை நூறு நாட்களைக் கடந்துள்ளது.

அடுத்த கட்ட நடவடிக்கையாக அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது பற்றியே தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னர்கூட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் சென்று தாம் மேற்கொள்ளவுள்ள தீர்வு முயற்சிகள் பற்றி விளக்கியிருந்தார்.

தற்போது இரண்டாவது தடவையாகவும் புதுடில்லிக்கு மட்டுமல்ல, சென்னைக்கும் சென்று முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராமுக்கும் தனது தீர்வு முயற்சிகள் தொடர்பாக விளக்கிக் கூறியிருந்தார்.

இந்தியாவுக்கு ஆறு மாத காலத்தில் இரண்டாவது தடவையாகவும் விஜயம் செய்திருப்பதன் மூலம் ஏறத்தாள முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் பாணியிலான இந்திய உறவைப் பேணுவதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆர்வம் காட்டுவதையே அவதானிக்க முடிகின்றது.

புவியின் வடமுனையில் இருக்கும் நோர்வே, இலங்கைப் பிரச்சனையில் ஓர் அனுசரணையாளராக இருக்கலாம். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை இந்தியா ஒரு முக்கிய சக்தியாகவே இருக்கின்றது.

மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன கூட மேற்கத்தேய உறவைப் பேணுவதில் அதிக அக்கறை காட்டிய போதிலும், இந்தியாவைப் பெரிதும் அனுசரித்துச் சென்றிருந்தார்.

இதன் காரணமாகவே இனப்பிரச்சனைத் தீர்வு குறித்து முதலில் பூட்டானின் திம்பு நகரில் இந்தியாவின் ஆதரவோடு பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. பின்னர், இந்தியாவின் அனுசரணையுடனேயே இலங்கை-இந்திய ஒப்பந்தமும் 1987ம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

எனவே, ஏறத்தாள ஜே.ஆரின் பாணியைத் தழுவியதாகவே பிரதமர் ரணிலும் இந்திய உறவைப் பேணி வருவதை அவதானிக்க முடிகிறது.

இத் தடவை, பிரதமர் ரணில் மேற்கொண்ட இந்திய விஜயம், திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்க வகை செய்வதாகவும் அமைந்திருந்தது.

இரண்டாம் உலக யுத்த காலத்தில் பிரிட்டிஷாரால் நிர்மாணிக்கப்பட்டவையே இப்பாரிய எண்ணெய்க் குதங்கள் ஆகும்.

யுத்த காலத் தேவைகளின் பொருட்டே இந்த எண்ணெய்க் குதங்கள் பிரித்தானியரால் அமைக்கப்பட்டன.

இலங்கையில் எண்ணெய் வளம் இல்லாதிருந்திருக்கலாம்.

எரிபொருளைச் சேமித்து வைப்பதில் திருமலை எண்ணெய்க் குதங்கள் தென்னாசியாவிலேயே குறிப்பிடத் தக்கவையாக இருக்கின்றன.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஐரோப்பாவில் ஜேர்மனி அச்சுறுத்தலாக இருந்தது. ஆனால், கீழைத்தேசத்தில் ஜப்பான் நேசநாட்டுப் படைகளுக்குச் சிம்மசொப்பனமாகவிருந்தது.

கிழக்கில் ஜப்பானிடமிருந்து வரக்கூடிய பயமுறுத்தல்களை முறியடிப்பதற்கான ஒரு கேந்திர மையமாக இலங்கையை பிரிட்டிஷார் பயன்படுத்தினர்.

திருகோணமலை கடற்படைத் துறை முகம் பிரிட்டிஷாராலேயே அமைக்கப்பட்டது. அத்துடன் சீனன்குடா விமானப் படைத்தளமும் பிரிட்டிஷாரால் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

திருகோணமலையின் இயற்கைத் துறைமுகம் பிரிட்டிஷ் கடைப்படைக் கப்பல்களுக்கு ஒரு வரப்பிர சாதமாகவே அமைந்திருந்தது. இங்கு வருகின்ற கப்பல்கள் மற்றும் சீனன்குடா விமானப்படைத்தள விமானங்களின் தேவைகளின் பொருட்டு உருவாக்கப்பட்டவையே திருமலை எண்ணெய்க் குதங்களாகும்.

பிரிட்டிஷார் இலங்கையிலிருந்து வெளியேறியதும் திருமலை எண்ணெய்க் குதங்கள் கேட்பாரற்ற வையாகின. இந்த எண்ணெய்க் குதங்களை உரிய விதத்தில் இராணுவ, அரசியல் நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் பொருளாதார நோக்கத்தோடு இலங்கை பயன்படுத்தியிருக்குமேயானால் பெருமளவு வருவாயைக் கடந்த காலங்களில் பெற்றிருக்க முடியும்.

ஆனால், இலங்கையின் ஆட்சியாளர்கள் எப்போதுமே தம்மைக் குறுகிய அரசியல் கண்ணோட்டங்களுக்குள் வைத்திருந்த நிலையில் திருமலை எண்ணெய்க் குதங்களின் பயன்பாட்டைத் தகுந்த விதத்தில் பெற்றுக்கொள்ள முடியாமல் போயிருந்தது.

மேற்கத்தேய வல்லரசுகள் குறிப்பாக அமெரிக்கா திருகோணமலைத் துறைமுகம், அதை அண்டிய எண்ணெய்க் குதங்கள் என்பவற்றின் மீது ஒரு கண் வைத்திருந்தது.

ஆனால், அமெரிக்கா வசம் திருகோணமலைத் துறைமுகமும், எண்ணெய்க் குதங்களும் போய்ச் சேருமானால் பிராந்திய ரீதியாகத் தனது ஆளுமைக்குச் சவால் ஏற்பட்டுவிடும் என்ற எண்ணம் இந்தியாவுக்கு இருந்து வந்தது.

இதன் காரணமாகவே தற்போது இலங்கையிலும், பிராந்திய ரீதியாகவும் நிலவுகின்ற அரசியல் நிலைவரத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இந்தியா திருகோணமலை எண்ணெய்க் குதங்களைத் தனது பாவனைக்காக இலங்கையிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளது.

இந்தியா மட்டுமல்ல, அண்மைக் காலங்களில் அமெரிக்காவும் இலங்கையின் கடல், ஆகாய வலயங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் என்பவற்றில் ஆர்வம் காட்டி வருகின்றது.

கிழக்கிலங்கையின் நடுப் பகுதியிலிருக்கும் திருகோணமலையுடனான இந்தியத் தொடர்பு, புராண காலத் தொடர்புடையது.

பல்லவர் காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரால் பாடல் பெற்ற தலத்தைக்கொண்டதாகவும் திருகோணமலை விளங்குகின்றது.

பின்னர் சோழர் காலத்தில் கிழக்கிலங்கை படையெடுப்புக்களுக்குள்ளாகி சோழ சாம்ராஜ்ஜியத்தின் ஆளுமை திருகோணமலை, பொலன்னறுவை போன்ற பிரதேசங்கள் வரை பர வியிருந்தது. இதற்கான வரலாற்றுச் சான்றுகள் இன்றுங்கூட இருந்து வருகின்றன.

எனவே, வரலாற்று ரீதியாக இந்தியாவுக்கும், திருகோணமலைக்குமிடையே நீண்ட காலத் தொடர்புகள் இருந்து வருகின்றன.

இந்தியாவின் ஒரு மாநில முதலமைச்சரே புதுடில்லிக்கு அடிக்கடி சென்றுவரும் ஒரு நிலை காணப்படாத நிலையில் திரு.ரணில் விக்கிரமசிங்க பிரதம மந்திரியாகப் பதவியேற்று ஆறு மாத காலத்திற்குள் இரு தடவைகள் இந்தியாவுக்குப் பயணம் செய்திருந்தார். இதன் மூலம் இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியா செலுத்தி வரும் செல்வாக்கு எத்தகையது என்பதை நன்கு எடைபோட முடியும்.

இலங்கையின் பிரதான பிரச்சனையாக இருந்து வரும் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டிய நேரத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கும், வெளிவிவகார அமைச்சர் அமெரிக்காவுக்கும், பாதுகாப்பு அமைச்சர் சீனாவுக்கும் கடந்த வாரம் பயணமாகியிருந்தனர்.

பாதுகாப்பமைச்சரின் சீன விஜயம் கடற்படைக் கப்பல்கள் கொள்வனவுபற்றி ஆராய்வதாக அமைந்திருந்தது.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் விதத்தில் இலங்கை அரசும், புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்து யுத்த நிறுத்தத்தையும் மேற்கொண்டு வருகின்றன.

இந்த யுத்த நிறுத்தத்தின் மூலம் கடந்த ஆறு மாத காலத்தில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் துப்பாக்கிகளின் ஒசைகள் குறைந்திருக்கின்றன.

ஆயினும், இலங்கை விவகாரத்தில் அக்கறை கொண்ட வெளிநாடுகளுடன் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இத் தருணத்தில் இலங்கையின் ஆட்சியாளர்கள் வெளிப்படுத்தி வரும் உறவுகள் தப்பெண்ணங்களுக்கும் சந்தேகங்களுக்கும் இடமளிப்பதாக இருக்கின்றன.

இந் நிலையில் நோர்வே இனப்பிரச்சனைத் தீர்வுக்கான பேச்சுக்களில் ஓர் அனுசரணையாளராக இருக்கும் தருணத்தில், வேறு வெளிச் சக்திகளையும் இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிட அனுமதிப்பதன் மூலம் பிரச்சனைகளை மேலும் சிக்கலானதாக மாற்றிவிட முடியும்.

ஏனெனில், இலங்கையின் இனப்பிரச்சனை சம்பந்தப்பட்ட விடயங்களில் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் பார்வை வேறுபட்ட கோணங்களையுடையதாகவே இருக்கின்றது.

இதுவரை காலமும் இலங்கைக்கான இந்திய ஸ்தானிகராகவிருந்த மகாத்மா காந்தியின் பேரர் கோபால் கிருஷ்ணா காந்தியை நோர்வேக்கான புதிய தூதுவராக இந்தியா அனுப்பிவைக்கவிருக்கின்றது.

இதன்மூலம் இந்தியா கூடத் தனது காய்களை வெகு கூர்மையாக நகர்த்திச் செல்வதையே அவதானிக்க முடிகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



**புலிகளை** வழிக்குக் கொண்டு வரச்சொல்லி அமெரிக்க ஜனாதிபதி யிட்டப் போய் முறையிட்டிருக்கிறார் எங்கட வெளிநாட்டமைச்சர். மற்றப் பக்கத்தால பாதுகாப்பு அமைச்சர் கிளம்பிப்போய் சீனாவிட்ட ஆயுத உதவி கேட்டிருக்கிறார். இதுக்கு நடுவில பிரதமர் இந்தியாவிட்ட திருகோணமலை எண்ணைக் குதங்களக் குத்தகைக்குக் குடுத்து ஒருபக்கத்தால இந்தியா தலையிட வழிசெய்துகொண்டு மற்றப் பக்கத்தால அமெரிக்காவோட பாதுகாப்பெண்டு சொல்லாத ஒரு பாதுகாப் பொப்பந்தத்தைக் கொண்டு வாறார். "சமாதானத்துக்கான" மெத்தப் பெரிய ஏற்பாடெல்லாம் கட கடவெண்டு நடந்துகொண்டு போகுது, எங்கபோய் முடியப்போகுதோ....? எங்கட தலையில பொறியாமலிருந்தால் சரி!


**தாங்கள் ஏதோ** தமிழரைக் காக்க ஒற்றுமைப் பட்டிட்டமெண்டு தம்பட்டமடிக்கிற இந்தக் கூட்டமைப்புக்காரர் தங்களுக்க ஒரு பதவிய ஈய ஏலாமல் தள்ளாத வயசில இருந்த அந்தாளக் கொண்டந்து இருத்திச்சினம். இப்ப அவரும் போயிட்டாரெண்டவுடன பிச்சுப் புடுங்குப்படுகினம். இதுக்க வேடிக்கை என்னெண்டால் கூட்டணிப் பழுத்த மனிசரே தங்களுக்க அடிபுடி. தாங்கள் மக்களுக்குத் துரோகம் இழைக்காமலிருக்க வேணுமெண்டால் யாழ்ப்பாண்த்தாரக் கதிரையில இருத்த வேணுமெண்டு சத்தம் போடுறார் சங்கரியார். அதெல்லாம் பேச்சில்லை, யாரப் போடுறதெண்டது தனக்குத் தெரியும், வன்னியில ஓடர் வாங்கியாச்சு, ஒருத்தரும் அறிக்கை விடக்கூடாதுதெண்டு சம்பந்தனார் இங்கால. மிரட்டல் எங்க போகுதெண்டு பாருங்கோ. ம்.... எல்லாம் பதவியாசை படுத்திற பாடு!

**டீசல் விலையேத்தியாச்செண்டவுடன** மினிபஸ்காரர் ஸ்ரைக்கெண்டு குதிக்கினம். ஆனால் அவை அதில பயணம் செய்யிற மக்கள மனிசராவா நடத்தினம்? தங்கட வயித்தில அடிக்கக் கூடாதெண்டு நினைக் கிறவை பயணிகளின்ர முதுகுத் தண்ட முறிக்கலாமோ? காசக் குடுத்து பஸ்ஸில ஏறிறவனக் கனிவா நடத்தினமே? தெருவில போறவனையுமெல்லோ இவை எறும்பா நினைக்கினம். போன கிழமை நுகேகொடயில கிழவிய பஸ்ஸால அடிச்சு நிப்பாட்டாமல் ஏறி நசிச்சுக்கொண்டு ஓடின ஈவிரக்கமற்ற மனத்தில சேவை நோக்கம் எங்க கிடக்கு? கட்டணத்தைக் கூட்ட நினைக்கிற அதேவேளை கண்ணியத்தையும் காப்பாற்ற நினைக்க வேணுமெல்லே?

**ரெண்டு மணத்தியாலத்தில** பாஸ்போட் குடுக்கிறதுக்கு அரசாங்கம் செய்த ஏற்பாட்ட நிச்சயமாப் பாராட்டத்தான் வேணும். இதுபோல இன்னும் இரெண்டொரு விஷயங்களச் செய்துதந்தால் சனம் வாயாற வாழ்த்தும். இந்த ஐடென்டிக்காட்டையும் இப்படி இம்மீடியட்டா குடுக்கச் செய்யுங்கோ. அதுபோல பேர்த் சேர்ட்டிபிக்கெட்டையும் ஒருநாளில எடுக்க வழி செய்யுங்கோ. பென்சன் எடுக்கிறதுக்கு முந்திச் சனத்துக்குச் சீவன் போயிடுது. வயசு போனவை, புருஷன இழந்தவைதான் பென்ஷனுக்குப் போயினம். அவையால அலைக்கழிய ஏலாதுபாருங்கோ. இதுகளையும் கவனிக்கவேணுமெண்டு சுட்டிக்காட்டிக்கொண்டு பாஸ்போட்டுக்கு மீண்டும் ஒரு வாழ்த்து. சபாஷ்.!


**சக்தி வாய்ந்த** ரீவி ஒண்டு சமாதானம் வந்திட்டுதெண்டு கண்டு தன்ர கரங்கள யாழ்ப்பாணத்துக்கயும் நீட்டக் கனவு கண்டதுண்டு. அந்தக் கனவைக் கனவாயே நினைச்சுக் கொண்டிராமல் பிரதமர் யாழ்ப்பாணம் போன நேரத்தில மேடையில வைச்சுப் பகிரங்கமாவே அறிவிச்சதும் உண்டு. ஆனால் பாவம், அவை அதிகமா எடைபோட்டிட்டினம். அதை அனுமதிக்க முடியாதெண்டு வன்னியில மறுத்துப் போட்டினமாம். சமாதானத்தில வியாபாரங்களப் பெருக்க நினைக்கிறது தப்பில்லைதான். சமாதானத்தையே வியாபாரமாக்க நினைக் கிறதுதான் தப்பு. சமாதானமோ வியாபாரமோ, எல்லாம் 'அவன்' கையில்!

**பல்கலைக் கழக** மாணவர்கள் நாளைக்கு சமூகத்துக்கு வழிகாட்டிகளா வரப்போறவை. கிட்டடியில யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில ஒரு சாதாரண ஒன்றுகூடலிலையே மாணவர்கள் ரெண்டு பட்டுச் சண்டை பிடிச்சு தங்கடதும், எதிர்கால மாணவர்களதும் சொத்துக்கள் எண்டே பாக் காமல் சாதனங்கள அடிச்சு உடைக்கிற சண்டித்தனத்தக் காட்டியிருக்கின மெண்டது மெத்தத் தலைகுனிவுங்கோ. இத்தனை பிரச்சனைக்கையும் அரசாங்கமே யாழ். பல்கலைக் கழகத்தை அதிகம் மூடினதில்லை. ஏதோ ஒருமுறை மூடின நேரத்தில எவ்வளவு முனைப்பா நிண்டு திறக்கக் கேட்டவை, இப்ப தாங்களே தங்களுக்க அடிபட்டு மூட வைச்சத முட்டாள்தனமெண்டு சொல்லாமல் என்னெண்டு சொல்ல? இனியாவது தி... ந்....வும்!




**சா**தாரண பார்வையில் மனித முகமாகத் தெரியும் இந்த முகம் பல ஜீவராசிகளை ஒன்று குவித்து வடிவமைக்கப் பட்டிருக்கிறது. யானை, புலி, கரடி, சிங்கம், என்று காட்டிலுள்ள மிருகங்கள் இந்த முகத்திற்குள் தஞ்சமடைந்துள்ளன. இங்கே மொத்தமாக எத்தனை ஜீவராசிகள் இருக்கின்றன?

# ஒருமடிவருந்து



பட உதவி: ஜோன் வசந்தபாலன்




**இ**ந்த மரத்தில் பலரது முகங்கள் கிளைவிட்டு வளர்ந்துள்ளன. இயலுமானால் கணக்கிட்டுப் பாருங்கள். உங்களுக்குத் தெரிந்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

## மின் அஞ்சல் துரோகம்

**மி**ன் அஞ்சல் மூலம் ஏமாற்று வித்தைகள் பெருமளவில் அரங்கேற ஆரம்பித்துவிட்டன. அயான் ஃபௌலர் என்ற ஆங்கிலேயருக்கு சமீபத்தில் நேர்ந்த சம்பவம் ஒரு உதாரணம்.

மூன்று குழந்தைகளுக்குத் தாயான ஒரு பெண்ணை ஒரு 'சாட்'டிங்கில் சந்தித்திருக்கிறார் அயான்.

'க்ளிக்'கியதும் பிறந்த காதல், ஒன்பது மாதங்கள் கம்ப்யூட்டர் திரையால் கலர்ஃபுல்லாக வளர்ந்திருக்கிறது. இறுதியில் இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவாக, "உங்கள் சொத்துக்களையெல்லாம் விற்றுவிட்டு இங்கேயே வந்துவிடுங்கள். எங்கள் ஊரிலேயே சேர்ந்து வாழ்வோம்" என்று அழைத்தாள் காதலி.

அழைப்பை ஏற்று வந்த அயானுக்கு அடுத்த ஆறு நாட்கள் உல்லாச மயம்தான். ஒரு ஓட்டலில் அறை எடுத்துக் கொண்டு காதலியோடு சந்தோஷத்தில் திளைத்தார். ஏழாவது நாள் காலை கண்விழித்த அயானுக்கு அதிர்ச்சி. காதலியைக் காணவில்லை. தான் கொண்டு வந்திருந்த பணமும் பொருட்களும்கூட மிஸ்ஸிங்- அத்தனையும் சுருட்டிக் கொண்டு கம்பி நீட்டி விட்டாள் அவள்.

இப்போதெல்லாம் எந்தப் பெண்ணாவது 'சாட்'டிங்கின் போது மின் அஞ்சல் விலாசம் கேட்டால் 'பட்டதே போதும்' ஆளைவிடுங்க அம்மணி என்று நழுவிவிடுகிறாராம் அயான். ■



**பா**லஸ்தீன மண்ணில் இஸ்ரேலியர்கள் நடத்தும் கொடுமையைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதியும் மணிக் கணக்கில் பேசியும் தெளிவபடுத்திவிட முடியாமற்போய் விட்ட மனித அவலத்தை இந்தப் புகைப்படம் உணர்த்துகிறது.

மேற்குக் கரையில் உள்ள ஜெனின் நகரில் சமீபத்தில் இஸ்ரேலிய இராணுவம் நடத்திய ஆக்கிரமிப்பின்போது காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றஅம்புலன்ஸ் வாகனங்கள் பறிக்கப்பட்டதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.


போரின்போது காயமடைந்தவர்களை, அவர்கள் எதிரிப்படையினராக இருந்தாலும் சரி சிகிச்சையளிக்க வேண்டும் என்பது போரியல் சட்டத்தில் காணப்படும் அடிப்படையான மனிதாபிமான அம்சம்.

ஆனால், இஸ்ரேலிய படையினரோ சகலவித சட்ட திட்டங்களையும் ஒரு பக்கமாக வைத்துவிட்டு தம்பாட்டில் அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கின்றனர்.

இங்கே காணப்படுவது ஜெனில் "க்ளிக்" செய்யப்பட்ட உலகப் புகழ்பெற்ற புகைப்படம்.

வீட்டிற்குள் இருந்த பாலஸ்தீன இளைஞர் ஒருவர் இஸ்ரேலிய ஷெல் தாக்குதலில் படுகாயமடைந்தார். அவரை அவசர சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும்போது, வழியில் அந்த அம்புலன்ஸைத் தடுத்து நிறுத்திய இஸ்ரேல் இராணுவம் காயமடைந்தவரைக் கட்டிலோடு நிலத்தில் இறக்கி வைத்துவிட்டு அம்புலன்ஸைச் சோதனை செய்கிறது.

# காற்றுவாக்கில்... 3



## தமிழ் நிகழ்ச்சி எங்கே?

***அன்புள்ள ஐ.ரி. என்.தலைவருக்கு 'ஆசை'யில் ஓர் கடிதம்!***

உங்கள் சுயாதீன தொலைக்காட்சியின் 23 ஆண்டு நிறைவை அருமையாகக் கொண்டாடியிருப்பீர்கள். இதனை நினைவு கூரு முகமாக, ஆங்கில 'ஐலன்ட்'டிலும் சிங்கள 'திவயின'விலும் 05.06.2002 ல் முழுப்பக்க விளம்பரங்களைப் பிரசுரித்திருந்தீர்கள். மிக நேர்த்தியான விளம்பரம். ஆனால் ஒன்று தலைவரே, தமிழ்ப் பத்திரிகைகளில் அப்படி ஒரு விளம்பரம் வெளிவரவில்லையே?

தமிழ் வாசகர்களுக்கு (மக்களுக்கு) எதைச் சொல்வது என்று நினைத்து விளம்பரத்தைப் பிரசுரிக்காமல் விட்டு விட்டீர்களோ தெரியவில்லை. அப்படி நீங்கள் நினைத்திருந்தால் அது முற்றிலும் சரியே; ஏனெனில் சுயாதீனத் தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சி என்று கூறும் அளவுக்குத்தான் நிகழ்ச்சி எதுவும் இல்லையே!

1979 ஏப்ரலில் சுயாதீனத் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டு சென்ற சில ஆண்டுகள்வரை தமிழ் மொழி நிகழ்ச்சி என்று ஒன்றுகூட ஒழுங்காக ஒளிபரப்பாகவில்லை. பின்னர், செய்தி அறிக்கை ஒன்று நாளுக்கு ஒரு தடவை ஐந்தோ ஆறோ நிமிடங்களுக்கு ஒளிபரப்பாகியது. தொடர்ந்து, நாளுக்கு ஒன்றாக மாலையில் 15 நிமிட நேர நிகழ்ச்சி இடம்பெற்றது. அந்த நாளாந்த நிகழ்ச்சியை நிறுத்திவிட்டு 2000 டிசம்பரில் கூட்டு மொத்தமாக பி.ப 1.30 முதல் 3 மணிவரை "புதிய தென்றல்"என்ற பெயரில் நேரடி (live) சஞ்சிகை நிகழ்ச்சியாக ஒளிபரப்பாகியது. அப்போது தலைவராக இருந்தவர், நிகழ்ச்சித் தொடக்க விழாவில் கலந்துகொண்ட அமைச்சர்கள்,பிரதி அமைச்சர்களின் முன்னிலையில் தமிழ் பேசும் மக்களுக்கு ஏதோ வியக்கத்தக்க செயலைச் செய்துவிட்டதாக மார் தட்டினார். இந் நிகழ்ச்சியும் சென்றமாதம் நிறுத்தப்பட்டு பகல் 12மணிக்கு 'வயிஸ்கோப்'(சினிமாப்படம்) காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். இந் நிகழ்ச்சிக்கென நியமிக்கப்பட்ட அனுபவம் வாய்ந்த தயாரிப்பாளரும் அங்கு ஏற்பட்டுள்ள 'சூடான' நிலைமை காரணமாக விலகி விட்டாராம்.

தலைவரே, தமிழ் நிகழ்ச்சி என்றால் அது 'வயிஸ்கோப்' காட்டுவதல்ல; அதற்குத்தான் 'சக்தி'யில் நாளொரு திரைப்படம் காண்பிக்கிறார்களே; அத்தோடு 'ஸ்வர்ணவாஹினி'யும் வாரம் ஒரு முறை தமிழ்ப்படம் காட்டி தமிழ் நிகழ்ச்சி ஒளிபரப்புவதாகத் திருப்திப்படுகிறார்கள். அதிகம் பேசிப் பயனில்லை. உங்களுக்கு ஒரு யோசனை கூறலாமா? ரூபவாஹினி 'ஐ' அலைவரிசை அடுத்த மாதம் முதல் முற்று முழுதாகத் தமிழ் பேசப்போகிறதே, நீங்களும் ஒரு தனி அலைவரிசையினை தமிழ் நிகழ்ச்சிகளுக்கென ஒதுக்கினால் என்ன? வெறும் 'வயிஸ்கோப்' காட்டுவதைவிடுத்து அர்த்த புஷ்டியுள்ள சிங்கள நிகழ்ச்சிகளைப் போல், தமிழிலும் தயாரித்து ஒளிபரப்ப முடியாதா?

அவ்வாறு ஒளிபரப்பினால் முன்னாள் தலைவர்கள் செய்யமுடியாத (விரும்பாத!) ஒன்றைச் செய்துவிட்டதாகத் தமிழ் மக்களின் பாராட்டை நீங்கள் நிச்சயம் பெறுவீர்கள்!

*இப்படிக்கு*
*உங்கள் நன்மைநாடும்,*
*'காற்றாடி'*

## அந்தக் கடிதம்!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தென்றலில் சமீபத்தில் 'அஞ்சல் பெட்டி-574' என்ற நிகழ்ச்சியைக் கேட்க நேர்ந்தது. அதாவது தேசிய சேவை நேயர்களின் கடிதங்களுக்குத் தமிழ்ச் சேவைப் பணியாளர் பதில் கூறுவது போல், வர்த்தக சேவையாகிய "தென்றல்" நிகழ்ச்சிகள் பற்றி நேயர்கள் எழுதும் கடிதங்களுக்கு பதில் கூறும் நிகழ்ச்சியே 'அஞ்சல்பெட்டி-574'. இதில் வாசிக்கப்பட்ட ஒரு நேயரின் கண்டனக் கடிதம் வானொலியில் வாசிக்கப்படக் கூடியதா என்று யோசிக்க வைத்தது. அந்த நேயர், அறிவிப்பாளர் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு, அவர் தமக்கு ஒரவஞ்சம் காட்டியதாக விலாவாரியாக எழுதியிருந்தார். அக் கடிதம் பூரணமாகவும் வாசிக்கப்பட்டது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட அறிவிப்பாளரை நேரில் அழைத்து, விசாரித்து, தவறு செய்திருந்தால் எச்சரிக்கை செய்திருக்கலாம்; அதுவே நாகரிகமான செயலுங்கூட! பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என்றால் பிரச்சனையைப் பூடகமாகக் குறிப்பிட்டுவிட்டு உரிய நடவடிக்கை எடுத்திருப்பதாகப் பதில் கூறியிருக்கலாம். அதைவிடுத்து, அனைத்து நேயர்களும் கேட்கும்படியாக பகிரங்கமாக அறிவித்து, அந்த அறிவிப்பாளரைச் சங்கடத்துக்கு உள்ளாக்குவது, அவரின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்துவது எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏற்கக்கூடியதாகாது.

## யாருக்கு இந்த நிகழ்ச்சி?

'**காற்றாடி**'யை அடியொற்றி, மடுல்கல வாசகர் வி.ராமன் தேவர் என்பவர் குறையெனத் தனக்குப்பட்டதை இவ்வாறு கூறுகிறார்:-

"இலங்கைத் தமிழ் தேசிய சேவையில் வார நாட்களில் காலை வேளையிலும், பிற்பகல் வேளையிலும் கல்வி நிகழ்ச்சி ஒலிபரப்பாகிறது. இந் நிகழ்ச்சியினால் பயனடைய வேண்டியவர்கள் யார்?நிச்சயமாகப் பாடசாலை மாணவ, மாணவிகளாகத்தான் இருக்க வேண்டும். ஆனால், இந் நிகழ்ச்சியால் பாடசாலை மாணவ, மாணவிகள் பயன் பெறுவதில்லை என்றேதான் கூறவேண்டும். ஏனெனில் பாடசாலைக்கு மாணவர்கள் போன பின்புதான் இக்கல்வி நிகழ்ச்சி ஆரம்பமாகி தொடர்கிறது. வீட்டிலிருந்து கேட்பது வீட்டார்களே தவிர மாணவர்கள் அல்ல".

இக்கருத்து 'காற்றாடி'க்கும் ஏற்புடையதே. உரியவர்கள் கவனிப்பார்களா?

## தமிழ்ச்சேவை அல்லவே!

சென்றவார 'நேயர் கடிதம்' நிகழ்ச்சியில் நல்லதொரு செய்தி சொல்லப்பட்டது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கலையகங்கள் மறுபெயரிடப்படுவது பற்றிக் குறிப்பிட்டு 1 ஆம் இலக்கக் கலையகம் பண்டிற் அமரதேவா கலையகம் என்றும் 5ஆம் கலையகம் கருணாரத்ன அபேசேகர கலையகம் என்றும் 6ஆம் கலையகம்- குமாரதுங்க கலையகம் என்றும் இருப்பது போல பழம்பெரும் தமிழ்க் கலைஞர்களின் பெயர்களையும் சூட்டுவதற்கு, தாம் சிபார்சு செய்திருப்பதாகத் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் கூறினார். நல்ல விஷயம்; பாராட்டப்பட வேண்டியதுதான். ஆனால் ஒன்று- ஆனந்த சமரக்கோன் கலையகத் திறப்பு விழாவில் மெல்லிசைப் பாடல்களைக் கொண்ட சி.டி. ஒன்று வெளியிடப்பட்டதல்லவா? அதில் யார் யாருடைய பாடல்கள் இடம்பெற வேண்டும் என்று நிச்சயிக்கப்பட்ட அதே தோரணையில் அந்த சிபார்சு இருக்காவிட்டால் சரிதான். ஆமாம்! இப்பொழுதுதான் வர்த்தக சேவை 'தென்ற'லாக

**காற்றாடி**

வேறுபக்கம் போய்விட்டதே, மிஞ்சியிருப்பது தமிழ்த் தேசிய சேவை மட்டும்தானே, அதன் பணிப்பாளர், தமிழ்ச்சேவைப் பணிப்பாளரா அல்லது தமிழ்த் தேசிய சேவைப் பணிப்பாளரா? சிங்கள சேவையில் எப்படி?

வேறு செய்தியொன்றும் காற்றுவாக்கில் கிடைத்துள்ளது. அதாவது தமிழ்த் தேசிய சேவைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தைக் குறைத்துவிடப் போகிறார்களாமே, உண்மையா? எவருக்கும் தெரிந்தால் அறிவிப்பீர்களா? தகவலுக்காகக் கேட்கிறேன்!

காற்றாடி தொடர்ந்தும் சுற்றும்!

# பார்த்த ஞாபகம் இல்லையோ...? 04



தமிழ்த்திரை உலகில் ஒரு காலம் சோகரசம் பிழிந்து நடித்து இரசிகர்களின் கண்களில் கண்ணீர் சுரக்க வைத்த நடிகர் நாகேஸ்வர ராவ். அவர் பேபி காஞ்சனாவை அணைத்து ஆறுதல் கூறுவதை சோக்கிரட்டீஸ் தங்கராஜ் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

படம்- அருந்ததி. கதாநாயகி அஞ்சலிதேவி.

பேபி காஞ்சனாவை தமிழ்ப்பட இரசிகர்கள் மறந்திருக்க முடியாது. வீரபாண்டிய கட்டபொம்மனில், கட்டபொம்மன் சிவாஜியை "பெரியப்பா... பெரியப்பா..." என்று பாசத்தோடு சுற்றிச் சுற்றி வரும் மீனாதான் இந்த பேபி காஞ்சனா. பேபி குமரியான பின்னர் ரேணுகா என்று பெயர் மாற்றம் செய்து வாய்ப்புக் கேட்டு அலைந்தார். ஆனால், சந்தர்ப்பம் கிட்டவில்லை. ஜெமினியின் படங்களில் நகைச்சுவைப் பாகமேற்று நடித்து வந்த சுந்தரிபாயின் அக்கா மகள்தான் இவர்.



மக்கள் திலகம் எம்.ஜி. ராமச்சந்திரன் கன்னடத்துப் பைங்கிளி சரோஜா தேவியுடன் 1966ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்திருந்தார். கொழும்பு, கண்டி, மாத்தளை, நுவரெலியா, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களுக்கு இருவரும் சென்றிருந்தனர்.

கண்டி மாநகரில் பிறந்த எம்.ஜி.ஆர். கண்டி குயின்ஸ் ஹோட்டலை வந்தடைந்து காரிலிருந்து இறங்கியதும் தரை மண்ணைத் தனது இரு கரங்களாலும் பயபக்தியுடன் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்ட காட்சி. அவர்களைப் பார்க்கக் கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களின் கண்களைப் பனிக்கச் செய்தன. அவருடைய கண்களிலும் கண்ணீர் கசிந்தது.

நுவரெலியா குதிரைப் பந்தயத் திடலில் மலையக அழகித் தெரிவில் மக்கள் திலகம் கலந்து கொண்டார். நுவரெலியா மாநகரசபை முதல்வர் புரட்சித் தலைவரையும், சரோஜாதேவியையும் வரவேற்றபோது பிடிக்கப்பட்ட படம் இது. எம்.ஜி.ஆருக்கு இடது புறம் கண்ணாடி அணிந்திருப்பவர்தான் மேயர். சரோஜா தேவிக்கு வலது புறமாக ஒலிவாங்கியுடன் நிற்பவர், நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி சிங்கள சேவைக்காகத் தொகுத்தளித்தவரான அப்போதைய சிங்கள சேவை இயக்குநராக இருந்த மறைந்த திரு. சித்ரானந்த அபயசேகரா அவர்கள்.

'பார்த்த ஞாபகமில்லையோ' தகவல்களைப் பார்த்த நுவரெலியா வாசகரான பழையகடை வீதியைச் சேர்ந்த திரு.கே.மோதிலால் நேரு இப்படத்தை எமக்கு அனுப்பி வைத்தார். அவருக்கு எமது நன்றிகள்.




ஜே.பி. சந்திரபாபு கொழும்பு நகர்தான் இவருடைய தாயகம். கிராண்ட்பாஸ் வீதியில் பெற்றோருடன் வாழ்ந்தவர். மருதானை சென் ஜோசப் கல்லூரியில் படித்தவர். பின்னர் இந்தியா சென்றார். சென்னை நகரில்- சினிமாத் தயாரிப்பாளர்களிடம் பல காலம் அலைந்தார். ஜெமினி கணேசனின் சிபார்சின் பேரில் 'தாயுள்ளம்' படத்தில் சோகமே உருவாகத் தோன்றினார். ஆனால், பிற்பட்ட காலங்களில் இரசிகர்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும் பாத்திரங்களை ஏற்றுச் சிறப்பாக நடித்தார். சொந்தக் குரலில் பாடி ஓடி ஆடி குதித்து வேடிக்கை காட்டுவார்.

சந்திரபாபு நடித்த படம் என்றால் அதற்கென்றொரு கூட்டம் கூடும். ஏ.வி.எம். 'சகோதரி' என்றொரு படத்தை எடுத்து முடித்து வினியோகத்தர்களுக்கெனப் பல காட்சிகளை ஏற்பாடு செய்திருந்தனர். "படம் ஓடாது" என்று ஏகோபித்த குரல் எழுந்தது.

சந்திரபாபுவைத் தேடிப் பிடித்து பால்காரன் வேடம் கொடுத்து பத்மினி பிரியதர்சினியுடன் நகைச்சுவைக் காட்சிகளை எடுத்து சகோதரியில் இணைத்தனர். நானொரு முட்டாளுங்க' என்ற பாட்டுக்காகவே படம் ஓஹோ என்று ஓடியது.

சந்திரபாபுவின் குடும்ப வாழ்க்கை சோகமாக முடிந்தது. மணமகளுக்கு வேறொரு காதலன் இருக்கிறான் என்று தெரிந்ததும், அவளைக் காதலனுடன் வாழ அனுப்பிவிட்டு, வாழ்க்கையில் வெறுப்புற்று மரணத்தைத் தழுவிக் கொண்டார்.



*ஜெமினியின் ராஜி என் கண்மணி' படத்தில் கண்பார்வையற்ற பூக்காரியாகத் தோன்றிய ஜூனியர் ஸ்ரீரஞ்சனி இவர்தான். 'பராசக்தி'யிலும் பார்த்தோரை உருக்கி கண்ணீர் உகுக்க வைத்தவரும் கூட. அதிகமான படங்களில் தோன்றவில்லை என்ற போதிலும் இரசிகர்கள் மனங்களில் பசுமையாக நிலைத்து நிற்கும் ஓர் அற்புத நடிகை ஸ்ரீ ரஞ்சினி.*

*பராசக்தியில் சிவாஜியின் தங்கையாக ஒரே சோகமாகக் கண்ணீர் சிந்திய கல்யாணியை எவரால்தான் மறக்க முடியும்?*



கிரண்
படம்: ஜெமினி

திரையுலக மறுபக்கம் 236
தமிழ்நாட்டிலிருந்து மயன்

# ப்ளூ பிலிம் விவகாரம்! பத்மஜோதி கைதானால் பல முன்னணி நடிகைகளின் பெயர்கள் அம்பலமாகலாம்!

நடிகர் ராஜ்கிரணும் அவரது இரகசிய மனைவி பத்மஜோதியும் தலைமறைவாகி விட்டதாகக் கடந்த வாரம் பரபரப்பாகச் செய்தி வெளியானது. பெட்ரோல் செட் வைப்பதற்கு லைசன்ஸ் வாங்கித் தருவதாகக் கூறி வர்த்தகர் ஒருவரிடம் பண மோசடி செய்ததாக ராஜ்கிரண்மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

சென்னை வருமானவரி அதிகாரியான இளங்கோவன் என்பவரின் மனைவியான பத்மஜோதியுடன் ராஜ்கிரணுக்கு நீண்டநாள் இரகசிய உறவு.

பத்மஜோதிக்கு நிறைய பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை எப்போதுமே உண்டு. அதனால்தான் உடலை விற்றுச் சம்பாதிக்கவும் அவர் தயாராக இருந்தார். இதனால் அவரிடமிருந்து இளங்கோவன் பிரிந்தார்.

இதையடுத்து தமிழகத்தில் உள்ள பல முக்கிய நகரங்களுக்குச் சென்ற பத்மஜோதி தன்னுடைய பெயரையும் மம்தா, பிரமிளா, ராணு, மீனுக்குட்டி, ரோசாக்குட்டி என்று மாற்றி மாற்றி வைத்துக் கொண்டு தன் உடலை விற்று உல்லாச வாழ்க்கை வாழத் தொடங்கினார்.

பல்வேறு சினிமா டைரக்டர்களுக்கும் தொழில் அதிபர்களுக்கும் வாடகை மனைவியாகவே வாழ்ந்து வந்தார் பத்மஜோதி.

அப்போதுதான் திடீரென பத்மஜோதி கர்ப்பமாகி பின்னர் ஒரு பெண் குழந்தையையும் பெற்றெடுத்தார். ஆனால் ஆந்திர மாநில முன்னாள் முதல்வர் என்.டி. ராமராவின் மனைவியான சிவபார்வதியின் குழந்தைதான் இக் குழந்தை என்று பத்மஜோதி கூறிவந்தார்.

இந் நிலையில் பிரபல செக்ஸ் டாக்டர் பிரகாஷுடனான அறிமுகம் பத்மஜோதிக்குக் கிடைத்தது. முதலில் டாக்டர் பிரகாஷின் ப்ளூ பிலிம்கள் சிலவற்றில் நடித்த அவர் அதன் மூலம் கிடைத்த பணம் போதாதென்று தனக்குத் தெரிந்த பல நடிகைகளை டாக்டர் பிரகாஷுக்கு அறிமுகம் செய்திருக்கிறார். பத்மஜோதி நடித்த பல ப்ளூ பிலிம் கேசட்டுகள் பொலிஸாரிடம் சிக்கின. வேறு பல நடிகைகளின் நடிப்புகளும் அந்த கேசட்டுகளில் உள்ளனவாம்.

மாடலாக இருந்து சினிமாவுக்கு வந்த பிரபல கட்டழகி ஒருவரதும் "திறமையான நடிப்புகள்" அடங்கிய கேசட்டும் கைப்பற்றப்பட்டுள்ளது. பத்மஜோதியைக் கைது செய்தால் மேலும் பல உண்மைகளை வெளிக் கொண்டு வரலாம் என்று பொலிஸார் நம்புகின்றனர். பத்மஜோதியால் டாக்டர் பிரகாஷிடம் அறிமுகம் செய்யப்பட்ட நடிகைகளோ தங்களது பெயரும் அம்பலத்துக்கு வரும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்று நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

## மினி சில...

* 'தூள்' படத்தைப் பார்த்ததும் ... என்று ரசிகர்கள் கூறும் வகையில் ... காமெடி கலந்த ஒரு ரொமான்டிக் ... படமாக அமையும். அதாவது யதார்... ஒரு கதையுடன் எல்லா... கமர்ஷியல் அயிட்டங்... பெறும் படம். விக்ரம் ப... படம் வித்தியாசமான ... ரில் தோன்றி நடி... றார். இதிலும் அ... படித்துவிட்டுக் ... லிருந்து பட்டணத்... தேடி வரும் இ... அவர் இதில் ந... வந்த இடத்தில் ... தேடும் ... சம்பவங்கள்தான் ... ஹைலைட்ஸ். பட... கதாபாத்திரமே கிடை... சில சம்பவங்கள் ... அமையும் என்கிறா... தரணி.



மனோஜ்-ரதி-ஷங்கர்-ஷாரா-மிருகேஷ்
படம்: பஸவைன

* கதாநாயகி இ... ராகிறது ஒரு புதிய பட... பரபரப்பாக ஓடிய ... பிரைன் நிறுவனத்தின் த... அண்ட் ஆர்டர்' எனும் இ... தமிழிலும் இதே நிறுவன... கிறது. சாதாரண ஹீரோவின் படங்களில் ... மூன்று ஹீரோயின்களை வைத்துக் கவர்ச... மெடுக்கும் இந்தக் காலத்தில் கதையை ... படம் தயாரிக்கிறது இந் நிறுவனம். ஹீரோயின் விஷயத்தில் சிக்கனம் காட்டிய த... வில்லன்களின் எண்ணிக்கையில் தாராளம் காட்டியிருக்கிறார். கவர்ச்சிப் போதையில் ... தமிழ்த் திரைப்பட ரசிகர்களிடையே எடுபடுமா இவர்களது சட்டம் ஒழுங்கு?

* விஜய் நடித்த 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தை சூப்பர் ஹிட் பிலிமுக்காக ... இயக்கி முடித்து- அதை ஒரு வெற்றிப் படமாக்கிய இயக்குநர் எஸ். எழில், இப்போது ... மேக்கர்சக்காக அஜீத் நடிக்கும் 'ராஜா' படத்தை அதே 57 நாட்களில் இயக்கி முடி... படைத்துள்ளார்! அதுவும் மலேசியாவுக்குச் சென்று இரண்டு பாடல் காட்சியை இந்த... நாளில் படமாக்கி முடித்துள்ளார்.

* இரண்டு வருடத்திற்கு ஒரு முறை இசையமைப்பாளர் அவதாரம் எடுப்பார் சி... இரண்டு வருடம் பீல்டில் பிஸியாக இருப்பார். பின்னர் இரண்டு வருடம் காணா... வார். அப்படித்தான் இப்போது மீண்டும் 'உன்னை நினைத்து', 'வருஷமெல்லாம் வசந்த...' மூலம் வந்திருக்கிறார் அவர். அது மட்டுமன்றி பழைய ஸ்டைலில் பாடல்கள் ... போதிலும் ஹிட்டாகிவிட்ட காரணத்தினால் மேலும் சிறப்பிக்கும் பல பட... கொண்டிருக்கின்றன.

## லைலாவின் புலம்பல்

'உன்னை நினைத்து' படம் சுமாராக ஓடி வெற்றி என்று சொல்லக்கூடிய வகைக்குள் அடங்கினாலும் லைலா புலம்பிக் கொண்டிருக்கிறார். எதற்காக? தொடர்ந்து படியுங்களேன்...

'உன்னை நினைத்து' படம் வரட்டும், எனது ரேஞ்சே மாறப் போகிறது என்று கண்ணில் படுபவர்களிடம் எல்லாம் பெருமையாகக் கூறிக் கொண்டிருந்தவர் லைலா.

அப்படி என்னதான் அந்தப் படத்தில் இருக்கிறது என்று எதிர்பார்த்தவர்கள், படத்தைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டார்கள் நம்ம லைலாவா இப்படி நடித்திருப்பது என்று.

இதில் காதலியையே (லைலா) வில்லியாகக் காட்டியிருக்கிறார் இயக்குநர் விக்ரமன்.

இதையடுத்து பலரும் லைலாவிடம் துக்கம் விசாரிப்பது மாதிரி "என்ன இது உங்களை வில்லி கேரக்டரில் போட்டு விட்டார்கள்" என்று நேரடியாகவே கேட்டுவிட்டார்கள்.

சக நடிகைகள் பலரும் போன் செய்து இனி இப்படிப்பட்ட வில்லி வேடங்கள்தான் கிடைக்கும் என்றும் கூறினார்களாம். இதனால் பயந்து போன லைலா இப்போது ஏன்தான் அந்தப் படத்தில் நடித்தோமோ என்று புலம்பிக் கொண்டிருக்கிறாராம்.

விக்ரமன் தனது இமேஜையே மாற்றப் போகிறார் என்று பெருமிதமாகக் கூறி வந்த லைலா இப்போது விக்ரமனைத் திட்டிக் கொண்டிருக்கிறாராம்.

## பிரசாந்த்-கிரண் இணையும் 'வி...

இதுவரை காதல் கிளாமர் காட்சிகளிலேயே ... நாயகனாக உலா வந்த பிரசாந்த 'தமிழ்' பட... ரவுடியாகத் தோன்றினார். மீண்டும் ஒரு ... கதாபாத்திரத்தில் தோன்றுகிறார்- 'வின்னர்' ப... 'ஜெமினி' வெற்றிப்பட நாயகி கிரண், பிரசா... யாக நடிக்கிறார். இப் படத்தின் மூலம் ... புதுமுகங்கள் தமிழ்த் திரையுலகுக்... ரை. ஒன்று ஆந்திர முன்னணி ந... மற்றொருவர் மும்பை ... யிலிருந்து நாயகியை இ... வர்கள் இப் படத்தி... மாக வில்லனை ... கிறார்கள். ... என்பது ... பன்று ...

## சினே...



முரளி-ராஜா
படம்: சுந்தரா ட்ராவல்ஸ்

## நடிகைகளின் எச்சரிக்கை

சிம்ரனுடன் கொண்ட லடாயினால் மும்தாஜின் பெயர் ஏகமாக கெட்டு விட்டது. கவர்ச்சியாக நடித்து ஓரளவு நல்ல பெயரைத் தக்கவைத்து வந்த மும்தாஜ் சிம்ரனைப் போன்று அவருக்கு சரிநிகராகப் பேசியதால் தமிழ் சினிமா வட்டாரத்தினரையே பகைத்துக் கொண்டார். இதனால் சில முன்னணி நடிகர்கள் தங்கள் படங்களில் இருந்து இந்த நடிகைகளை அப்புறப்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறார்கள். இதனால் மற்ற நடிகைகள் ரொம்ப எச்சரிக்கையாகி விட்டார்கள். அதாவது இதற்கு முன்பு பேசியதைப் போன்று நடிகர்கள் மீது குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசுவதை தவிர்க்கத் தொடங்கி விட்டார்கள். குறிப்பாக ரோஜா எதற்கும் வாய் திறப்பதில்லை என்ற முடிவோடு இருக்கிறார்.

## சத்தமின்றி தயாராகும் 'பைவ் ஸ்டார்'

... முத்தமிட்டால்' ... அடுத்து மணிரத்னத்தின் ... டாக்கீஸ் நிறுவனம் 'பைவ் ஸ்டார்' ... படத்திற்குப் பூஜை போட்டு சத்தமின்றி பட... நடத்தி வருகிறது.

இயக்கம் மணிரத்னம் அல்ல...அவரிடம் உதவி இயக்குநராக இருந்த ... இவர் 'விரும்புகிறேன்' என்ற படத்தை இயக்கியுள்ளார்.

## சினி விசிட்

### 70 அடி உயரத்திலிருந்து குதித்த விஜய்

ஆசியாவிலேயே உயரமான படப்பிடிப்புத் தளம் விஜயா, வாகினி ஸ்டுடியோவில் உள்ளது. இது 70 அடி உயரம் உடையது. இங்கு 'யூத்' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த போது...

கதைப்படி 70 அடி உயரத்திலிருந்து விஜய் குதிக்க வேண்டும். சண்டைப் பயிற்சியாளர் கனல் கண்ணன், இயக்குநர் வின்சென்ட் செல்வா இருவரும் டூப் நடிகரை வைத்து விடுவதென்று முடிவு செய்தார்கள். அதற்கு விஜய் ஒப்புக் கொள்ளவில்லை.

"ரசிகர்கள் நடிகர்களே சாகஸம் செய்வதாக நம்புகிறார்கள் என்னால் முடியாத காட்சிக்கு வேண்டுமானால் டூப் வைத்து எடுக்கலாம். அறுபதடி உயரத்தில் இருந்து என்னால் குதிக்க முடியும் என்று நம்புகிறேன். அதனால் நானே குதிக்கிறேன்" என்று அவர்களிடம் வாதாடினார். "இத்தனை ரிஸ்க் தேவையில்லை" என்று எல்லோரும் விஜய்யிடம் கூறினர்.

"என்னால் முடியும் பயப்படாதீர்கள்" என்று கூறிய விஜய் விறுவிறுவென்று மேலேறி அறுபதடி உயரத்தில் இருந்து குதித்து காட்சியை ஓ.கே பண்ணினார். யூனிட்டே இந்தக் காட்சியை மனம் படபடக்க ஆவலோடு பார்த்தது.

குதித்தவுடன் கனல் கண்ணன், வின்சென்ட் செல்வா உட்பட அனைவரும் விஜய்யைக் கட்டிப்பிடித்து வாழ்த்துத் தெரிவித்தனர். அனைவரும் தொடர்ந்து கைதட்டி விஜய்யை உற்சாகப்படுத்தினர்.

ஹாலிவுட் நடிகர்களே சேஃப்டி பெல்ட் அணிந்துதான் நடிப்பார்கள். அதற்கான பல விஞ்ஞான உபகரணங்களை உபயோகிப்பார்கள். ஆனால், விஜயோ மெத்தை போட்டுக் குதித்துச் சாதனை செய்தார்.

### 'பாபா'வில் வில்லியாக ரம்யா கிருஷ்ணன்

தனது முன்னைய படங்களில் மக்களால் பேசப்படும் அளவு சிறப்பாக நடித்த பலருக்கு பாபாவில் ரஜினி வாய்ப்பளித்திருக்கிறார். அந்த வரிசையில்

'படையப்பா' படத்தில் வில்லியாக நடித்து புகழ்பெற்ற ரம்யா கிருஷ்ணன் 'பாபா'விலும் வில்லி கேரக்டரில நடித்துள்ளார்.




படையப்பா படத்தில் ரம்யா நடித்த வில்லி பாத்திரம் அப்போது தமிழகமெங்கும் பரபரப்பாகப் பேசப்பட்டது.

இதையடுத்து 'பாபா'விலும் வில்லியாக நடிக்கு மாறு ரம்யா கிருஷ்ணனை சூப்பர் ஸ்டார் கேட்டுக் கொண்டாராம். ரம்யா கிருஷ்ணன் சம்பந்தப்பட்ட காட்சிகளை மைசூரிலும் ஸ்ரீரங்கப் பட்டணத்திலும் எடுத்துள்ளனர். படையப்பா நீலாம் பரியைப் போலவே 'பாபா' வில்லி கேரக்டரும் பரபரப்பாகப் பேசப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பஞ்சதந்திரத்தில் கமலுடன் நடித்த ரம்யா கிருஷ்ணன் பாபாவிலும் நடிப்பதால் தற்போது தமிழில் பிஸியாக இருக்கிறார்.

### 'அனிதாவுக்கு டும் டும் டும்'

'வருஷமெல்லாம் வசந்தம்', 'சாமுராய்' போன்ற படங்களில் நடித்த அனிதா சினிமாவே வேண்டாம் என்று போய்விட்டது போல ஒதுங்கியிருக்க முயற்சிக்கிறார்.

அவரை புதுப் படங்களில் ஒப்பந்தம் செய்யச் சென்றால், 'இனிமேல் நான் புதுப் படங்களில் நடிக்க மாட்டேன்" என்பது போல அக்கறை இல்லாமல் பேசுகிறாராம்! 'வருஷமெல்லாம் வசந்தம்' வெற்றிகரமாக ஓடிக் கொண்டு இருக்கிறது. விரைவில் விக்ரமுடன் நடித்த 'சாமுராய்' படம் திரைக்கு வருகிறது. "நல்ல பெயர் இருக்கும்போதே நாலு காசு சம்பாதிப்பதை விட்டுவிட்டு, காதல்... கத்தரிக்காய் என்று தடம் மாறுவது ஏனோ?"

என்று அவரை அறிந்த பலரும் கவலை தெரிவிக்கின்றனர். அனிதா விரைவில் திருமணம் செய்துகொள்ளப் போகிறார் என்பது அவருக்கு நெருக்கமானவர்கள் கூறும் செய்தி.



ரீமா சென்

### சேற்றுக்குள் விழுந்த விக்ரம்

விக்ரமின் அடுத்த கலக்கல் படமாகத் தயாராகி வரும் சாமுராயின் படப்பிடிப்பு ஊட்டியில் கடுமையான குளிரில் நடந்தபோது, ஒரு பெரிய சேற்றுக் குழியை படப்பிடிப்புக் குழுவினர் கண்டுபிடித்தனர். இந்தக் குழியில் குதித்து மேலெழும்பி வரவேண்டும் என்று விக்ரமிடம் சொல்ல, அந்தக் குழி எவ்வளவு ஆழம் என்பதைக் கூட அறியாமல் குதித்து விட்டார்!

அவ்வளவுதான்...அந்தக் குழி ஒரு புதை குழியைப் போல விக்ரம் உடம்பைத் தன் வயிற்றுக்குள் வாங்கிக் கொண்டது! உடனே படப்பிடிப்புக் குழுவினர் மிரண்டு போய் அலறத் தொடங்கினர்!

சில வினாடிகளுக்குப் பிறகு அந்த சேற்றுக் குழியின் உள்ளே இருந்து வெளியே தலையை நீட்டி எட்டிப் பார்த்து, காமிரா ஓடத் தொடங்கிவிட்டது என்பதை உணர்ந்து, தன் வாய்க்குள் நிரம்பியிருந்த சேற்றை அப்படியே கீழே உமிழ்ந்து, ஊ ஊ ஊ ஊ... என்று உறுமியபடி குழியைவிட்டு வெளியேறினார் விக்ரம்! தான் எதிர்பார்த்ததை விட இந்தக் காட்சி சிறப்பாக அமைந்துவிட்டதால், இயக்குநர் பாலாஜிக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

### அபிராமியின் சோகம்

பின் விளைவை யோசிக்காமல் ஆரம்பத்தில் செய்து கொண்ட தவறை நினைத்து இப்போது மனம் வருந்துகிறார் நடிகை அபிராமி.

இளம் நடிகர்களுடன் டூயட் பாடி விட வேண்டும் என்று ரொம்பத்தான் முயன்று பார்த்தார் அபிராமி. ஆனால் அவரது முயற்சி அனைத்துமே தோல்வியடைந்து விட்டன. வயது முதிர்ந்த ஹீரோக்களுடன் டூயட் பாடி விட்டதால் இனி இளம் நடிகர்களுடன் இவரை ஜோடி சேர்த்தால் ரசிகர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று டைரக்டர்கள் இவர் பக்கம் திரும்பவே இல்லை. அதனால் இப்போது இது போன்ற முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்ட அபிராமி ஏதோ கிடைக்கிற படங்களில் கொஞ்சக் காலத்துக்கு நடிப்போம் என்ற நிலைக்கு வந்து விட்டார். ஆனால், மலையாளத்தில் இளம் நடிகர்களுடன் நடிக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருப்பதாகச் சொல்கிறார். நிஜமோ பொய்யோ தெரியவில்லை.

### முகப்பில்

கரிஷ்மா கபூர்

நெப்போலியன்

### ...வை காதலிக்கவா சினிமாவுக்கு வந்தேன்....?

...படத்தில் மாத்திரம் நடித்து இளம் உள்ளங்களை வசீகரித்த ஹீரோக்களின் ...கடைசியாக இணைந்து கொண்டனர் ஸ்ரீகாந்த்

...கூட்டத்தில் நடித்தாலும் நடித்தார் ஏகப்பட்ட பிரபல்யம். இப்போது அதே ...கிசுகிசுக்களும் கிளம்பத் தொடங்கியுள்ளன. சினேகாவுடன் காதல் என்பது ...மீதான லேட்டஸ்ட் கிசுகிசு.

...யேதும் இருக்கிறதா என்று கேட்டால் சுத்தப் பொய் என்று திட்டவட்டமாக ...கிறார்.

ஸ்ரீகாந்தின் மினி பேட்டி இது

- **சினேகாவுடன் என்ன லவ்வா? தமிழ்த் திரையுலகமே உங்களை இணைத்துப் பேசிக் கொண்டிருக்கிறதே...?**

உண்மையைச் சொல்வதென்றால் இன்னும் நான் ஒரே ஒரு காட்சியில் கூட ...ஏப்ரல் மாதத்தில்... படத்துக்காக சினேகாவுடன் இணைந்து நடிக்கவில்லை. ...பிறகு எப்படி அவருக்கும் எனக்கும் காதல் என்று முடிச்சுப் போடுகிறார்கள் தெரியவில்லை.

- **நீங்கள் துபாய் நாட்டுக்குச் சென்று சினேகாவுடன் காதல் மொழி பேசியதாகக் கூறப்படுகிறதே?**

எந்தவித ஆதாரமும் இல்லாமல் எதற்கு என்னை அந்தப் பெண்ணுடன் இணைத்துப் பேசுகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. என்னுடைய பாஸ்போர்ட்டைப் பாருங்கள்... நான் துபாய் நாட்டுக்குச் சென்றிருந்தால், அதில் ...குத்தப்பட்டு இருக்கும் அல்லவா? நான் சினேகாவை காதலிப்பதற்காகவா ...வந்தேன்? இங்கு நான் சாதிக்க- என் திறமைகளை வெளிப்படுத்தி ஜெயிக்க எத்தனையோ சந்தர்ப்பங்கள் இருக்கிறது. திரையுலகில் ஒரு முன்னணி நடிகனாக வேண்டும் என்பதுதான் எனது ஆசை. அந்த லட்சியத்தை அடைய வேண்டும் என்றால், இது போன்ற வதந்திகளைப் பற்றி கவலைப்படக் கூடாது என்று முடிவு செய்து விட்டேன்! இங்கு இன்னொரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்... என்னையும் சினேகாவையும் இணைத்து வெளியான கிசுகிசுக்களைப் படித்த என்னுடைய ரசிகர்- ரசிகைகள், சமீபத்தில் என்னிடம் டெலிபோனில் பேசியபோது, இதெல்லாம் எங்களால் நம்ப முடியவில்லை. பத்திரிகைகள் ஏதோ பரபரப்புக்காக இப்படி எழுதுகின்றன என்பதைத்தான் எங்களால் உணர முடிகிறது என்று கூறினர்! அவர்களே இதை நம்பாதபோது, நான் எதற்காக வருத்தப்பட வேண்டும்? இந்த வதந்திகளுக்கு உங்கள் பேட்டியின் மூலமாக ஒரு நிரந்தர முற்றுப்புள்ளி வைத்துவிட்டேன்! இனி என் கவனம் முழுவதும் திரையுலகில் ஜெயிப்பது குறித்தே இருக்கும்.



நகைச்சுவைக் குழுவினர்

# பாசிக்குடாவின் பயோடேட்டா

பாசிக்குடா...
கிழக்கிலங்கையின்
சொகுசுக் குடா!

இது,
எங்களூர்
இளைஞர் யுவதிகளின்
லொஸ் ஏஞ்சல்ஸ்!

மெரினா பீச்சு
இவளுக்கு சாச்சி!
தேம்ஸ் நதிக்கரை
இவளுக்கு மாமி!
ஹவாயின் கடற்கரை
இவளுக்கு மதினி முறை!

கலாச்சாரம்
என்ற பெயரில்
அநாச்சாரங்களைக்
காட்டிக் கொடுப்பது
இவளது வம்சத் தொழில்!

பாலியல் சேட்டை
இங்கே,
பெயர்போன வேட்டை!
மது... சூது
தேவைப்பட்டோருக்கு
மாது...
நடப்பதெல்லாமே தீது!

ஆதம், ஏவாள்
ஆடை
இங்கே சிலரது
தேசிய உடை!

உணர்ச்சியேயற்ற
கிழவனுக்கும்
இங்கேதான் உல்லாசம் கேட்குது!

உல்லாசம்
என்கின்ற பெயரில்
சல்லாபம் செய்கின்றனர்
இங்கே சில சந்நியாசிகள்...

கடற்கரை
சிலரது படுக்கையறை!
கடலலை
சிலருக்கு தலையணை!

பாவங்களைக்
கழுவ வரும்
பக்தர் கூட்டங்களைப் போல்
குடும்ப சகிதம்
குளிக்கிறார்கள்....
இன்னும் பாவங்களைக்
கூட்டுவதற்காக!

இவர்கள் இங்கு
தண்ணீருக்குள் மூழ்கவில்லை...
சமயப் பெரியோர்களின்
கண்ணீருக்குள் அல்லவா
மூழ்கிறார்கள்!

நேற்றுவரை
இதற்குப் பெயர் பாசிக்குடா!
இன்று..... செக்ஸிக் குடா!

**ஷல்மானுல் ஹரீஸ், வாழைச்சேனை.**

# ஓ... ம னி தா...

ஓ மனிதா!
மண்ணில் விழும்
மழைத் துளிகூட
நான் விழப்போகிறேன்
நான் விழப்போகிறேன்
இந்தப் பாழாய்ப் போன
பூமியில் விழவிடாமல்
பிடியுங்களேன் என்று
வீரிட்டு அழுகின்றது-இந்த
அழுகுரல் உனக்கு
கேட்கவில்லைத்தான்!
× ★ ×
மரங்கள் எல்லாம்
உயிரைப் பறித்து -வெறும்
விறகாக்கி விடுவார்கள் என
விறைத்துப்போய்
மன்றாடுகின்றன - இந்த
மன்றாடலும் உனக்கு
கேட்கவில்லைத்தான்!
× ★ ×
ஆனால்,
உன் எதிரிலேயே
எரியும் தீயில்
உயிர்களின் குருதி வழிந்து
மரணம் பெருகுகிறதே!
அவர்களின்
மரண ஓலம்
இடியென இடிக்கிறதே
அது உன் செவிகளுக்கு
கேட்கவில்லைத்தான்!
× ★ ×
கேட்கிறது எல்லாமே
தெரிந்து - உன்
உணர்வுகள்
வெளிபிதுங்குகிறது -
ஆனாலும்
ஓடுகிறாய்... ஓடுகிறாய்...
சீக்கிரம் முடியப்போகும்-உன்
சிற்றின்ப உடலை
சுமந்துகொண்டு
எத்தனை தூரம்தான்
ஓடப் போகின்றாய்...?
× ★ ×
ஓ மனிதா...
என்றடா - உன்னை
நீயே உணர்வாய்?

**எஸ்.பிரமிளா, ஹாலி-எல.**

# ஏமாற்றம்

நாளையும்
வாக்களிப்போம்
அதிலும்
தோற்றுப்போவோம்
★
நாளையும்
மேடைகள் பேசும்
அதுவும்
நேற்றைய பொய்கள்தான்
★
நாளையும்
கைதட்டுவோம்
ஆனால்,
காரணம் தெரியாது
★
நாளையும்
வாக்களிப்போம்
ஏன் தெரியுமா?
தமிழன் என்பதால்!

**மு.அலெக்ஸாண்டர், ஹை.்.பொரஸ்ட்.**

# சிறைப்பட்ட நெஞ்சம்

நானோ உறக்கத்தில்
தூங்காமல் என் இதயம்
தூங்க விடாமல்....நீ....!

இமைகளையும்
உணர்வுகளையும்
பூட்டி விட்டுத்தான்
படுத்திருந்தேன்
அப்படியும் என்
சுவாச வழியால்
புகுந்து இதயத்தில்
உதைக்கின்றன
உன் ஞாபகங்கள்......

இளைய வயதினிலே
இனம் காணாத வதை
அதுதான் இன்றைய
இணையத் தளத்தில்
வாலிப வதை...!
தேடிய விழிகளுக்குள்
நீயும்
அன்றுதான் முகவரியாய்
தோன்றினாய்....

முதல் முறை பார்த்த
போதே
முடிவு செய்து விட்டேன்
என் வாழ்க்கையை
நீதான் முடிவு செய்யப்
போகும் முகவரி...என்று!

உன்னைச் சந்திக்கும்வரை
அழகின் அர்த்தத்தை
அறிந்திராத கண்கள்
அறிந்தமையினால்
நன்றிக் கண்ணீர்
விடுகின்றன.....!

நிரபராதியாய் இருந்த
என்னை குற்றவாளியாய்
நிற்க வைத்து கேள்வி
கேட்கின்றன என்
ஆசைகள்.....

என் காதலை
உருட்டி விளையாடுகின்றன
உன் எண்ணங்கள்
அவை சிதைந்து விடாது
இருக்க முயல்கின்றன
என் உயிர்த்துடிப்புக்கள்

இப்போது கூட என்
பார்வை விட்டு நீ
பிரிந்து போனதைப் பற்றி
வருந்தவில்லை நான்....

அளவுக்கு மீறி
என் இதயத்தை
கெடுத்து விட்டுப் போய்
விட்டாய் என்பதுதான்
என் வருத்தம்

**றியால் இப்னு சரீப், ஜெட்டா சவூதி அரேபியா.**

# கலைவாதிகள்

கல்லில் சிலை துயில
கலை விழியிரண்டில் கவர்ந்ததை
தட்டித் தட்டி உளியால்
தானேயெழுப்புகிறான் சிற்பிமகான்!

காற்று இசையை கவர்ந்து மறைக்க
காத்திருந்த கள்வனாய் - அதை
காற்றையே தூதனுப்பி
கைதாக்கிக் கொள்கிறான் இசைமேதை!


நிலவு வெட்கியோட - அதன்
நினைவுகளைப் பறித்து
வார்த்தையெனும் கோலத்தில்
வடித்துவைக்கிறான் கவிஞானி!

அரசு தூங்கிப்போக
அதிகாரம் தாங்கிக்கொள்ள
அப்பாவிகளின் இரத்தத்தை
அள்ளிக் குடிக்கிறான் அரசியல்வாதி!

**இரா.கீதவாணி, மஸ்கெலியா.**

# தேன் கிண்ணம்

# பேனா நண்பர்கள்





| | | |
|---|---|---|
| பெயர்: எம்.ஏ.சி. பாருக் | பெயர்:அருணாச்சலம் நந்தகுமார் | பெயர்: வி. பரமாநந்தன். |
| வயது: 19 | வயது: 25 | வயது: 22 |
| முகவரி: குருநாகல் வீதி, புத்தளம். | முகவரி: இல. 49, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12. | முகவரி: P.O BOX-5772 CATERING DIVISION AIRPORT CAMP, DOHA-QATAR. |
| பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட். | பொழுது போக்கு: வழமையானவை. | பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நட்பு. |

# பசுமையான நினைவுகள்

பலமைல் தூரம்
பறக்க நினைத்த- என்
பாச உறவுகளே

உங்கள்
ஒவ்வொரு நினைவுகளும்
என் உள்ளத்தின்
அழியா ஓவியங்களே...!

சிறகடித்த சிட்டுக்குருவியின்
சிறகினை ஒடித்து
சிதறி நீர் செல்ல
சித்தமுடன் புறப்பட்டீர்...!

பாசக்கடலில் நீந்தி
பிரிவெனும் வலையில் சிக்கி
பாவி நெஞ்சு - இன்று
பரிதவிக்கின்றது...!

தற்செயலாய் சந்தித்து
நிரந்தரமாய் பிரியும்வேளை
தாங்கமுடியாத் துயரில்
தத்தளிக்கின்றதே இதயம்...!

செவ்விதழ் விரிந்து நீர் சிந்திய
புன்னகை முத்துக்களும்,
வேல் வீசும் விழிகள்
பேசிய கனி மொழியும்,
மறக்குமா என்னுள்ளம்?
மங்குமா உம் எண்ணம்?

ஆண்டுகள் பல ஆனாலும்,
அந்நிய தேசம் சென்றாலும்,
அன்பினாற் பிணைந்த உள்ளம்
அறுந்து விழுந்திடாது...!

நிமிடங்கள் யுகங்களாக- உம்
நினைவுகள் நிலைத்து நிற்க,
நிறைவான உள்ளம் - உமக்காய்
நலம் வாழ தினம் வாழ்த்தும்...!

**ரோஸ், பருத்தித்துறை.**

# இருவரும் பார்கடலே!

நீ
பூமியை காதலிக்கிறாயா?
ஆம்! என்று சொல்லி
நீயும் தொடர் அலைகளை அனுப்பி
உன் காதலை சொல்லுகிறாய்.....

நானோ!
இல்லை என்று சொல்லி
என் காதலை தொடர் கவிதைகளால்
சொல்லிப் பார்க்கின்றேன்....

பெண்ணும் பூமியும் ஒன்றென்று
தெரியாமல் இருவரும்....
திருப்பி அடிக்கப்பட்ட அலைகளானோம்!

**குகன்- கிறிஸா, திருகோணமலை.**

# நினைத்து, நினைத்து சிரிக்க

மாதாந்தரச் சுற்றுப்பயணம் போகிற மெடிக்கல் ரெப் தங்குவதற்காக ஒரு ஹொட்டலுக்குப் போனார். அங்கே ஓர் அழகான இளம்பெண்ணைச் சந்தித்தார். அவள் கம்பனி கொடுக்கச் சம்மதிக்கவே இரண்டு பேரும் கணவன் மனைவி என்று சொல்லி அறை எடுத்துக்கொண்டார்கள்.

மூன்றுநாள் கழித்து அறையைக் காலிசெய்யும்போது ஒரு மாதவாடகைக்கு பில் வந்திருந்தது.

"ஏனப்பா... நான் மூன்று நாள்தானே தங்கினேன். முப்பது நாள் என்று பிழையாகப் போட்டிருக்கிறீர்களே?" என்று சீறினார் மெடிக்கல் ரெப்.

"ஆமாம் சார்... நீங்க மூன்று நாட்கள்தான் இருந்தீர்கள். ஆனால் உங்கள் மனைவி ஒரு மாதமா இங்கே தங்கியிருந்தாங்களே...!"

சர்க்கஸ்ஸில் சிங்கத்தைப் பழக்க ஆட்கள் தேவை என்ற விளம்பரத்தைப் பார்த்து மனுச்செய்த இளைஞனை நேர்முகத் தேர்வுக்காக வரச் சொன்னார்கள்.

சிங்கக் கூண்டிற்குப் பக்கத்தில் அவனைக் கூட்டிப் போனார்கள். உள்ளே சிங்கம்... கூடவே அழகான இளம்பெண்.

"இதுதான் லூசி... இப்ப இவங்கதான் சிங்கத்திற்குப் பயிற்சி கொடுக்கிறாங்க... மகா தைரியசாலி..." எனச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சிங்கம் லூசி பக்கத்தில் நெருக்கமாக நகர்ந்து அவள் முகத்தில் முத்தம் கொடுப்பது போல உரசி மடியில் முகம் வைத்துப் படுத்துக்கொண்டது.

"உன்னால் இப்படி முடியுமா?" என்று இளைஞனைக் கேட்டார்கள்.

"ஏன் முடியாது? சிங்கத்தை மட்டும் அந்தப் பக்கம் கூட்டிட்டுப் போயிடுங்க... செய்து காட்டுகிறேன்".

'வாக்கிங்' போன நாலு பெரிசுகள் சந்தித்துக்கொண்டார்கள்.ஒருத்தர் இப்படிப் பெருமையடித்துக் கொண்டார். "என் பிள்ளை பட்டணத்திலே வீடுகட்டி விற்கின்ற வியாபாரத்திலே இலட்சம் இலட்சமாகச் சம்பாதிக்கிறான்...போன மாசம் அவன் நண்பருக்கு ரெண்டுபெட்ரூம்' ஃபிளாட் ஒன்றைப் பிறந்த நாள் பரிசா கொடுத்திருக்கிறானென்றால் பார்த்துக்கொள்ளுங்கள்."

"என்னோட மகனும் பட்டணத்திலேதான் இருக்கிறான். கார் விற்பனையிலே அவன் நடத்துகிற கொம்பனிதான் நம்பர் வண். அவன் கூட இப்படித்தான் தன் நண்பருக்கு ஒரு புத்தம் புதுக் காரையே போனமாதம் ப்ரசன்ட் பண்ணினதா எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறான்" என அடுத்த பெரியவர் எடுத்துவிட்டார்.

அவர் முடிப்பதற்கு முன்பாகவே மூன்றாவது பெரியவர், "என் மகன் மட்டும் சாதாரணமா என்ன? பட்டணத்தில் பங்குச் சந்தையில் அவன் புலியாக்கும். அவனுக்கும் நண்பர்கள் என்றால் உயிர். இலட்ச ரூபாய் பெறுமதியான பங்குப் பத்திரங்களை சும்மா வைத்திரு என்று தூக்கிக் கொடுத்துட்டானாம்"

அதுவரை எதுவுமே பேசாது வந்த நான்காவது பெரியவர் எங்கேயோ பார்த்தபடி சொன்னார், "எனக்கு மகன் இல்லை. மகள்தான். மகா கெட்டிக்காரி. போனமாசம்தான் பட்டணத்திற்குப் போனா. அதுக்குள்ளே ஒரு ஃபிளட், கார், லட்ச ரூபாய் மதிப்புக்கு பங்குப் பத்திரம் அப்படி என்று சேர்த்துவிட்டாள் என்றால் பார்த்துக்குங்களேன்..."

**கவிதை நெஞ்சங்களுக்கு!**
**மரங்களை அழிக்காமல்**
**மலம் துடைக்க எடுப்பதற்கும்**
**அனுமதிக்காமல்**
**மின்திரை ஒளிர்வாக**
**வலைத் தளத்தில் விசுறுகிறார்கள்**
**கவிதைகளை!**
**எலி முதுகை விரல் தொட்டால்**
**எத்தனை ஆயிரம் வலைத் தளங்கள்!**
**அதில் எத்தனை லட்சம் கவிதைகள்!**
**இங்கே மாதிரிக்கு மூன்று கவிதைகள்.**

## எப்போது...

தங்கையின்
புத்தகப் பையில்
நோட்புக் ஒன்றில்
அழகிய கையெழுத்தில்
உனது பெயரைப்
பார்த்த பொழுதா...

பத்தாவதில்
பள்ளியிலேயே
நீதான் முதல்வி
என்ற செய்தியை
தங்கையின் மூலம்
கேட்டபொழுதா....

நீ படிக்கும்
கல்லூரியில்தான்
தானும் படிப்பேனென்று
அடம்பிடித்த தங்கைக்காக
அப்பாவிடம் பேசிய
அந்த நேரத்திலா...

பிறந்த நாளில்
பார்க்கும் ஆசையில்
தங்கையோடு வந்தும்
பார்க்காமலேயே
வாசலோடு திரும்பிய
அந்த நேரத்திலா...

சுற்றுலாவில் எடுத்ததாக
தங்கை கொடுத்த
நிழற்படத்தில் நீயிருப்பது
இடமா வலமா
என்றறியத் துடித்த
அந்த நேரத்திலா...

பார்க்கவும் இல்லை
பழகவும் இல்லை
பேசவும் இல்லை
பிரியவும் இல்லை
கேட்கவும் இல்லை
கிடைக்கவும் இல்லை....

ஆனாலும் மனதில்
ஆசையின் தொல்லை
எப்போது வந்தது
இதயத்தில் உணர்வ
என்பதை அறிவதில்
கடந்தது பொழுது...

இடையில் வந்தது
திருமணச் செய்தி
இடியினை மிஞ்சுது
இதயமும் வலிக்குது...

காதல் வந்ததை
அறியும் முன்னே
அது தந்த
ரணம் புரிந்தது....

**கு.முனியசாமி.**

## சின்னக்கவிதை

வெட்கப்படு பெண்ணே...!
உன் உதட்டில் பூக்க
அந்த புன்னகைக்கும்
ஆசை!

அந்த பூவின் கண்களில்
பொறாமை
உன் உதட்டில்
பூத்த புன்னகையைப்
பார்த்து!

அதிர்ஷ்ட மச்சத்திற்கும்
அதிர்ஷ்டம்தான்
உன்
கீழ் உதட்டின் ஓரத்தில்
சிரிக்க!

பெண்ணே!
என்னை கோபித்துக்
கொள்ளேன்,

## சிறப்புக் கவிதை



ப்ளீஸ்...!
உன் பிடியில் அந்த
கோபம் கூட
அழகுதான்!

மெல்ல நட பெண்ணே...!
நீ
புயலெனக் கடக்கும் போது
என்மேல் வீழும்
காற்றுகூட
என் உயிரை
அசைத்து பார்க்கிறது...!

எனை நோக்காதே
கண்ணே...!
நம் பார்வைகள்
கலந்தால் கரைவது
என் உயிர் மட்டும்தான்!

**ஆனந்தன்.**

## நிதர்சனம்

அக்கரையிலும் இக்கரையிலுமாய்
நானும் நீயும்
பரஸ்பரம் பரிமாறிக்கொள்ள
நாம் விட்ட காகிதக் கப்பல்கள்
கூழாங்கற்கள் இடித்து
கரை பல தாண்டி
கடந்து போயின.

சுவர் கோழி கூவி
மணற்துகள் உதறி
விடியும் பொழுதில் நான்
விழிக்கையில்
பச்சையம் மாறி
என்னிடமிருந்து
உதிர்ந்து போயிருந்தாய் நீ.

**எஸ்.வைதேஹி.**

# குழந்தையை நீராட்ட...



குழந்தைகளை நீராட்டுவது எப்பொழுதும் கஷ்டமான வேலைதான்! அதிலும் அனுபவமில்லாத இளம் தாய்மாருக்கு இது "எவரெஸ்ட்" ஏறுவதுபோல் கடினமான பணி! இந்த அடம் பிடிக்கும் குழந்தைகளை நீராட்டுவதற்குள் பாதி உயிர் போய் விடுகிறது எனச் சலித்துக்கொள்ளும் தாய்மார்களுக் குச் சில நீராட்டல் குறிப்புக்கள்.

"ஐயோ குளிக்கிறதா?" என்று சலித்துக் கொள்ளும் சிறுவர்களை "ஹைய்யா குளிப்போம்" என்று ஆவலோடு ஓடி வரும்படி செய்யலாம்.

ஆரம்பத்திலிருந்தே குழந்தையை வெதுவெதுப்பான நீரில் நீராட்டுங்கள். (இன்றைய மருத்துவர்களும் இதைத்தான் சிபார்சு செய்கிறார்கள்) அத்தோடு பயற்றம் மா அல்லது பேபி சோப் கொண்டு மென்மையாக "மஸாஜ்" செய்யுங்கள்.

குழந்தைகள் கொஞ்சம் பெரியவர்களானதும்' சின்ன "பாத்டப்"பில் அமரச் செய்து நீராட்டலாம். தானாகவே உட்காரப் பழகியதும் "பாத்டப்"பில் அமர்ந்தபடி சற்றுநேரம் தண்ணீரில் அளைந்து விளையாட அனுமதியுங்கள். அத்தோடு "சோப்" இல்லாத சுத்தமான நீராக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். பின்பு பாருங்கள், குளியலறைக்கு வரும் போதே குழந்தை குஷியாகி விடும்.

குழந்தைகள் ஓடியாடி நடக்கத் தொடங்கும்போது சின்னக் கோப்பை கொடுத்து தண்ணீர் ஊற்ற அனுமதியுங்கள். ஏனெனில் இந்தப் பருவத்தில் எதையும் தானே செய்து பார்ப்பதை அதிகம் விரும்புகிறது. பிறகு "சோப்" போடும் வேலையை மட்டும் நீங்கள் செய்தால் போதும்.

உடலை நீராட்டும்போது தமது பாட்டில் இருக்கும் குழந்தைகள் தலைக்கு ஊற்றும்போது கத்திச் சத்தமிடுவார்கள். இதற்குச் சில தாய்மார்களின் ஆரம்ப அணுகுமுறை தான் காரணம். அவர்கள் குழந்தையின் தலையைத் தேய்ப்பதைப் பார்த்தால் ஏதோ கரிபிடித்த பானையைத் தான் தேய்க்கிறார்களோ என்று சந்தேகம் வந்துவிடும்.

முதலில் தலைக்குத் தண்ணீரை ஊற்றாமல் உடலை நீராட்டிவிட்டு மெதுவாக அவர்களுக்குப் பிடித்தமான விஷயத்தைப் பேசியபடியே கண்களில் படாதபடி லேசாக அழுத்தம் கொடுத்து தலைக்கு "மஸாஜ்" செய்தாலே போதும். தலையில் நீரூற்ற "ஷவர்" உபயோகிப்பது உங்களுக்கு மட்டுமல்ல... குழந்தைக்கும் இலகுவாக இருக்கும். "எங்கள் மகன் நல்ல புத்திசாலி. தலைக்கு தண்ணீர் ஊற்றினாக்கூட பயந்து அழவே மாட்டான்" என்று பாராட்டுவது நன்றாகவே பயன் தரும்.

ஆரம்ப காலத்தில் கொஞ்சம் அன்பு, கொஞ்சம் பொறுமை காட்டி விட்டால் பிறகு குழந்தைகளுக்கு நீராடுவது என்பதே கொண்டாட்டமான விஷயமாகிவிடும். ■


செல்வாஸின்


சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்** X

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி 29- 06-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு சல்வார்? வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான் ☞ எஸ். சந்திரிகா, 13/106, அவிசாவளை வீதி, ஒறுகொடவத்தை, வெல்லம்பிட்டி.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


"சீதாவைக் கல்யாணம் செய்துக்க சம்மதிச் சுட்டியா?"

"எனக்கு வேற மார்க்கம் இருக்கறதா தெரியலை மது!"

"அனி, உன்னைப் பார்த்தா பரிதாபமா இருக்குது. முகம் கழுவிக்க... பளிச்சுனு டிரெஸ் பண்ணிக்க... என்கூட வா... ஒருத்தரை நீ சந்திக்கணும்.... உன் லை:ஃபே மாறிடும். வாழ்க்கைல ஒரு காரணம் ஏற்படும். அர்த்தம் விளங்கும்."

"யாரு? ஏதாவது டாக்டர்னா, நான் வரலை!"

"நீ வாயேன்!"

மது, அனிதாவைக் கீழ்ப்பாக்கம் தோட்டத்தில் ஓர் அமைதியான வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். அங்கே வாசலில் பல செருப்புக்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தன. மொஸைக் தரையில் ஜாக்கிரதையாக நடக்க வேண்டி இருந்தது. உள்ளே மதுவைப் பலர் அடையாளம் கண்டுகொண்டார்கள்.

"உன்னைப் பத்தி நான் எதுவுமே சொல்லலை. ஆனா, நீ அவங்களைச் சந்திச்ச உடனே பாரு... ஒரு பார்வையில உன் வாழ்க்கை முழுக்கத் தெரிஞ்சுப்பாங்க!"

"யாரு இது மது?"

"பாரேன்!"

தூய வெண்மையில் பல ஆண்கள் நடமாட, அனிதாவுக்கு அந்த இடத்து வாசனை பிடித்திருந்தது. சற்றே காய்ந்த மலர்களும், சந்தனமும், சருகும் எரியும் வாசனை.

"சாமியாரா?"

"கொஞ்சம் வெய்ட் பண்ணு!"

அந்த அறைக்குள் ஏழெட்டுப் பேர் உட்கார்ந்திருந்தார்கள். நடுவே ஒரு பெண்மணி மணப்பெண் போல உட்கார்ந்திருந்தாள். அவளருகே ஏராளமான பழங்களும் மற்ற காணிக்கைகளும் வைத்திருக்க, மதுவைப் பார்த்ததும், "வா, மது! உக்காரு! உம் பேர் என்னம்மா?" என்றாள்.

"அனிதா" என்றாள் மது.

"அனிதா உக்காரு. உனக்கு என்ன வேணும்கறது எனக்குத் தெரியும். முதல்ல அமரு!"

அனிதா இயக்கப்பட்டவள் போல உட்கார்ந்தாள். சுற்றிலும் பார்த்தாள். லேசாக ஒரு மின்விசிறி ஓடிக் கொண்டிருக்க, அந்தப் பெண்மணியின் எதிரேயிருந்தவருக்கு நாற்பது வயதிருக்கும்... அவரிடம் பேசிக்கொண்டிருந்தாள்.

"நீங்க இழந்தது அத்தனை சொத்தையும். ஆனா, நீங்க பெற்றது நிம்மதி. எந்த இழப்பிலயும் ஒரு பிறப்பு இருக்குது...இதை யோசிச்சுப் பாருங்க... எந்த இழப்பிலயும் ஒரு பிறப்பு. ஒரு பெறுதல் இருக்கு. சொத்தை இழந்தா நிம்மதி... சொத்தை இழந்தா ஆரோக்கியம்... இழப்பினால கிடைக்கிற நன்மைகளை எண்ணிப்பாருங்க... இது ஒண்ணுதான் நான் திருப்பித் திருப்பிச் சொல்றது. மனதின் அடித்தளத்தில் நாம யோக்கியமா இருக்கிறவரைக்கும் இழப்பு என்கிறதே கிடையாது. இழப்பு என்பது ஒரு வரமாவே இருக்கும். புரியுதா?"

அனிதாவைப் பார்த்தாள். அவள் கண்கள் கடல் நிறத்தில் இருந்தன. போய் தொட்டுப் பார்க்க வேண்டும் போல இருந்தது. தொட்டால் உடைந்து விடுவாள் போல...! மைகாட்! இத்தனை மென்மையான ஒரு பெண் இருக்க முடியுமா என்ன? ஜன்னல் திறந்து காற்று வீசினால் அதனுடன் விண்ணில் பறந்து போய் விடுவாள் போல... இங்கே கொஞ்ச நேரம் இளைப்பாறத் தான் வந்த உபதேவதை போல...

மற்றவர் அனைவரும் விலகியதும், மதுவும் அனியும் தனியாக அவளிடம் விடப்பட்டபோது,

"மது இருக்கலாமா?"

"இல்லை அனி... நான் போறேன்... நீ இவங்க கூடப் பேசு... என்ன வேணா பேசு!"

மது வெளியே செல்ல, அனிதாவும் அந்தப் பெண்மணியும் தனியாக இருந்தார்கள்.

"பேர் சொல்லு"

"அனிதா..."

"எம் பேர் தெரியுமா? ஆனந்தா! பேசு அனிதா உன் மனசில என்ன குறை?"

"என் வாழ்க்கை என்னுதில்லை... அது தான் குறை..."

"அது எதும் பெரிய குறை இல்லை பெண்ணே! நாம எல்லோரும் நம்ம வாழ்க்கையை நாமே நிர்ணயிக்கிறதா நினைக்கிறோம். அப்படி இல்லை. நம்ம ஒவ்வொரு கணமும் முன்னாலேயே கடவுளால் தீர்மானிக்கப்பட்டது. அதை ஏதோ நாம தீர்மானிச்சு நடக்கிறாப்பல பாவனை செய்யறோம். அவ்வளவு தான். இப்ப நீயும் நானும் பேசற ஒவ்வொரு வார்த்தையும் இதுக்கு முன்னாலயே எழுதி வைக்கப்பட்ட வார்த்தைகள். அதைத் தான் பேசறோம்!"

"உங்களை ஆனந்தான்னு கூப்பிடலாமா? என் வயசுதான் இருப்பீங்க போல... அதனால வேற மாதிரிக் கூப்பிடத் தயக்கமா இருக்கு..."

"எப்படி வேணா கூப்பிடு!"

"என்னைப் பத்திச் சொல்லவா ஆனந்தா! எனக்கு நடந்ததைப் பத்தி"

"சொல்ல வேண்டாம் தேவையில்லை."

"உங்களுக்குத் தெரியுமா?"

"சோகம் மட்டும்தான் தெரியும். அது போதும். சோகம்கறது பொது... அதுக்கு உண்டான வழிகள்தான் மாறுது. உன் சோகத்தின் விவரங்கள் எனக்குத் தேவையில்லை. என்னைக் கேளு பதில் சொல்றேன்."

"என்ன கேட்க?"

"எது வேணா கேளு! என் பதிலை மட்டும் கூர்ந்து கவனி!"

"நான் செய்தது சரியா?"

"நீ இன்னும் எதுவுமே செய்யலையே?"

"நான் என் அக்கா கூட அஸ்ஸாம் போகட்டுமா?"

"போ!"

"நான் சீதாவைக் கல்யாணம் பண்ணிக்கட்டுமா?"

"பண்ணிக்க... பண்ணிக்காத..."

"எப்படித் தீர்மானிப்பேன்?"

"நீ தீர்மானிக்க வேண்டாம். தீர்மானம் உன்கிட்ட வரும்..."

"எப்ப... எங்கே?"

"எப்ப வேணா... எங்க வேணா... வீட்டில... ப்ளாட்பாரத்தில... ரயில்ல... எங்க வேணா பளிச்சுன்னு வந்துரும்... ஸாட்டோரி (Satari) அது மனசை முதல்ல காலி பண்ணிடு... போதும்"

கதவு திறந்து, மற்றவர் உள்ளே வர... அந்தப் பெண்மணி, அனிதாவைப் புன்னகையால் தொட்டாள். அனிதாவுக்கு உள்ளம் முழுதும் நிறைந்திருந்தது. தன் கேள்விக்கு விடை கிடைத்துவிட்டது போலத்தான் உணர்ந்தாள்.

அனிதா வெளியே வந்ததும், மது, "எப்படி இருந்தது அனுபவம்?" என்றாள்.

அனிதா மௌனமாக இருந்தாள்.

"இவங்களைப் பார்க்கறதுக்கு வெளிநாட்டிலிருந்து எல்லாம் வராங்க. நானும் முதல்ல இது ஏதோ ஏமாத்து வித்தையோன்னு நினைச்சேன். ஒரு தடவை சந்திச்சதும் மாறிட்டேன் அனி. இதுவரை நாம இருந்ததெல்லாம் வேஸ்ட்டுன்னு ஆயிருச்சு! ஏழைகளுக்கு உதவியா ஏதாவது செய்யணும்னு வாலண்டரி சர்வீஸ்ல சேர்ந்துட்டேன். அனி, உனக்கு நிம்மதி நிச்சயம் கிடைக்கும். இவங்களை ஒருமுறை பார்த்துட்டே இல்லை..."

அனிதா பேசாமலேதான் வந்தாள். அந்தப் பதில்கள் திரும்பத் திரும்ப ஒலித்தன.

**"நீ இன்னும் எதுவுமே செய்யலையே! ... நீ தீர்மானிக்க வேண்டாம். தீர்மானம் உன்கிட்ட வரும்!"**

வீடு திரும்பியபோது சுகந்தி "எங்க போயிட்டே? ஊருக்குப் போறதுக்கு சாமான்லாம் கட்ட வேண்டாமா? பாதி நானே எடுத்து வைச்சிருக்கேன். எதுக்கும் உனக்கு வேணுங்கிறதெல்லாம் இருக்கா பாத்துரு அனி... சீதாதான் பாவம். உன் செருப்பைக் கூட அழகா ப்ளாஸ்டிக்ல போட்டு வெச்சிருக்கான். அவனும் எங்கேயோ கோட்டா கீட்டான்னு அடிச்சுப் புடிச்சு டிக்கெட் வாங்கிட்டான். சீதாதான் உனக்கு ஏத்தவன் அனி. இது தெரியாம நடுவில ஒரு மாயை வந்து மறைச்சு இப்ப விலகிடுத்து. இனிமே உனக்கு குரு தசை...!" என்றாள்.






**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

சீதாராமன் டாக்ஸி கொண்டு வந்தான். அனிதா நிதானமாக, பதட்டமில்லாமல் அத்தனை பேரிடமும் விடை பெற்றுக்கொண்டு டாக்ஸியில் ஏறிக் கொண்டாள்.

[அனிதா வருவாள்...]



மானுடம் ஜன்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை உணர்ந்தாரேல் - அவர்
ஊனுடல் தீயினும் உண்மை நிலைதவற
உடன்பாடு மாறுளதோ
-சுப்பிரமணிய பாரதியார்-



# நீர் எவ்வளவு விரும்பினீர்?

## பாப்பா முரசு சிறுகதை

**ஒரு** வயதான வியாபாரி, இறக்கும் தறுவாயில் தனது பக்கத்து வீட்டுக்காரரை அழைத்து ஒரு பண முடிப்பைக் கொடுத்து, "ஐயா! இதில் பத்தாயிரம் பொன் இருக்கிறது. எனக்கு உற்றார் உறவினர் யாருமில்லை. என் மகன் பெரியவனானதும், இந்தப் பணத்திலிருந்து உங்களுக்கு விருப்பமானதை அவனிடம் கொடுத்து விடுங்கள்" என்று கூறிவிட்டு இறந்தார்.

அந்த வியாபாரியின் பையன், பெரியவனானதும், பணத்தை வைத்திருந்த பக்கத்து வீட்டுக்காரர், தனக்கென்று தொள்ளாயிரம் பொன்னை எடுத்துக்கொண்டு, பையனிடம் ஆயிரம் பொன்னைக் கொடுத்தார். ஆனால், எல்லா விஷயமும் தெரிந்த அந்தப் பையன், அந்தப் பொன்னைப் பெற்றுக் கொள்ள மறுத்து, அவர் தன்னை ஏமாற்றுவதாக, நீதிபதி மரியாதை ராமனிடம் முறையிட்டான்.



மரியாதை ராமன் அந்தப் பக்கத்து வீட்டு மனிதரை அழைத்து விசாரித்தார்.

அந்த மனிதர், "ஐயா நீதிபதி அவர்களே! நான் அந்தப் பையனை ஏமாற்றவில்லை. அவன் தந்தை என்ன சொன்னாரோ அதையேதான் செய்திருக்கிறேன்" என்றார்.

"இவனது தந்தை என்ன சொன்னார்? அதை அப்படியே கூறும் பார்க்கலாம்!" என்றார் மரியாதை ராமன்.

"அவர் இறக்கும் தறுவாயில் என்னை அழைத்து, பத்தாயிரம் பொன் அடங்கிய இந்தப் பையை என்னிடம் கொடுத்து, எனக்கு உற்றார், உறவினர் யாருமில்லை. என் மகன் பெரியவனானதும் இந்தப் பணத்திலிருந்து உங்களுக்கு விருப்பமானதை அவனுக்குக் கொடுத்து விடுங்கள் என்று கூறி விட்டு இறந்துவிட்டார். அவ்வளவு தான் ஐயா அவர் கூறியது" என்றார் பக்கத்து வீட்டுக்காரர்.

"சரி! ஆனால், அவர் கூறியுள்ளபடியா நீர் நடந்துள்ளீர்?" என்று மீண்டும் கேட்டார் மரியாதை ராமன்.

"ஆமாம் ஐயா! அதிலிருந்து சிறிதுகூட நான் பிறழவில்லை. எனக்கு விருப்பமானது என்று நான் தொள்ளாயிரம் பொன்னை எடுத்துக்கொண்டு, மீதி ஆயிரம் பொன்னை அவனுக்குக் கொடுத்தேன். அவன் வாங்க மறுத்து, நான் ஏமாற்றுவதாகக் கூறி என் மேல் வழக்குத் தொடர்ந்துள்ளான்" என்றார் பக்கத்து வீட்டுக்காரர்.

அவர் கூறியதை உற்றுக் கவனித்த மரியாதை ராமன், "இதோ பாரும்! நீர் இந்தப் பையனை ஏமாற்றித்தான் இருக்கிறீர். இவனது தந்தை, நீ என்ன விரும்புகிறாயோ அதையே இவனுக்குக் கொடுக்கும்படி கூறியுள்ளார். உண்மைதானே?" என்று கேட்டார்.

"ஆமாம் ஐயா!" என்றார் பக்கத்து வீட்டுக்காரர்.

"நீர் எவ்வளவு விரும்பினீர்?"

"தொள்ளாயிரம் பொன்!"

"அப்படியென்றால், நீர் விரும்பிய இந்தத் தொள்ளாயிரம் பொன்னைத்தானே இந்தப் பையனுக்குக் கொடுக்க வேண்டும்!"

பக்கத்து வீட்டுக்காரர் திகைத்தார்.

வியாபாரி சொன்னதில் இப்படி ஒரு சூட்சமம் இருப்பதை இப்பொழுதுதான் உணர்ந்தார்.

வேறு வழியில்லை.

நீதிபதி வழங்கிய தீர்ப்பின்படி பெரிதாக அபகரிக்க நினைத்த தொள்ளாயிரம் பொன்னை, அந்த வியாபாரியின் பையனுக்குக் கொடுத்துவிட்டு, ஆயிரம் பொன்னை அவர் எடுத்து வைத்துக்கொண்டார்.

நீதிபதி மரியாதை ராமனின் சமயோசித புத்தியால் ஏழைச் சிறுவனுக்கு நீதி கிடைத்தது.

அவன், அவரை வாயார வாழ்த்தினான்.


## விடுகதைகளும் விடைகளும்

01. தட்டிவிட்டால் எட்டுமட்டும் பாய்வான், அவன் யார்?
02. மெல்லவே நடந்தபோதிலும் மேனி குலுங்கியது, அவள் யார்?
03. ஒற்றைக் கண்ணன் ஓடியாடி செருகி அடைகிறான், அவன் யார்?
04. ஒலி கொடுத்தால் வழி கிடைக்கும், அது என்ன?
05. அண்ணன் தம்பி ஐவர்; ஐவருமே ஆளுக்கொரு உயரம், அவர்கள் யார்?
06. முக்கண்ணன் தாகமும் தீர்ப்பான், அவன் யார்?
07. அழுதவனைப் பார்த்தால் சிரிக்கிறார்கள், அவன் யார்?
08. உப்பை உண்டவன் ஓயாமல் அலைகிறான், அவன் யார்?
09. நாலு காலுள்ளவன் நன்றிக்கு வாலுள்ளவன், அவன் யார்?
10. தண்ணீருக்குள் ஆடிக்கொண்டே அக்கரை போவான்; எக்கரையிலும் நடக்கக்கூட மாட்டான், அவன் யார்?

### விடைகள்

01. அம்பு 02. நத்தை
03. தையல் ஊசி
04. வாகனத்தில் உள்ள ஹோர்ண்
05. விரல்கள் 06. தேங்காய்
07. பிறந்த குழந்தை 08. கடல்
09. நாய் 10. படகு

## சிலந்தி வலை



**சி**லந்தியின் நூலிழை மிக மிக மெல்லியது. ஒவ்வொரு இழையும் ஒரு சென்ரி மீற்றரில் இலட்சத்தில் ஒரு பங்கே யுள்ளது.

இதில் ஆச்சரியப்படவைக்கும் தகவல் என்ன தெரியுமா? சிலந்தியின் ஒவ்வொரு நூலிழையும், ஒரு மெல்லிய இரும்புக் கம்பியின் பலத்திற்குச் சமமானதாக இருக்கிறது.

சில வகைச் சிலந்தியின் குஞ்சுச் சிலந்திகள் பலூன் போன்ற நூலிழையை வெளியேற்றுகின்றன. இந்த பலூன் நாலிழை 300 கிலோமீற்றர் தூரத்திற்கு உடையாமல் பறந்து செல்லும் தன்மையுள்ளது. இந்த நாலிழை பலூன்கள் 11 ஆயிரம் அடி உயரத்திற்குப் பறக்கவும் செய்கிறது.





## 'பல்'வேறு தகவல்கள்

**யா**னையின் வாயில் ஆகாரத்தை மென்று கூழாக்கும் பணியைச் செய்வது பக்கத்திற்கு இரண்டாக அமைந்துள்ள நான்கு பற்கள். இந்த நான்கு பற்களும் சில ஆண்டுகளுக்கு ஒரு முறை விழுந்து மறுபடியும் முளைக்கின்றன. இவ்வாறு ஐந்து முறை விழுந்து முளைத்ததும் கடைசி முறையாக விழுந்தபின் பற்கள் முளைப்பதில்லை.

**எ**லிகள் எதையாவது கடித்துப் பற்களின் கூர்மையான முனைகளைத் தேய்த்துக் கொள்கின்றன. புத்தகம், பேப்பர், ரப்பர், பிளாஸ்டிக் இன்னும் மற்ற பொருள்களைக் கடித்துக் குதறுவதெல்லாம் பற்களைத் தேய்த்துக் கொள்வதற்காகவே. எலிகள் இப்படிக் கண்டதையெல்லாம் கடித்துத் தனது பற்களைத் தேயச் செய்யாவிட்டால் அதன் முன்பற்கள் முன்றடி நீளம் வளர்ந்து சாப்பிட முடியாமல் போய்விடும்.

**பு**லியின் வேட்டைக்கு ஆதாரம் அதன் வாயில் அமைந்துள்ள நான்கு கோரப் பற்கள்தான்! இவற்றில் ஒன்று விழுந்துவிட்டாலும் புலியால் பெரிய பிராணிகளைக் கடித்துக் கிழித்துத் தின்ன முடியாது.

**கொ**ரில்லா குரங்குகளின் பற்கள் மனிதனின் பற்களைப் போலவே வடிவத்திலும், எண்ணிக்கையிலும் ஒத்திருக்கின்றன. ஆனால் பக்கவாட்டுப் பற்கள் வெகு கூர்மையானவை.

நத்தையின் நாக்கில் 135 வரிசைகளாக 14,175 நுண்ணிய பற்கள் உள்ளன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **29.06.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **451**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 449**

பரிசுக்குரியவர்:
**வி. ஆத்மஜன்**
17பி, மெண்டிஸ் மாவத்தை, ஹட்டன்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **ஜயதீப் விஜயகுமாரன்** கொ/புளூமெண்டால் த.வி., கொழும்பு-14. | **சஞ்ஜனா ஸ்ரீஜெயராம்** கொட்டகலை த.மி.வி., கொட்டகலை. |
| **என். பவித்திரன்** நீர்ப்பாசன விடுதி, குடியிருப்பு, வவுனியா. | **அ. கீர்த்திகா** பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார். |
| **பி. பர்வின்** பகினிகஹவெல, பிபிலை. | **எஸ்.கே. ருஸ்னி குறைஸ்** சன்ஜீதா வத்த, நுரைச்சோலை, புத்தளம். |
| **நிஷோன் பற்றசன்** கல்பே மாவத்தை, கந்தானை. | **ரீ.எச். அஹமது பழைல்** மட்/அப்துல்காதர் வித், ஐயங்கேணி, ஏறாவூர். |
| **எம். அர்ஜுன்** காசிம்துல்முல்லை தமிழ் வித்தியாலயம், கலஹா. | **சபீத கணபதிப்பிள்ளை** ஒன்ராறியோ, கனடா. |

## இந்த வாரப் புதிர்

இந்தத் தோசையை நான்கு ஆண்களுக்கும், நான்கு பெண்களுக்கும் பிரித்துக் கொடுக்க வேண்டும். ஆண்கள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பங்குகள் சமனாக இருக்க வேண்டும். பெண்களுக்கும் அப்படியே... ஒரேயொரு நிபந்தனை. தோசையை மூன்றே மூன்று முறைதான் வெட்டவேண்டும் எங்கே தோசையைச் சுட்டு, வெட்டிப் பகிர்ந்து கொடுங்கள் பார்ப்போம். முடியாதவர்கள் வரும் வாரம் வரை காத்திருங்கள்.

### அறிவுத்தேடல்

சென்றவாரப் புதிருக்கான விடை:

13 ஐ ஆறு தடவைகளும் 11 ஐ இரண்டு தடவைகளும் அடிக்க வேண்டும்.

# புதுவருடப் புன்னகை

பகலவன் இரவின் மடியில் தூக்கம் கொள்வதற்காக தன்னைத் தயார் செய்யும் நேரம். சுஜி அவளது வீட்டு முற்றத்திலுள்ள தொங்கு நாற்காலியில் சாய்ந்தவாறு கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னால் தனது புலன்களைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

பல்கலைக் கழக வாழ்க்கையில் ஒரு வானம்பாடியாக வாழ்ந்தவள் சுஜி. வீட்டில் பெற்றோருக்கு ஒரே பிள்ளை. அழகில், அறிவில், சுட்டித்தனத்தில் கூட மற்றவர்களை விட ஒரு படி உயர்வாகவே இருந்தாள். பல்கலைக் கழக 'லொள்ளு' மாணவர்களின் உதடுகளில் அடிக்கடி உச்சரிக்கப்பட்ட மந்திரமே சுஜி.

இரண்டாம் வருட பரீட்சைகளில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வேளையில், எல்லா இளசுகளின் மனதிலும் ஆரம்பிக்கும்போது சுகமாகவும், முடிவில் சிலருக்குச் சாதகத்தையும், பலருக்குப் பாதகத்தையும் விளைவிக்கும் அதே காதல் வைரஸ் அவளையும் விட்டு வைக்கவில்லை. பல்கலைக் கழக விரிவுரையாளர் விஷ்ணுவுடன் அவள் காதல் வயப்பட்டாள்.

இருவரும் ஒருவருக்கொருவர் புரிதலினால் ஏற்பட்ட காதலில் மிக சந்தோஷமாகச் சிறகடித்தனர். இருவர் வீட்டிலுமே பச்சைக் கொடி. இவ்வாறிருந்தும் சுஜி தனது பட்டப் படிப்பின் பின்னரே கல்யாணம் என்பதில் வைராக்கியமாக இருந்தாள்.

சுஜிக்கு ஏற்றாற் போல விஷ்ணுவும் மிக அழகானவன். இவர்களிருவரதும் காதல் பல்கலைக் கழக வட்டத்தில் பரவியதும் எல்லோர் கண்களும் அவர்களில்தான். காரணம் அவ்வளவு பொருத்தமான ஜோடி.

நாட்கள் அவைக்கேயுரித்தான வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தன. விஷ்ணுவுக்கு கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் ஆறுமாத மேற்படிப்பிற்கான புலமைப்பரிசில் கிடைத்தது. இந்த விடயத்தை உடனே சுஜிக்குச் சொல்ல வேண்டும் என்று அவளைத் தேடினான் விஷ்ணு. சுஜி வாசிகசாலையினுள் ஓர் புத்தகத்தில் புலன்செலுத்திக் கொண்டிருந்தாள். "சுஜி...சுஜி..." என அவளை வெளியே அழைத்தவன் அவளிடம் "சுஜி, உனக்கு நான் ஒரு குட்நியூஸ் சொல்லப்போறேன்" என்றான். அதற்குள் அவள் அவசரப்பட்டு "நீங்க எனக்குக் கிடைச்சதே ஒரு குட்நியூஸ்தானே. அதை விட என்ன பெரிசா?" என்றாள். "இல்லை சுஜி! எனக்கு கலிபோர்னியா யுனிவேர்சிட்டியில ஒரு சிக்ஸ்மந்த் ஸ்கொல் கிடைச்சிருக்கு" என்றான்.



அவளுக்கோ அது ஓர் பேரிடியாக இருந்தாலும் ஓர் குறுங்காலப் பிரிவுதானே என்று தனக்குத்தானே ஆறுதல் கூறிச் சுதாகரித்தவாறு "ஏய் விஷ்ணு! உண்மையா? இது உங்களுக்கு ஒரு கோல்டன் ஒப்பசூனிற்றி டோன்ற் மிஸ் இற்" என்றாள் முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு. அவள் இப் பிரிவை ஏற்றுக் கொள்வாளோ? என்று பயந்த விஷ்ணு அவளது சாதகமான பதிலைக் கேட்டதும் சந்தோஷமாகப் போவதற்குரிய ஆயத்தங்களைச் செய்தான்.

விஷ்ணு செல்வதற்குரிய நாளும் நெருங்கியது. சுஜி பெற்றோருடன் விமான நிலையம் சென்று மன வேதனையுடன் வழியனுப்பி வைத்தாள். ஒரு சிறு தற்காலிகப் பிரிவு தானே என்று கூறியவாறு விஷ்ணுவும் விடைபெற்றான்.

விஷ்ணு அவளைப் பிரிந்து சென்று நாட்கள் வாரங்களாகி, மாதங்களாகி வருடங்களாயின. அவனிடமிருந்து அவளுக்கோ இல்லை அவனது பெற்றோருக்கோ எந்தப் பதிலுமில்லை. செய்வதறியாது துடித்தனர்.

சுஜியினால் தாங்க முடியவில்லை. ஒவ்வொரு விநாடியும் அவனைப் பற்றிய நினைவுகளிலேயே துடித்தாள். புன்னகைக்கேயுரித்தான அவள் முகத்தில் மூன்று வருடங்களாகப் புன்னகை காணாமல் போனது. தாயை இழந்த மழலைபோலிருந்தது. அவளை எப்படியாவது தேற்றி விடலாம் எனப் பெற்றோர் முயன்று தோல்வி கண்டனர். அவளும், விஷ்ணுவின் பெற்றோரும் சேர்ந்து அமெரிக்கத் தூதரகத்திற்கு அனுப்பிய கடிதத்திற்கும் சாதகமான பதில் எதுவும் வரவில்லை.

சுஜியால் தன்னைச் சுதாகரித்துக் கொள்ள முடியவில்லை. அழுதழுது நீர் வற்றிய விழிகளுடன் அவள் தோற்றமே மாறியது. இதற்கிடையில் ஊர்வாய்களுக்கு விஷ்ணு, சுஜி பிரிவு இனிப்புடன் சேர்ந்த அவலாக இருந்தது. ஆளுக்கோர் கதையை விட்டெறிந்தனர். சுஜியும் பல கோணங்களில் சிந்தித்துச் சிந்தித்துப் பைத்தியம் பிடித்துவிடுவது போலிருந்தாள். மூன்று வருடங்களாக அவள் யாருடனும் கதைப்பதுமில்லை, நேரத்திற்குச் சாப்பிடுவதுமில்லை, சிரிப்பிற்கே இடமில்லை என்று ஓர் வித்தியாசமான கோலம் பூண்டாள்.

அவளுக்குத் தெரிந்தவர்கள் அனைவரும் வந்து சொல்லும் ஒவ்வோர் கதையிலும் அவள் குழம்பினாள். "இல்லை... இல்லை... என் விஷ்ணு எனக்கு ஒரு போதும் துரோகம் செய்யமாட்டான்" எனத் தனக்குத் தானே கூறி ஆறுதலடைந்தாள். விஷ்ணு சென்று ஆறு மாத காலத்திலேயே, மற்றவர் கேள்விகளுக்குப் பதில் கூறமுடியாதவளாய் பட்டப் படிப்பையும் மூன்றாம் ஆண்டுடன் நிறுத்தினாள்.

புதுவருடம் நெருங்கிக் கொண்டிருந்தது. ஊர் ஒரே குதூகலமாகக் களைகட்டி இருந்தது. இவளுக்கு மட்டும் மூன்று வருடங்களாகப் புதுவருடமே இல்லை. அன்று வெள்ளிக்கிழமை, வழமைபோல் இறைவனிடம் விஷ்ணுவைக் கேட்டு மன்றாடினாள்.

அப்போது வாயிலில் தபாற்காரனின் சைக்கிள் மணி கேட்டது. பூஜையறையில் நின்றிருந்தவளுக்கு மணி கேட்கவில்லை. தாய் சென்று கடிதத்தை வாங்கி வந்து வெளியே வந்த சுஜியிடம் கொடுத்தாள்.

சுஜி கடிதத்தை அவசர அவசரமாகப் பிரித்தாள். கடிதத்தினூடே புலனைச் செலுத்தியவளின் கண்களினால் நயாகராவே பெருக்கெடுத்தது. தாய் ஒன்றுமறியாதவளாய் "என்னம்மா சுஜி?" என வினவினாள். "அம்மா விஷ்ணு இருக்காரும்மா... அமெரிக்க தூதரகத்தால கடிதம் போட்டிருக்காங்க கலிபோர்னியா யுனிவர்சிட்டியில மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில, அவங்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில நடந்த சண்டையில ஏற்பட்ட ஓர் கொலையில இவருக்கும் சம்பந்தம் என்று பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு, இப்ப கேஸ் முடிஞ்சு, அவங்களே விடுதலை செஞ்சு அனுப்பி வைக்கிறாங்களாம்" என்று முகம் முழுக்கப் பூரிப்போடு கூறினாள். அந்தப் புன்னகையையே அவள் பெற்றோரும் எதிர்பார்த்தனர்.

புதுவருடத்தன்று விஷ்ணு வந்து சேர்ந்தான். விஷ்ணுவைக் கண்டதும் அவளின் புன்னகை மின்னல், மூன்று வருடங்களின் பின் மீண்டும் தோன்றியது. ஓடிச்சென்று விஷ்ணுவைக் கட்டியணைத்து அழுதாள். வீண் பழியால் மூன்று வருடப் பிரிவினைத் தாங்காத விஷ்ணுவும் அவளைக் கண்டழுதான்.

அன்று அவள் சிந்திய புதுவருடப் புன்னகை ஒரே நாளிலே அவளது பழைய தோற்றத்தைக் காட்டியது. இருவரதும் பெற்றோர்கள் எதிர் பார்த்த அப் புதுவருடப் புன்னகை அவர்களையும் ஆனந்தத்திலாழ்த்தியது. ●

**அமிர்தானந்தன், காரைதீவு**

---

# சாக்கடைச் சமூகம்

நேரம் செல்லச் செல்ல மனம் படபடத்தவாறு ஒரு தட்டிவானாவது வரக்கூடாதா என ஏங்கிக் கொண்டு நின்றவனது கண்களில் பஸ் வருவது தெரிந்ததும், ஓடிச் சென்று தாவி ஏறிக் கொண்டான். வேலை செய்த களைப்பு, காலையில் சாப்பிடாத தவிப்பு இத்தனையும் சேர்ந்து அவனை வாட்டியது. பஸ்ஸில் ஏறிக் கொண்டவன் தனக்கென ஒரு 'சீற்'றைத் தக்க வைக்க முடியாவிட்டாலும் வெளியே காற்றைச் சுவாசித்து நிற்பதற்கு ஓர் இடம் கிடைத்ததே பெரிது என எண்ணிக் கொண்டான். அவ்வளவு நெரிசலான சனம். அவனது மனம் வீட்டை நோக்கியே சிந்தித்துக் கொண்டிருந்தது. ஆனாலும், அவனுக்கு அருகில் நின்ற அந்த வாட்டசாட்டமான இளைஞனோ பஸ் பிரேக் பிடிக்கும்போது சுரேஷின் முதுகிலேயே வந்து தானும் பிரேக் பிடித்தான். "என்னடா மனிதப் பிறப்புக்கள்? நானும் பணம் கொடுத்துத்தானே பஸ்சில் ஏறினேன்" என அலுத்துக் கொண்டே முணுமுணுத்தான். இவனது வார்த்தைகள் அவனது காதுகளில் விழுந்ததோ என்னவோ இவனை ஒருமாதிரி முறைத்துப் பார்த்துக் கொண்டு சற்றுத் தள்ளி நின்றான்.

வீடு வந்து சேரும் போது மாலை ஆறு மணியென சுரேஷின் கைக்கடிகாரம் காட்டியது. விறுவிறுவென கைகால் கழுவும் நோக்குடன் கைவாளியை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் செல்ல முயன்றவனை, மனைவியின் கேள்வி இடை நிறுத்தியது. "இஞ்சாருங்கோப்பா... அந்தக் கிணற்றிலை இனித் தண்ணி அள்ளப் போகாதையுங்கோ. காலமை அதுகளோடை கத்துப்பட்டது காணும். இவ்வளவும் பேசின பிறகும் உங்களுக்கு ரோச நரம்பில்லையோ" எனப் பொரிந்து தள்ளினாள். "நான் இண்டைக்கு அதிலை தண்ணி அள்ளி முகம் கழுவுறது கழுவுறதுதான். பாப்பம் அவையின்ரை கெட்டித்தனத்தை" என்று கூறியவாறு நடந்தான் சுரேஷ். இதற்கு மேல் எப்படிச் சொன்னாலும் கேட்கமாட்டார் என்று விட்டுவிட்டாள் கமலி. அந்தக் கிணறு சுரேஷ் வீட்டிற்கும் பக்கத்து தணிகாசலம் வீட்டிற்கும் பொதுவான பங்குக் கிணறு. சுரேஷ் பளையிலிருந்து இடம்பெயர்ந்து வீடு தேடி அலைந்த போதுதான் அந்த வீடு அவனிடம் சிக்கியது. கிணறு, கக்கூசு என அனைத்துமிருந்தாலும், வீட்டுக்காரர் ஒரு கண்டிஷன் போட்டே அவனை இருத்தினார். "நான் கொழும்புக்குப் போட்டு வரும்வரையும் இருக்கவேணும். வந்தாப் பிறகு வீட்டை விடவேணும். மற்றது என்னெண்டால் சுரேஷ்... எனது பக்கத்து வீட்டுத் தணிகாசலம் என்னோடை கோவம். அதனால நீங்களும் அவனோட கதைக்கக் கூடாது. இது ரெண்டுக்கும் சரியெண்டால் நீங்கள் இப்பவே இருக்கலாம்"



அவனது உறவினர் நண்பர்கள் எல்லாம் வீடற்று வீதிகளிலும் அகதி முகாம்களிலும் நாதியற்று இருந்த போது, அவனுக்கு இந்த வீடு எல்லா வசதிகளுடனும் கிடைத்தது இறைவன் செயல் என்றே சொல்ல வேண்டி இருந்தது. அவனும் பெரு மகிழ்ச்சியுடன் அன்றே குடிபுகுந்தான். ஆனால் எதிர்வீட்டுத் தணிகாசலம் அவர்களை விட்டபாடில்லை. "சவர்க்காரத் தண்ணி கிணத்துக்கைபோகுது. குளிக்கிற தண்ணி இஞ்சாலை கிணத்துக்கை பறக்குது" எண்டு தினமும் கிணத்துக்கு மறுபக்கம் நின்று சத்தம் போடுவார். தன்பாட்டுக்குப் பேசும் அந்த வார்த்தை அவருக்கு ஒரு குறளாகவே மாறிவிட்டது.

நாட்கள் நகர்ந்தன. ஒரு நாள் தணிகாசலம் பேசும்போது "எளிய சனம்... அங்கை தண்ணிக்கு வழியில்லாது, சவர்த் தண்ணியைக் குடிச்சுக் கொண்டு, ஒரு பிடி சோற்றுக்கு வழியில்லாது, இப்ப அரசாங்கம் குடுக்கிற நிவாரணத்தைத் திண்டுட்டு சவர்க்காரம் தேய்க்கிற மாதிரி..." எனப் பெரிதாகச் சத்தமிட்டுச் சொல்லி விட்டு கைகொட்டி நகைத்தார்.

தணிகாசலத்தாரின் சொற்கள் சுரேஷின் மனத்தில் ஈட்டியாகப் பாய்ந்தது. இவ்வளவு நாளும் பெரியவர், இடம்பெயர்ந்து வந்திட்டோமே என்று சமாளித்து நடந்தான். இப்போது அணை கடந்த வெள்ளம் போலக் கோபத்தின் உச்சிக்கே சென்று விட்டான். "எடேய் தணிகாசலம்... உன்ரை கிணத்திலை நாங்கள் ஒண்டும் சொறிய வரேல்லை. முதலாளியின்ரை கிணத்திலைதான் குளிக்கிறம். உனக்கிருக்கிற அதே உரிமைதான் எனக்கும் இருக்குது" என ஆவேசமாய்க் கத்தினான். வாய்த் தகராறு கைகலப்பாக மாறுமுன்னே தணிகாசலத்தாரை அவரது உறவினரும் சுரேஷைக் கமலியும் என ஒவ்வொரு பக்கமாக இழுத்துச் சென்றதால் அன்று நடந்திருக்க வேண்டிய ஒரு வெட்டுக் குத்து, இரத்தக் களரி இல்லாது முடிவடைந்தது.

★ ★ ★

இப்பொழுதும் காலையில் நடந்ததை மறக்கவில்லையாயினும், தனது முதலாளியின் கிணறு என்ற உரிமையில்தான் அவன் இப்பொழுதும் செல்கிறான். முகம் கழுவச் சென்றவன் கிணற்றடியில் ஏதோ துர்நாற்றம் வீசுவதை எண்ணி அங்குமிங்கும் டோர்ச்சை அடித்தான். கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஒன்றையும் காணவில்லை. "அது எங்கையோ தூரத்திலயாக்கும், காத்தோட செத்த மணம் வருகுது" எனத் தனக்குத்தானே சொல்லிக் கொண்டு நடந்தான். கிணற்றடியை அண்மிக்க அண்மிக்க நாற்றம் கூடிக் கொண்டே வந்தது. கிணற்றில் வாளியைப் போட்டு நீரள்ள முனைந்தவனுக்கு நாற்றம் மேலும் மேலும் கூடியது. மீண்டும் ஒருமுறை கிணற்றைச் சுற்றி டோச் அடித்துப் பார்த்தான். ஒன்றையும் காணவில்லை. இறுதியாகக் கிணற்றுக்குள் பார்த்தான். கைகள் இறுக்கமாக வாளியைப் பற்றிக் கொண்டன. வாளி மேலும் கீழும் அசைய இடங் கொடுக்காத பிடி அது. மீண்டும் மீண்டும் உற்றுப் பார்த்தான். மர்மப் பொருளாய், தேங்காய் மாதிரித் தெரிய நன்றாக உற்றுப் பார்த்தான். ஒரு செத்த நாய், கழுத்து வெட்டப்பட்ட நிலையில்... கண்களால் நம்ப முடியவில்லை. உடல் சிதம்பி... பருத்து... அவனால் பார்க்கவே முடியவில்லை. வாந்தி வருமாப் போல் ஏதோ செய்தது. அப்போது தான் காலையில் தணிகாசலம் கூறிய வார்த்தைகள் சன்னமாய் ஒலித்தது. "இனிமேல் நீ இஞ்சை வந்து தண்ணி அள்ளினாயெண்டால், ஒரு அப்பாவியின் உயிர் பலியாகும்" கப்பியிலிருந்து வாளியை கழற்றிய சுரேஷ் அப்பாலுள்ள பொதுக் கிணற்றை நோக்கி நடக்கின்றான். இடம் பெயர்ந்து வாழும் இக்கட்டான நிலையில் இப்போது அவனால் வேறு என்ன செய்யமுடியும்? ■

**சி. திருச்செந்தூரான், மிருசுவில்**

# ஒரு கைதியின் கதை

## 07

"எவ்வளவு நல்ல மனசும்மா உனக்கு!" என்றார் பொறுப்பாளர், சற்றே திகைத்து.

அபிதா நடப்பது எதுவும் புரியாமல் குழப்பத்துடன் பார்த்தாள்.

பரமேஷ்வர் கொண்டு வந்து கொடுத்த இரண்டு லட்சத்தையும் எடுத்து மேஜை மீது வைத்தான் சந்திரமோகன்.

"இந்தப் பணத்தை நம் முதியோர் இல்லத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள், அய்யா....ரசீதை அபிதா என்ற பெயருக்குக் கொடுத்து விடுங்கள்...."

"ரொம்ப நன்றிம்மா!" என்றார், பொறுப்பாளர் மலர்ந்த முகத்துடன்.

அபிதா பொதுவாகப் புன்னகைத்து வைத்தாள்.

நினைத்திருந்தால் சந்திரமோகனே அந்தப் பணத்தை தனக்கென எடுத்துக் கொண்டிருக்க முடியும். முதியவர்கள் இல்லத்திற்கு பணத்தை அப்படியே தூக்கிக் கொடுப்பது என்றால் எவ்வளவு பரந்த பெரிய மனசு இருக்க வேண்டும்! அவனை அவள் பார்த்த பார்வையில் ஒரு சின்ன மாற்றம் வந்திருந்தது.

**ஹோ**ட்டல் கன்யா.

போலீஸ் இன்ஸ்பெக்டரின் முன்னிலையில், அந்த அறை திறக்கப்பட்டது. அறை காலியாக இருந்தது.

"காலி பண்ணிக் கொண்டு போவதாகக் கூட அவன் சொல்லவில்லை, இன்ஸ்பெக்டர்..." என்று கையைப் பிசைந்தார், ஹோட்டல் மானேஜர்.



ஒரு பெட்டியோ, ஒரு செட் உடையோ, பாத்ரூமில் பிளேடோ கூட இல்லையென்றால், அவன் மொத்தமாக காலி பண்ணிக் கொண்டு போய் விட்டான் என்றுதானே அர்த்தம்.

இன்ஸ்பெக்டர் அவனைப் பற்றிய அடையாளம் ஏதாவது கிடைக்கிறதா என்று பார்த்தார்.

அறையின் குறுக்கில் கட்டப்பட்டிருந்த கறுப்புத் திரையைப் பார்த்ததும் மானேஜர் ஆச்சரியமானார்.

"இது எங்களுடையது இல்லை" என்றார்.

"அவனே கொண்டு வந்திருக்கிறான்.... இந்தத் திரைக்கு என்ன அவசியம் வந்தது?"

இன்ஸ்பெக்டர் இந்தியராஜாவின் நெற்றி கேள்விகளால் சுருங்கியது.

அந்தத் திரைத் துணியின் கீழ் விளிம்பருகே சதுரமாக ஒரு வெள்ளைப் பரப்பு தெரிந்தது.

திரையை மேலே உயர்த்தி அதை ஆராய்ந்தார்.

அது ஒரு ஸ்டிக்கர் அந்த ஸ்டிகரில்-

அந்த திரைத் துணியை விற்ற கடையின் பெயரும் விலைக் குறிப்பும் பதியப்பட்டிருந்தன.

இன்ஸ்பெக்டரின் முகத்தில் மெல்லிய சந்தோஷம் மலர்ந்தது.

"**எ**னக்கு சில விஷயங்கள் ஆச்சரியமாயிருக்கின்றன" என்றாள், அபிதா காப்பியை உறிஞ்சிக் கொண்டே.

"என்ன?" சந்திரமோகன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"நான் மிகவும் மதிப்பு வைத்திருந்த என்னுடைய அப்பா என் வயசேயிருக்கும் ஒரு பெண்ணிடம் கேவலமாக நடந்து கொண்டது ஒரு அதிர்ச்சி. நீ கேசட்டை மட்டும் போட்டுக் காட்டியிருந்தால் நான் நம்பியிருக்க மாட்டேன்.... ஏதோ தகிடுதத்தம் பண்ணி என் அப்பாவைப் போல் படம் எடுத்து விட்டதாகத்தான் நினைத்திருப்பேன்.... ஆனால், அவரே நேரில் வந்து பேசியதைப் பார்த்ததும் நான் மிக அதிர்ந்து விட்டேன்...."

"அது அதிர்ச்சி. ஆச்சரியம் என்ன?"

"காதம்பரியின் உதவி இல்லை என்று நீ சொன்னதை நம்பினால், அந்த வீடியோவை எடுக்க நீ நிறைய கஷ்டப்பட்டிருக்க வேண்டும்."

"ஆமாம்... காதம்பரி வீட்டில் இல்லை என்று நீ சொன்னதை நம்பினால், அந்த வீடியோவை எடுக்க நீ நிறைய கஷ்டப்பட்டிருக்க வேண்டும்."

"ஆமாம்...காதம்பரி வீட்டில் இல்லாத நேரமாகப் பார்த்து உள்ளே நுழைந்து.... படுக்கையறையில் இருந்த ஒரே ஒரு பரண் அலமாரியில் தவழ்ந்தபடி உட்கார்ந்து ராத்திரி பூரா அவஸ்தைப்பட்டேன்...."

"அவ்வளவு சிரமப்பட்டு எடுத்த வீடியோவிற்கு நீ பணம் கேட்டது நியாயமா இல்லையா என்பது ஒரு பக்கம். அப்படிக் கிடைத்த பணத்தில் ஒரு பைசா கூட உனக்காக வைத்துக் கொள்ளாமல் எதற்காக அந்த முதியோர் இல்லத்தில் கொடுத்து விட்டாய்?"

அவன் விழிகள் நனைந்திருந்தன.

"அந்த இல்லத்தில்தான் மூன்று வருடங்கள் நான் இல்லாத போது என் அம்மாவைப் பார்த்துக் கொண்டார்கள்..." அவன் குரல் தழுதழுத்திருந்தது.

"நீ இல்லாத போது என்றால்? நீ போகும் இடத்திற்கு அம்மாவையும் அழைத்துக்கொண்டு போய் வைத்துக் கொண்டிருக்கலாமே!"

"நான் அமெரிக்காவிற்கோ, ஆபிரிக்காவிற்கோ போயிருந்தேன் என்று நினைத்து விட்டாயா? இதே ஊரில்தான் இருந்தேன்... ஆனால், அம்மாவைப் பிரிந்து..."

"ஏன்?"

"நான் போயிருந்த இடம் சிறைச்சாலை. அங்கே என் அம்மாவை அழைத்துப் போய் வைத்துக் கொள்ள முடியவில்லை."

சிறைச்சாலை என்ற வார்த்தையை கேட்டதும், அபிதா நாற்காலியை அவசரமாக சற்று பின்னால் நகர்த்திக் கொண்டாள்.

ரெஸ்டாரெண்டில் சிலர் திரும்பிப் பார்த்தார்கள்.

சந்திரமோகன் விரக்தியானதொரு புன்னகையை அணிந்தான்.

"பயந்து விட்டாயா? நான் செய்த குற்றம் என்ன என்று நீ தெரிந்து கொள்ள வேண்டாமா?"

அபிதா தன் செயலுக்கு தானே வெட்கப்பட்டவளாக "ஸாரி..." என்றாள். "சொல் உன்னைப் பற்றி சொல்..." என்று முகவாயில் கை பதித்து அவன் முகத்தையே பார்த்தாள்.

சந்திரமோகன் சொல்ல ஆரம்பித்தான்...

எங்கள் குடும்பம் சின்னது. நான், என் அம்மா இரண்டே பேர்தான்.

அப்பா இல்லாத குறை தெரியாமல் அம்மாதான் வளர்த்தாள். சமையல் வேலை, துணி துவைக்கும் வேலை, ஆஸ்பத்திரியில் ஆயா வேலை என்று என்னென்னவோ வேலைகள் எல்லாம் செய்து என்னைப் பள்ளிக்கு அனுப்பினாள். பள்ளிப்படிப்பு முடிந்தது தொழில்கல்வி ஆர்வத்துடன் படித்தேன். இருபதாவது வயதில் வேலைக்குச் சேர்ந்தேன்.

மல்லையா லேத் ஒர்க்ஸ் என்று கேள்விப்பட்டிருக்கிறாயா? பிரபலமான தொழிற்சாலை முதலாளி மல்லையா தங்கமானவர். ஆனால், அவருடைய பார்ட்னர் கிருஷ்ணதாஷ் என்பவர் கயவன்.

மல்லையா தன் பார்ட்டனரை உயிருக்குயிரான நண்பனாக நினைத்திருந்தார். அவரை நம்பி அத்தனை பொறுப்பையும் விட்டிருந்தார். வெளிநாட்டில் இருந்தார்.

கிருஷ்ணதாஸ் தொழிலாளர்களுக்கு முழு சம்பளம் கொடுக்க மாட்டார். ஆனால், கொடுத்த தொகையை விடக் கூடுதலான தொகைக்கு கையெழுத்து போடச் சொல்லி வற்புறுத்துவார். தொழிலாளர்கள் எல்லோருக்குமே அவர் மீது ஒரு வெறுப்பு இருந்தது. யூனியன் தலைவரை எப்படியோ காசு கொடுத்து வாங்கி விட்டார் கிருஷ்ணதாஸ். அதனால் தொழிலாளர்களால் எந்த எதிர்ப்பும் காட்ட முடியாத நிலை.

மூன்று, நான்கு வருடங்களுக்கு மேலாக இந்த அவல நிலை நீடித்திருந்தது தெரியாமல் நான் போய் புதிதாக வேலைக்கு சேர்ந்தேன். வேலையில் சேர்ந்து குறைந்த பட்சம் ஆறு மாதமாவது ஆனால்தான் யூனியனில் உறுப்பினராகலாம் என்று ஒரு விதிமுறை இருந்தது.

எழுதுவது

**சுபா**

வேலை கிடைத்ததில் எனக்கு பெருமகிழ்ச்சி, என் அம்மாவை வேலைக்குப் போக வேண்டாம் என்று தடுத்து விட்டேன். எனக்கு வேலை கிடைப்பதற்காகக் காத்திருந்தது போல் அம்மாவுக்கும் உடல் நிலை தளர்ந்து விட்டது. ஆஸ்த்மா கொடுமை. மூச்சுத் திணறல்.

அம்மாவை உட்கார வைத்து கவனித்துக் கொள்ளும் பொறுப்பு கிடைத்த சந்தோஷத்தில் நான் இருந்த போது தான் அந்த அசம்பாவிதம் நடந்தது.

தொழிற்சாலையில் ரங்கசாமி என்று ஒரு மூத்த தொழிலாளி வேலை செய்யும் போது இயந்திரத்தில் அவர் கை மாட்டிக் கொண்டது. கை அப்படியே வெட்டுப்பட்டு ரத்தம் கொட்டியது.

(கைதியின் கதை தொடரும்)

# ஆறு மனமே ஆறு!

## சிறுவர் துஷ்பிரயோகம்

**வி**மலா இன்று தன் மகன் குமாரின் காற்சட்டையைத் துவைக்க எடுத்துப் போடும்போது அதைக் கவனித்தாள்.

கடந்த சில நாட்களாகக் குமாரின் காற்சட்டையில் சில இடங்களில் வெள்ளையாகக் காய்ந்து, ஒட்டிப் போய் இருப்பதைப் பார்த்திருந்த போதும், குமார் மூக்குநீரைச் சீறிக் காற்சட்டையில் துடைத்திருக்கலாம் என்றே எண்ணினாள். ஆனாலும், குமார் தன்னை மிகச் சுத்தமாக வைத்திருப்பதையே விரும்புவான். மூக்கு நீரைத் தன் சட்டைகளிலே துடைக்கமாட்டான். அவனுக்குத் தடிமன் வருவதே குறைவு. ஆனாலும்,



அவனுக்குத் தடிமன்தானா? என்பதை இருதினங்களாக அவதானித்ததில், அவனுக்குத் தடிமன் இல்லை என்ற தீர்மானத்திற்கு வந்தாள்.

நான்கு குழந்தைகளுக்குத் தாயான விமலாவுக்குக் குமாரின் காற்சட்டையில் காய்ந்து, ஒட்டியிருந்தது அதுவாகத்தான் இருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவனுக்கு வயது பதினொன்றுதானே என்பதால் சரியான தீர்மானமெடுக்க முடியாமல் தன் கணவனிடம் குமாரின் காற்சட்டையைக் காட்டினாள்.

கணவன் காற்சட்டையைப் பார்த்துவிட்டு விஷயத்தைப் புரிந்து கொண்டார். மனைவியின் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தினார். "எதற்கும் வேலைக்குப் போய்விட்டு வந்து கவனித்துக்கொள்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

விமலாவுக்கு மனதிலே குழப்பம். வேலை எதுவும் செய்யமுடியவில்லை. முகாம் தலைவியிடம் சென்று விபரத்தைச் சொன்னாள். முகாம் தலைவி பிரச்சனையைக் கேட்டுவிட்டு, விமலாவையும் கூட்டிக்கொண்டு எனது அலுவலகத்திற்கு வந்தார்.

முகாம் தலைவியையும், விமலாவையும் வரவேற்று என்முன்னிருந்த இருக்கைகளில் அமரச் சொன்னேன். இருவரும் அமர்ந்தார்கள். விமலா பதற்றத்துடன் யோசித்துக்கொண்டிருந்தாள். அவள் பிரச்சனைகளைச் சொல்லத் தயங்குவது தெரிந்தது. முகாம் தலைவியே முதலில் விடயத்தை ஆரம்பித்தாள். அவள் கூறியதை உன்னிப்பாகக் கேட்டு,அறிந்து கொண்டேன். ஆயினும், பிரச்சனைக்குட்பட்டவரிடமிருந்து பிரச்சனைகளை அறிய வேண்டுமென்பது எனது நோக்கமாக இருந்தது.

"மனம் விட்டுப் பேசு! நோய்விட்டுப் போகும்" என்ற சுலோகம் என் பின்னே, சுவரில் மாட்டுப்பட்டிருந்தது. விமலாவிடம் அதைப் படிக்கச் சொன்னேன். அவள் படித்துவிட்டுச் சிரித்தாள். விமலாவைப் பேசவைக்க நான் அவரிடம், "உங்கள் சொந்த ஊர் எது?" என்றேன்.

"கிளிநொச்சி, ஜெயபுரம்" என்றாள் விமலா.

"எப்போது இந்தியாவுக்கு வந்தீர்கள்?"

"1990 ம் ஆண்டு வந்து திருச்சி மாவட்ட முகாமில் இருக்கிறோம்" என்றாள்.

"கணவன் என்ன செய்கிறார்?"

"கூலி வேலைக்குச் செல்கிறார்..."

"குழந்தைகள்..."

"நான்கு..."

"பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?"

"எல்லோரும் படிக்கிறார்கள்..."

விமலா தயக்கமின்றி இயல்பாக உரையாடினாள். முகாம் தலைவியைச் சற்று வெளியில் இருக்குமாறு கூறி வெளியே அனுப்பினேன்.

"சரி! இப்போது சொல்லுங்கள்... உங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனை என்ன?"

விமலா சொன்னாள்.

**எஸ்.பி.லெம்பட்**

"எனது இரண்டாவது மகன் குமார். வயது பதினொன்று. ஆறாம் வகுப்பில் படிக்கிறான். சில நாட்களாக அவனுடைய காற்சட்டையில் பசைபோலக் காய்ந்து போயிருக்கும். அது ஆண்களின் விந்துதான் காய்ந்துபோயிருக்கிறது" என்று உறுதியாகச் சொன்னாள்.

"இதைப் பற்றிக் குமாரிடம் கேட்டீர்களா?"

"இல்லை..." என்றாள் விமலா.

"உங்கள் மகன் பாடசாலையிலிருந்து எத்தனை மணிக்கு முகாம் திரும்புவார்?"

"இரண்டு மணிக்கு..."

"பிறகு...?"

"சாப்பிட்டு விட்டு, எனக்குச் சில உதவிகள் செய்து தருவான். கடைக்குப் போவான். ஐந்து மணிக்கு முகாமில் தொண்டு நிறுவனத்தால் நடாத்தப்படும் மாலைநேர வகுப்புக்குச் செல்வான்..."

"எத்தனை மணிக்குத் திரும்பி வருவான்?"

"இரவு எட்டு மணிக்கு..." என்றாள் விமலா.

"இது விடயத்தில், நீங்கள் யார் மீதாவது சந்தேகப்படுகிறீர்களா?"

"மாலை நேர வகுப்பில் படிப்பிக்கும் தயா மாஸ்டரைப் பற்றிச் சென்ற மாதம் தவறான கதையொன்று வந்தது..."

"சரி! நீங்களோ, உங்கள் கணவரோ உங்கள் மகன் குமாரிடம் இதைப் பற்றி எதுவும் கதைக்க வேண்டாம். நாளைக்குக் குமாரை என்னிடம் அழைத்து வாருங்கள்" என்றேன்.

அதற்கு விமலா "ஆம்..." என்று தலையாட்டினாள்.

(தொடர்ந்து வரும்...)

# "தாயகக் கோட்பாடு" ஒரு பிரிவினையல்ல!

தமிழர்களின் தாயகம் பற்றிய சர்ச்சை பரவலாக எழுந்துள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களும் தாயகக் கோட்பாட்டைத் தான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று ஒன்றுக்கு மேற்பட்ட தடவை தெரிவித்துள்ளார். பௌத்த பீடங்களின் மகா சந்நிதானங்களும் இவ்வாறுதான் குரல் எழுப்புகிறார்கள்.

ஒரு சமூகத்தின் தாயகம் பற்றிய கருத்து தீண்டத் தகாதது போலவும் தீட்டுப்பட்டு விடும் விடயம் போலவும் பிரிவினைக் கோட்பாடாகவும் சில வறட்டுத்தனமான அரசியல் வாதிகளால் கருதப்படுகிறது. உண்மையில் இது அனாவசியமானதாகும். சந்தேகத்தையும் மேலாதிக்க அகங்காரத்தையும் கொண்டதாகும். பிரதமர் ரணிலின் இத்தகைய நோக்கு பேரினவாத தீவிரவாதத்தைத் தணிப்பதற்கான தேவையிலிருந்தும் தோன்றியிருக்கலாம்.

தாயகம் என்பது ஒரு சமூகத்தின் உதயம், அது வாழ்ந்து வரும் காலம், அதன் மொழி-அதன் சமூக பொருளாதார வாழ்வு, மரபுகள் இன்னோரன்னவற்றால் தீர்மானிக்கப்படுகிறது.

உலகம் முழுவதும் பரவி வாழ்ந்தாலும் யூதர்கள் தம்மை ஒரு தேசமாகவே கருதுகிறார்கள். பாலஸ்தீனர்களும் அவ்வாறே. பூமிப்பந்தின் மூலைமுடுக்கெல்லாம் வாழும் ஈழத் தமிழர்களும் தம்மை ஒரு தேசமாகத்தான் கருதுகிறார்கள்.

வரலாற்றில் துரதிஸ்டவசமாக இலங்கை ஒரு தேசமாகக் கட்டியெழுப்பப்படவில்லை. அதன் விளைவாகவே இன்றைய துயரமான நிலைமை ஏற்பட்டது. சமூகங்கள் கலந்து வாழும் நிலை அற்றுப் போகும் போது விரிசல்கள் அதிகரித்து அவை தம்மைத் தாமே உளவியல் ரீதியாகவும் பௌதிக ரீதியாகவும் நிர்மாணித்துக்கொள்ளுகின்றன.

ஆனால் தனியார் தொலைக் காட்சி சேவையொன்றில் இடம் பெறும் "ஒரேஶ்ரீலங்கா" (One Srilanka) என்ற சொற்பிரயோகம் இயற்கையானதோ யதார்த்தமானதோ அல்ல. இந்த நாடு தமிழில் இலங்கை என இருப்பதே பொருத்தமானதாக இருக்கும். தத்தமது தேசியங்களை அவர்களின் வரலாற்று வழிப்பட்ட பெயர்களில் அழைக்கப்படுவதை யாரும் சந்தேகக் கண்கொண்டு பார்க்க முடியாது. இலங்கையின் வழிபாட்டுக்குரிய ஒரு புனித இடத்தை சிவனொளிபாதம், ஶ்ரீபாதா, ஆதாம் குன்று என்று அழைப்பதை யாரும் குறை காண முடியாது. அவரவரின் நம்பிக்கைகளை மதிப்பதிலேயே சக வாழ்வு பூத்துக் குலுங்குகிறது. தமிழ் மக்கள் தமது பாரம்பரிய வாழ்விடத்தை தாயகம் என்பதிலோ அல்லது ஈழம் என்று அழைப்பதிலோ எந்தப் பிரச்சனையும் இல்லை. அப்படிப் பார்த்தால் வங்கம். தமிழ்நாடு, ஆந்திரம், மராட்டி என்ற பெயர்களை இந்தியா சகித்திருக்க முடியாதே.

ஜனநாயக வழியிலான தமிழ் மக்களின் போராட்டம் பாரிய யுத்தமாக மாற்றமடைந்ததன் பிறகு ஈழம் ஶ்ரீலங்கா என்ற இரு சொற்கள் பிரபலமாகின.

வடக்கு-கிழக்கின் இயக்கங்கள் பல ஈழம், தமிழீழம், தமிழ் என்ற வார்த்தைகளையே முதன்மை வார்த்தைகளாக வைத்திருக்கின்றன.

இலங்கையின் படையமைப்போ சட்ட ஒழுங்குத்துறையோ தனிச் சிங்கள அமைப்புக்களாகவே இருக்கின்றன. இலங்கையின் உத்தியோகபூர்வ மொழிப் பிரயோகம் தனிச் சிங்களமாக (1987இல்தான் தமிழும் உத்தியோகபூர்வமொழி) நிர்வாகக் கட்டமைப்பு எண்ணிக்கையில் சிறுபான்மையானோரை ஓரம் கட்டுவதாக, உயர் கல்விக்குக் கதவடைப்பதாக, திட்டமிட்ட குடியேற்றங்களை வடக்கு-கிழக்கில் மேற்கொண்டதன் காரணமாக, அடிக்கடி தமிழ், முஸ்லீம், மலையக மக்களுக்கெதிராக நடைபெறும் வன்முறைகள் காரணமாகவும் இலங்கை என்ற நாடு ஒரு தேசமாக இருப்பதற்கான வாய்ப்புக்கள் அற்றுப் போயின.

இன்று உலகளாவிய அளவில் 'வேதியராயினும் ஒன்றே வேறு குலத்தவர் ஆயினும் ஒன்றே' என்று பிற மொழி, கலாசார, சமூக பொருளாதார, சூழல் தட்ப வெப்ப நிலை வேறுபட்ட சமூகங்களுடன் தமிழ் சமூகம் உள்ளும் உடனும் வாழ்கிறது. இது ஒரு ஆரோக்கியமான நிலையே. பல்வேறு மொழி, இலக்கியம், கலாசார வாழ்வுகள், நல்லம்சங்கள், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்க்கக் கூடிய சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு.

"தனித்துவமானதும் பிரபஞ்சமுமாகி" நிற்றலே சமூகங்களின் பிரமாண்டமான வளர்ச்சிக்கு வித்திடும்.

எனவே வெவ்வேறு தேசங்கள் தாயகம் என்ற வார்த்தைகள் சமபந்தப்பட்ட மக்களின் உணர்வுகளை கருத்திற்கெடுக்காமல் உதாசீனப்படுத்தும் விதமாக நடந்து கொள்ளக் கூடாது. வெவ்வேறு தேசங்கள், தேசியங்கள் என்பனவெல்லாம் பெருமளவு வேறுபட்டவையல்ல.

வெவ்வேறு தேசங்கள், தாயகங்கள் இலங்கை என்ற நாட்டுக்குள் சாத்தியமானவையே.

அதாவது சமூகங்கள் தமது தனித்துவத்துடன் சமூக பொருளாதார வளர்ச்சியுடன் மற்றைய சமூகங்களுடன் சேர்ந்து வாழுதல் என்பது. வரலாற்று வழிப்பட்ட சகல சமூகங்களுக்கும் பொருந்தும்.

தமிழர்களின் தாயகக் கோட்பாடு என்பதும் அந்த வகையினதே. தாம் தென்னிலங்கையில் தாக்குதலுக்குள்ளானபோது தமிழர்கள் ஒவ்வொரு தடவையும் வடக்கு-கிழக்கிற்குத் தான் ஓடினார்கள்.

இன்று பாதை திறந்தவுடன் எட்டுத் திக்கும் இருந்து திரும்பும் தமிழர்கள் நேரடியாக வடக்குக் கிழக்கிற்கே செல்கிறார்கள்.

பாரதி "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சத்தி பிறக்குது மூச்சினிலே" என்று பாடும் போது பிரிவினை எண்ணத்துடன் பாடவில்லை. அவன் பிரமாண்டமான ஒருநாட்டின் மகாகவியாகவே பாடினான். "வாழின் 30 கோடியும் வாழ்வோம் வீழின் 30கோடியும் முழுமையும் வீழ்வோம்" என்றுதான் பாடினான்.

தமிழகத்தின் "நீராடும் கடலுடுத்தி நிலமடந்தை வாழியவே"யும், "ஜன கண நம ந"வும் பாடப்படுவதற்காக எவரும் கரவு கொள்வதுமில்லை.

ஆனால் இந்தியாவில் ஒரு சுதந்திரப் போராட்டத்தினூடு வரலாற்று வழியே தேச நிர்மாணம் நடந்தது போல் 'இலங்கை மக்கள்' என்று சொல்லக்கூடிய அளவிற்கு நடைபெறவில்லை. துரதிஸ்ட வசமாக பிரித்தானிய காலனி ஆதிக்கத்திற்குப் பின்னான பேரினவாத அரசியல் இன்றுவரை அதற்கு இடம் தரவில்லை. எனவே இந்தியா ஒரு தேசமாக இருப்பது வேறு.

அங்கு ஒரு கன்னடக்காரரான தேவகௌடாவும், ஒரு ஆந்திர நரசிம்மராவும், ஒரு இஸ்லாமியத் தமிழ் பெருமகனுமான அப்துல் கலாமும் பிரதமராக அல்லது அந்த நாட்டின் ஜனாதிபதியாக வரமுடியும். எமது நாட்டைப் பொறுத்தவரை அப்படி ஒருநிலை வருவதற்கு ஒவ்வொரு சமூகத்தினதும் தாயகம் பற்றிய நம்பிக்கைகள் அங்கீகரிக்கப் படவேண்டும். ■

-தாகூர்-

# பறக்கும் தட்டு

பறக்கும் தட்டு ஏதும் ஆகாயத்தில் தெரிகிறதா என்று இரவில் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பொலனறுவைப் பகுதியைச் சேர்ந்த சிலரது வீடுகளில் பொருட்கள் திருட்டுப் போய்விட்டதாகச் செய்தி படித்த போதுதான் உண்மையில் "வேற்றுக் கிரக வாசிகள்" நமது நாட்டுக்கு எவ்வளவு தூரம் பிரச்சனைக்குரியவர்களாக மாறிவிட்டார்கள் என்று உணர முடிந்தது!

பொலனறுவை, கம்பஹா, களுத்துறை, புத்தளம் ஆகிய இடங்களில் வசிப்பவர்கள் கடந்த இரண்டு வார காலத்துக்குள் ஒன்று கூடிப் பேசிய விஷயங்கள் பற்றி ஓர் ஆய்வு நடாத்தினால் மொத்தத்தையும் ஒரே தலைப்புக்குள் அடக்கிவிடலாம். அதுவே, "பறக்கும் தட்டு"

இதற்கு முன்னைய காலங்களிலும் இலங்கை மக்களின் கண்களுக்கு இந்தப் பறக்கும் தட்டுக்கள் அல்லது வேற்றுக் கிரக வாசிகள் பல தடவைகள் தென்பட்டிருந்த போதிலும் ஆதாரமில்லாமல் போன அந்தச் சம்பவங்கள் போல் புறந்தள்ள முடியாமல், இம்முறை எமது விற்பன்னர்கள் பறக்கும் தட்டுக்களை வீடியோ கெமராவுக்குள்ளும் அடக்கியிருக்கிறார்கள்!

கடந்த நாட்களில் இலங்கையில் உலாவித் திரிந்ததாகக் கூறப்படும் பறக்கும் தட்டுக்கள் குறித்த விவரங்களைச் சேகரித்து அமெரிக்க நாஸாவின் கீழ் இயங்கும் (UFOs-Unidentified Flying Objects) அடையாளம் காணப்படாத பறக்கும் பொருட்கள் குறித்த ஆராய்ச்சி மையத்துக்கு வழங்கப் போவதாகக் கூறி பொலனறுவை சென்ற, கொழும்பு பல்கலைக் கழகத்தின் பௌதீகவியல் பேராசிரியர் சந்தன ஜயரட்ண, அங்கு அப்படி ஏதும் இல்லை. எல்லாம் கற்பனை என்ற முடிவோடு கொழும்பு வந்து சேர்ந்ததாகக் கூறப்படுகின்றது.

அடையாளம் காணப்படாத வேற்றுக் கிரக உயிரினங்கள் பூமிக்கு வந்து போவது தொடர்பான செய்திகள் 1940ஆம் ஆண்டு முதலே பரவத் தொடங்கியிருந்தன.

இவ்வாறான ஒரு தகவலை அமெரிக்காவின் 'ரொஸ்வெல்ட் டெயிலி ரெகோட்' என்ற பத்திரிகை தான் முதன் முதலாக வெளியிட்டது.

அமெரிக்க படையினர் ரொஸ்வெல்டில் கால்நடைப் பண்ணை ஒன்றில் வைத்து வேற்றுக் கிரக வாசிகளின் வாகனம் ஒன்றைக் கைப்பற்றியதாகவும் அதிலிருந்த வேற்றுலக வாசிகள் சிலரும் கைது செய்யப்பட்டதாகவும் 1947ஆம் ஆண்டு ஜூலை 8ஆம் திகதி இப் பத்திரிகை முன் பக்கச் செய்தியில் குறிப்பிட்டிருந்தது.

ஆனால், இது பொய்யான தகவல் என்பதும் இட்டுக்கட்டப்பட்ட செய்தி என்பதும் பின்னர் தெளிவானது. சோவியத் யூனியனின் அணுவாயுத திட்டம் குறித்து உளவு பார்ப்பதற்காக சார்ல்ஸ் முவர் என்பவரின் ஏற்பாட்டில் உருவான 'புரஜெக்ட் மோகல்' திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் மனித மாதிரியின் சிதைவுகளே ரொஸ்வெல்டில் கண்டெடுக்கப்பட்டதாகப் பின்னர் செய்திகள் வெளியாகின. ஆனால் ரொஸ்வெல்ட்டுக்குப் பறக்கும் தட்டுக்கள் வந்து போனதான செய்தியை மக்கள் மனதில் இருந்து அகற்ற முடியவில்லை. இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக 1997ஆம் ஆண்டு அமெரிக்க விமானப் படையினரால் இது குறித்த அறிக்கை ஒன்று 50 வருடங்களின் பின்னர் வெளியிடப் பட்டது. "த ரொஸ்வெல்ட் ரிபோர்ட் கேஸ் குளோஸ்ட்" என்றுதான் அந்த அறிக்கைக்குத் தலைப்பிடப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையை வெளியிட்டு உரையாற்றிய அமெரிக்க விமானப் படைத்தளபதி "நத்தார் தாத்தா என்று ஒருவர் இருப்பதாக நம்பிக் கொண்டிருந்தாலும் உண்மையில் அப்படி எவரும் இல்லை என்பது போலவே, வேற்றுக் கிரக உயிரினங்கள் பூமிக்கு வருவதாகக் கூறப்படுவதும் இதுவரையில் நடைபெறாத ஒன்று என்பதை உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள்" எனப் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

ஆனால், வேற்றுக் கிரகங்களில் உயிரினங்கள் வசிப்பதையும் அவை



பூமிக்கு வந்துபோவதாகக் கூறப்படுவதையும் இந்தளவு சரளமான ஒரு விடயமாகப் புறக்கணித்துவிட முடியாதெனக் கூறும் ஆராய்ச்சியாளர்கள் சிலர், கடந்த 40 ஆண்டு காலமாக விரிவான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய ஆய்வுகள் SETI - Search for Extraterrestrial Intelligence) என அழைக்கப்டுகின்றது.

முன்னைய சோவியத் யூனியன், அமெரிக்கா, சீனா உள்ளிட்ட பல நாடுகள் தமது சக்தி வாய்ந்த ராடர்களை 24 மணி நேரமும் விழிப்புடன் வைத்திருக்கின்றன. வேற்றுக் கிரக உயிரினங்களிடமிருந்து ஏதேனும் சமிக்ஞை கிடைக்கிறதா என 40 ஆண்டு காலமாக இந் நாடுகள் எதிர்பார்த்திருக்கின்றன. அவ்வாறான நம்பக் கூடிய தகவல்கள் ஏதும் இதுவரை பதியப்பட்டிருக்கவில்லை.

வேற்றுக் கிரக உயிரினங்களிடமிருந்து எந்தவித தகவல்களும் கிடைக்காத போதும் அங்கு உயிரினங்கள் உண்டு என்று உறுதியாகக் கூறும் விஞ்ஞானிகளும் இருக்கவே செய்கிறார்கள். எவ்வாறெனினும் உலகில் தோன்றிய மிகச் சிறந்த பௌதீகவியலாளர்களில் ஒருவரும் அணுவாயுதத்தை உருவாக்கியவருமான என்ரிகோ ஃபேர்ம், வேறு கிரகங்களில் ஜீவராசிகள் இருக்கலாம் என்ற கூற்றைத் திட்டவட்டமாக நிராகரிக்கிறார்.

வேற்றுக் கிரகங்களுக்குச் செல்ல வேண்டும் என்பது புவியில் உள்ள அறிவு மிக்க உயிரினமான மனிதனின் நீண்டகால அபிலாஷையாகக் காணப்பட்டது. அவ்வாறிருக்க பிரபஞ்சத்தின் ஏதாவது ஓரிடத்தில் மனிதனை விட அறிவு கூடிய ஜீவராசிகள் இருக்குமாயின் அவை ஏன் புவிக்குத் தகவல் அனுப்பி மனிதனுடன் தொடர்பு கொள்ளவில்லை? என்ற தர்க்கத்தை ஃபேர்ம் முன் வைக்கிறார்.

இந்த தர்க்கத்திற்கு ஓரளவேனும் பொருந்தக் கூடிய ஒரு பதிலை இதுவரையில் யாரும் முன் வைக்கவில்லை.

அதனால் ஃபேர்மின் இந்தத் தர்க்கம் இன்னும் கூட (Fermi Paradox) 'ஃபேர்மின் முரண்பட்டது போன்ற உண்மையான கூற்று' என்றே அழைக்கப்படுகிறது.

ஆதலால் கடந்த அரை நூற்றாண்டு காலமாகத் தீர்க்கப்படாத இந்த விவகாரம் குறித்துப் பொலனறுவை மக்களின் சாட்சியை வைத்துச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முடிவுக்கு வர உலகம் தயாராக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

இதற்கிடையில் நாட்டின் சில இடங்களில் மக்கள் அவதானித்ததாகக் கூறும் பறக்கும் ஒளிப் பிழம்புகள் அமெரிக்க, இந்திய உளவு விமானங்களாக இருக்கலாமோ?! என்ற சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது.

1999ஆம் ஆண்டு பண்டாரவளை விளையாட்டு மைதானம் ஒன்றில் பீலிஸ் (ஸோஸர்) வடிவிலான பெரிய பொருட்கள் இரண்டு தரையிறங்கியதாகக் கூறப்பட்டது. இவை பறக்கும் தட்டாக இருக்கலாமோ?! என்ற சந்தேகம் சில நாட்கள் நீடித்திருந்த போதும் அவை அமெரிக்க உளவு விமானங்கள் என்பது பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ■

# ஸ்போர்ட்ஸ்

## ஆபிரிக்க கண்டத்தையே மகிழ்ச்சியில் ஆழ்த்திய செனகலின் வெற்றி

கால் இறுதி ஆட்டத்திற்கு செனகல் அணி தெரிவானதோடு ஆபிரிக்க கண்டத்தில் கோப்பையை செனகல் கைப்பற்றும் என்ற நம்பிக்கை துளிர் விட்டுள்ளது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் கால் இறுதியை செனகல் அணி எட்டிவிட்டதால், மொஸாம்பிக் முதல் மாலிவரை ஆபிரிக்க நாடுகள் அனைத்திலும் ரசிகர்களின் மகிழ்ச்சி கரை புரண்டு ஓடுகிறது. ஆபிரிக்க நாடான செனகல் தெருக்களில் மக்கள் ஆட்டம், பாட்டத்துடன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

தலைநகர் அபித்ஜானில் உள்ள கோகோ பல்கலைக் கழக மாணவ, மாணவியர் அனைவரும் ஐவரி கடற் கரையில் கூடி மகிழ்ச்சிக் கொண்டாட் டத்தில் ஈடுபட்டனர்.

வெற்றி பெற்றதும் கால்பந்து இளம் ரசிகை ஒருவர் தனது நிலையை மறந்து ஆகாயத்தில் கையை ஏந்தியபடி நாள் முழுவதும் கடவுளுக்கு நன்றி கூறிக் கொண்டே இருந்தார். மற்றொருவர் சந்தோஷத்தில் அழுதுகொண்டே இருந் தார்.

தவிர, டாக்ஸி, சைக்கிள் ஊர் வலங்களும் நடைபெற்றன.

மபுடோவில் காங்கிரஸ் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் செனகல் அணி வெற்றி பெற்ற தகவல் கிடைத்ததும், மொஸாம்பிக் அதிபர் ஜோகைம் சிஸானோ அணிக்கு வாழ்த்து தெரிவித்தார்.

பிரான்ஸ் தோற்றுவிட்டது. சிங்கம் நீடுழி வாழ்க என ஆபிரிக்க கால்பந்து ரசிகர் தன்னை மறந்து கூறிக் கொண்டே இருந்தார். சிங்கம் என்பது செனகலின் செல்லப் பெயர்.

வீரர்கள் செனகலின் வெற்றிக்காக விளையாடுகின்றனர். ஆனால் அவர்கள் ஆபிரிக்காவுக்காகவும் எங்களுக்காகவும் தான் விளையாடுகின்றனர் என கால் பந்து வெறிபிடித்த மௌரி டானியா நாட்டு ரசிகர் ஒருவர் கூறினார்.

இது ஆபிரிக்க கண்டத்துக்குக் கிடைத்த வெற்றி என மாலி, காம்பியா, நைஜீரியா ரசிகர்கள் கருத்துத் தெரி வித்தனர்.

அடுத்த இலக்கு ஜப்பான், அதற் கப்புறம் இங்கிலாந்து, இறுதியில் இத்தாலி என செனகல் ரசிகர்கள் இப்போதே உலகக் கோப்பை வெற்றிக் கனவில் மிதக்கத் தொடங்கிவிட்டனர்.

## ஜப்பானின் நிலை...?

இதனை நீங்கள் வாசிக்கும் போது ஜப்பானின் கதி என்ன என்பதை அறிந்துகொண்டிருப்பீர்கள்

1966க்குப் பின் எந்தவொரு ஆசிய அணியும் கால் இறுதிக்குத் தகுதி பெற்றதில்லை. இச் சாதனையைப் படைக்கும் உத்வேகத்துடன் மியாஹி யில் துருக்கியை செவ்வாய்க்கிழமை சந்திக்கிறது ஜப்பான் அணி.

துருக்கியும், ஜப்பானும் கால்பந்து ஜாம்பவான்களை வியப்பில் ஆழ்த்தி 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற் றுள்ளன. இரு அணிகளுமே உலகக் கோப்பையில் இதுவரை 2 ஆவது சுற்றுக்கு முன்னேறியதில்லை.

1998இல் உலகக் கோப்பையின் பிரதான சுற்றில் நுழைந்த ஜப்பான், ஓர் ஆட்டத்திலும் வெல்லவில்லை. 1954 இல் மட்டும் பிரதான சுற்றில் துருக்கி விளையாடியுள்ளது. லீக் ஆட்டத்தில் 7-0 என்ற கணக்கில் தென் கொரியாவை வீழ்த்திய துருக்கி, மேற்கு ஜேர்மனியுடன் 7-2 என்ற கணக்கில் தோற்று வெளியேறியது.

ஜப்பானும், துருக்கியும் 1997-இல் ஒசாகாவில் நட்பு ரீதியிலான ஆட்டத் தில் விளையாடின. அப்போது ஜப்பான் 1-0 என்ற கணக்கில் வென்றுள்ளது.

**★ தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகளில் அவதானமாக இருக்க வேண்டியவர் யார்?**

எம். முருகேசன், யாழ்ப்பாணம்.

*விற்பவருக்கு ஒன்றுகூட இல்லா விட்டாலும் பரவாயில்லை. வாங்குபவ ருக்கு நூறு கண்கள் இருக்க வேண்டும்.*

❀═❀

**★ சிந்தியா! விரும்புவது எத்தகைய கேள்விகளை?**

ரூமியா, பன்கொள்ளமட.

*உண்மையிலேயே பதில் தெரியா மல் கேட்கப்படும் கேள்விகளை...*

❀═❀

**★ உதைபந்தாட்டக் கிண்ணம் யாருக்கு?**

யூ. எல். றஹ்மான், புத்தளம்.

இதுமாதிரியான போட்டிகளில் ஊகங்கள் பொய்த்துப் போவது வழக் கம்தான். இருந்தாலும் இப்போதைக்கு (முதல் சுற்று முடிவடைந்த நிலையில்) ஜேர்மனிக்கும், பிரேஸிலுக்குமே அந்த வாய்ப்பு அதிகமிருப்பதாகத் தெரி கிறது. அதிசயங்கள் நிகழ்த்தக்கூடி யவை என்று நான் கருதும் மெக்ஸிகோ அணி அல்லது செனகல் அணி இரண்டிலொன்றாவது இறுதிப் போட்டி வரை (Final) வந்து விளையாடுவதை ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

❀═❀

**★ மிகுந்த நகைச்சுவையாகப் பதில் சொல்லி வருகிறீர்களே. எப்படி?**

வி. மாலதி, திருகோணமலை.

*என் பதில்கள் எல்லாம் வெறும் சிரிப்புக்குரியவைதான் என்று நாசூக் காக அலட்சியப்படுத்தி அடித்திருக்கி றீர்களே... அதுபோல ஒரு கெட்டித் தனம்தான்!*

❀═❀

**★ பெண்கள் மென்மையானவர்களா கவும், ஆண்கள் வலிமையுள்ளவர்களாக வும்தானே படைக்கப்பட்டிருக்கிறார் கள்?**

இ. ரமேஷ், கண்டி.

*அதை விடுங்கள் ரமேஷ்! எனக்குச் சமீபத்தில் ஏதோ ஒரு படத்தில் கேட்ட நகைச்சுவை ஞாபகத்தில் வருகிறது. கேளுங்கள்:*

*இரண்டு பெண்கள் பேசிக்கொள் கிறார்கள்.*

*"உன் கைகள் இவ்வளவு மென்மை யாக இருக்க என்ன காரணம்?"*

*"பாத்திரங்கள் கழுவ நான் 'எஸ்.ஆர்' பயன்படுத்துகிறேன். அது தான் காரணம்"*

*"அது என்ன புதிய வோஷிங் பவுடரா?"*

*"இல்லை... என் கணவர் பெயர்!"*

❀═❀

**★ காத்திருப்பதா? காக்க வைப்பதா? எது சுகம்?**

எம். எம். மிஹ்லார், கல்முனை.

*பிடித்தவர்களுக்காகக் காத்திருப்ப தும், பிடிக்காதவர்களைக் காக்க வைப் பதும்.*

❀═❀

**★ உங்களுக்கு மட்டும் முதுமை வரா திருந்தால்...?**

இ. சூரியகுமார், மான்காடு.

*நான் பார்த்துப் பிறந்த சிறுவர்க ளெல்லாம் என்னைப் 'போடா வாடா' என்று கூப்பிட்டுக்கொண்டு திரிவதை இரசிக்கவா முடியும்!*

❀═❀

**★ சிந்தியா! பொய் பேசியதற்காக எப்போதாவது வருத்தப்பட்டதுண்டா?**

எம். கே. மலர்விழி, மன்னார்.

*எப்போது இந்த வருத்தம் இல்லா மல் போகும் என்று வருத்தப்படுமள வுக்கு...*

❀═❀

**★ எப்போது பொய்யும் இனிக்கும்?**

ஆர். துஷ்யந்தன், கொழும்பு-06.

*நீங்கள் அழகாக இருக்கிறீர்கள் என்று யாராவது சொல்லும்போது.*

❀═❀

**★ இன்றைய சமுதாயத்தில் அதிகம் மதிக்கப்படுபவர்கள் பணக்காரர்களா? படித்தவர்களா?**


எஸ். யு. ஜீவராணி, கொழும்பு-10.

*பொதுவாக இத்தகைய கேள்வி களின் அடியிலிருக்கும் கவலை, படித்த வர்களைவிடப் பணக்காரர்கள் சமூகத் தில் அதிகம் மதிக்கப்படுகிறார்களே என்பதுதான்.*

*ஆனால், பணம் படைத்தவர்களுக் குச் சற்றும் குறையாத விதத்தில் படித்த வர்களும் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர் கள் என்று கருதுவோரை மதியாமற் செல்லும் போக்கைத்தானே கண்டுவரு கிறோம்!*

*எனவே, எந்தத் தகுதியை அடிப் படையாக வைத்தாலும், அடுத்த வனைத் தனக்குச் சமானமாகக் கரு தாத மனிதர்கள் மதிப்பிற்குரியவர் கள் அல்ல என்பதே என் கருத்து.*

❀═❀



## இலக்கிய நயம்

## என்னுயிரே எனைக் கொல்கிறதே...!

தருவது முழுடில்யன்

மென்மையான விசில் சத்தம் கேட்டு ஆர்வத் துடிப்புடன் திரும்பினாள் சுகன்யா.

இப்படித்தான் சீட்டியில் பாடல் எதையாவது இசைத்தபடியே வருவதுதான் லவனின் வழக்கம்.

ஆனால் அந்த விசில் அவனுடையதில்லை. மரங்களிடையே வேகத்தோடு நுழைந்த காற்றின் இசை அது!

மரத்தின் கிளைகள் மகிழ்ச்சிப் பெருக்கில் கூக்குரலிடுவது போல சத்தமிட்டுத் தலைவிரித்து ஆடின.

சுகன்யா ஏமாற்றத்தில் துணுக்குற்றாள்.

எரிச்சலும் ஏமாற்றமும் அவள் கண்களைப் பொங்க வைத்தன.

இந்தக் காற்று, மரம், செடி, கொடிக்கெல்லாம் என்ன மகிழ்ச்சி. இப்படிப் பேய்க் கூத்தாடுகின்றனவே'

லவன் மட்டும் எங்கு போய்த் தொலைந்தானோ!

வந்தாலும் வருத்தியெடுப்பான், வராமலும் வருத்தியெடுப்பான். இது என்ன துன்பம்.... சே! என்று அலுத்துக் கொண்டாள்.

கூட இருக்கும்போது மாலை நேரத்தின் ஒரு துளிப் பொழுதையும் வீணாக்கிவிடாமல் கூடிக் குலாவுபவனுக்கு, தனிமையிலிருப்பவளின் மீது தாக்குதல்களைத் தொடுக்க இந்த மாலைக் காலம் வைத்திருக்கும் படைக்கருவிகள் பற்றித் தெரியாதா? மாலை நேரம் என்கிற அனற் சூளைக்குள் என்னைத் தனியே திணித்துவிட்டு எங்கு ஊர் மேய்ந்து கொண்டிருக்கிறானோ....

வந்தால், "உன்னை மேயப் போகிறேன்" என்றுதான் ஆரம்பிப்பான்.

"என்ன ஆடா, மாடா நீ?" என்று கேட்டால், "அவை போல நுனிப்புல் மேயும் வழக்கம் என்னிடமில்லை" என்பான்.

"ஆழ உழுது அடிக் கிழங்கையும் சலித்தெடுத்து உண்ணும் பிராணி நான்" என்று சிரிப்பான்.

"நீ வேண்டுமானால் பன்றியாக இருந்துவிட்டுப் போ. ஆனால் இங்கு யாரும் கிழங்காக இல்லை..." என்று கோபத்துடன் பதிலளிப்பாள் அவள்.

"அடடா! நான்தான் சரியான கிழங்கன். உவமையைப் பொருத்தமாகச் சொல்லத் தெரியவில்லை" என்று வருத்தப்படுவதுபோல் முகத்தை வைத்துக் கொள்வான்.

"என்ன உவமை சரியில்லை?" என்று கேட்பாள்.

"ஆவேசமாய்க் கிழங்கு தோண்டுகிற பன்றியில்லை நான். அழகான தொழிநுட்பத்துடன் கடலைக் கிழித்து உள் சென்று மீன்பிடித்துக் களிப்புடன் அதைக் கவ்விப் பறந்து செல்கிற பறவையாக என்னைச் சொல்லியிருக்க வேண்டும்..."

"சரி... சரி... போதும் போதும் வர்ணனை எல்லாம்" என்று வாய்விட்டே சொல்லிக் கொண்டாள் சுகன்யா.

"என்ன வர்ணனை போதும்?" என்று பின்னாலிருந்து குரல் கேட்கத் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

சிரித்தபடி லவன் நின்றிருந்தான்.

மகிழ்ச்சியில் திக்குமுக்காடியவள், சட்டென்று அவன் சிரிப்பும் கேலி உமிழ்ந்த கண்களும் உறைக்க, "இப்போ ஒன்றும் இளிக்க



வேண்டாம்" என்றாள் கோபமாக.

"அப்போ எப்போதுதான் சிரிக்க வேண்டும்?" என்று அப்பாவித்தனத்துடன் கேட்பவனாக அருகே வந்தமர்ந்தான்.

"பேசவேண்டாம்!" என்றாள், அந்த ஒரு வார்த்தையிலேயே தன் கோபம் அத்தனையையும் பதித்து.

"சரி" என்று வாய் பொத்தி மௌனமானான்.

சற்று நேரம் கழித்து, "நான் தூக்கி வளர்த்த துயரம் நீ..." என்று பாடினான்.

"என்ன?" என்றாள் திரும்பி.

"பாட்டு" என்றான்.

"என்ன அது தூக்கி வளர்த்த துயரம்? துயரம் வளர்ப்பது நானா? நீயா?" என்றாள் உஷ்ணமாக.

"உன்னைத் தூக்கி என் நெஞ்சில் வைத்துக் கொண்ட பிறகு என்னிடம் வேறு துயரங்கள் ஏது?" என்றான் நாடக பாவனையில்.

"போ... நீதான் என் நெஞ்சுக்குள் இருந்து துயரம் தருகிறாய்... உன் நினைவு மட்டும் இல்லையென்றால் இந்த மாலை நேரம் எனக்கு எவ்வளவு இன்பமாக இருந்திருக்கும்..." என்றவள், ஒரு ஆழ்ந்த பெருமூச்சை உதிர்த்து விட்டு, " எவ்வளவு இன்பமாக இருந்தேன் ஒரு காலம்..." என்றாள்.

அவன் வலது கையால் அவள் தோளைச் சுற்றி அணைத்துக் கொண்டான்.

"இப்போது இன்பமில்லையா?" என்றான் மென்மையாக.

அவள் சட்டென்று உடைந்து அவனைத் தழுவி நெஞ்சில் முகம் புதைத்தாள்.

"எவ்வளவு துயரத்தில் மூழ்கியிருந்தேன்... இப்போதாவது வந்து கரையேற்றினாயே..." என்றாள் விம்மலுடன்.

அவன் ஆதரவாக அவள் தலையைக் கோதினான். இடது கையால் அவள் மோவாயை நிமிர்த்தி, கண்களுக்குள் ஊடுருவினான்.

அவள் குறுகுறுப்புத் தாங்க முடியாமல் கண்களை மூடினாள்.

"என் செல்லம்" என்றான், அவள் மீது கொண்ட ஆசை மிகுதியில் வேறேதும் கூறத் தோன்றாமல்.

அவள் சிணுங்கியபடியே சொன்னாள், "இப்போதுதான் என் உயிர் என்னைச் சிறிது சிறிதாகக் கொன்று கொண்டிருந்ததை நிறுத்தியிருக்கிறது..."

"தன்னுயிர் பிரிவதைத் தாமே பார்ப்பவரைப் போல, உன் உயிரே உன்னுயிரைக் கொல்வதை நீ பார்த்தாயா?"

"ஆமாம், உயிரின் தற்கொலை முயற்சி" என்று சிரித்தாள். அவனும் வாய்விட்டுச் சிரித்தான்.

"கரை காணாத கடலிலே கப்பல் உடைந்து போனால் எப்படி ஒரு தத்தளிப்பு நேருமோ அப்படித்தான் இதுவரை தத்தளித்திருந்தேன்" என்றாள் சுகன்யா.

"இப்போது?" என்றான் லவன்.

"கடல் நடுவில் தத்தளித்துக் கொண்டிருக்கும் கொடுமையான பொழுதில், கடல் அலையானது ஒரு மரக் கட்டையை மிதத்தி வந்து அருகிலே விட்டால் எப்படி இருக்கும்! அப்படி ஒரு ஆசுவாசமான மகிழ்ச்சியிலிருக்கிறேன் நான்... புதிய உயிர் எய்தியவளாக..." என்று கூறியபடி, அவனை இறுக அணைத்து மார்பில் முகத்தை அழுந்தப் புதைத்துக் கொண்டாள்.

**கரைகாணாப் பௌவத்துக்**
**கலம் சிதைந்து ஆழ்பவன்**
**திரைதரப் புணை பெற்றுத்**
**தீதின்றி உய்ந்தாங்கு**
**விரைவானர் காதலர் புகுதர**
**நிரைதொடி துயரம்**
**நீங்கின்றால் விரைந்தே.**

(கலித்தொகை: 17: 24-27)

## சிந்தியா பதில்கள்

**★ தமிழ் இளைஞர்களின் இன்றைய நிலையென்ன?**

ஆர். சஜீவன், அனுராதபுரம்.

*தமிழர்கள், தமிழ் இளைஞர்கள், தமிழ்க் கனவான்கள் என்றெல்லாம் எல்லோரையும் ஒரே சிமிழுக்குள் அடைத்துக் கதை சொல்ல முடியாது. எனக்குத் தெரிந்த பல இளைஞர் களின் நிலை, இங்கிருந்து வெளியே போவதற்குச் சொல்லக் காரணங்கள் குறைந்துவிட்டதே என்பதும், வெளியில் போன பலர் திரும்ப இங்கே வந்துவிட வேண்டி வருமோ என்ற பயமும்தான்!*

❀═❀

**★ காதலில் தோற்றவர்கள் படிப்பதற்கு ஏற்ற நூல் ஏதாவது உண்டா?**

பி. யானுஜன், பாஷையூர்.

*கட்டாயம் படித்து முடிக்க வேண்டு மென்று பெரிய பாடப்புத்தகம் எதை யாவது கொடுத்துப் பார்க்கலாம். அப் போது அவரது காதல் தோல்விக் கவலை குறைவானதாய்த் தோன்றக் கூடும்.*

# மன்னாதி மன்னன் 109

## மந்திரவாதியின் பேராசை

மன்னர் விக்கிரமாதித்தனைத் தேடிக்கொண்டு வந்த மந்திரவாதி மிருகாங்கிதன், தான் கொண்டு வந்திருந்த விலையுயர்ந்த வளையல்களை மன்னரிடம் காட்டி, "மாமன்னர் பெருமானே! தாங்கள் மணக்கப்போகும் இளவரசி விசித்திரகலை அணிவதற்காகவே பெரும்பாடுபட்டு இவ் வளையல்களைச் செய்து கொண்டு வந்தேன். ஆனால் தங்கள் அமைச்சர் இவ் வளையல்களை நானே நேரடியாக அரண்மனை அந்தப்புரத்திற்குச் சென்று அணிவிக்க அனுமதி தர மறுத்துவிட்டார். இதற்குத் தங்களுடைய அனுமதி தேவை என்று கூறி என்னைத் தங்களிடம் அனுப்பி வைத்தார். எனவேதான் நான் தங்களிடம் அனுமதி கோரி வந்தேன்" என்று வினயமாகக் கூறினான்.

மன்னர் விக்கிரமாதித்தன் தனது நாடாறு மாத ஆட்சியை முடித்துவிட்டு காடாறு மாதம் புறப்படும் போதெல்லாம் உஜ்ஜயினி மாகாளி பட்டண ஆட்சிமுறைகள், நிர்வாகம் முதலான சகல பொறுப்புக்களையும் அமைச்சர் பட்டியிடமே கொடுத்துவிடுவார். "எந்த முடிவையும் எடுக்கும் பொறுப்பை அமைச்சர் பட்டியிடம் கொடுத்திருக்கும்போது, பட்டி என்னிடம் எதற்காக அனுமதி பெறுமாறு வளையல்காரனை அனுப்ப வேண்டும்?" என்று பலவாறாக யோசித்த மன்னருக்கு, வளையல்காரன் பதற்றத்துடன் அவசரப்பட்டமை, அவன் மீது சந்தேகம் கொள்ள வைத்துவிட்டது. சந்தேகப்பட்டவுடன் ஒரு முடிவுக்கு வருவது நல்லதல்ல என்பதனையும் அனுசரித்த மன்னருக்கு, வளையல்காரன் உஜ்ஜயினியிலிருந்து புறப்பட்டவடனேயே தன்னிடம் வந்து சேர்ந்துள்ளதை அறிந்ததும் அவருடைய சந்தேகம் மேலும் வலுப்பெற்றது.

இதனால்தான் வளையல்காரன் நீராடச் சென்றபோது அவன் பின்னால் செல்லுமாறு வேதாளத்தை ஏவிவிட்டார். வேதாளம், வளையல்காரனின் உடைமைகளை எடுத்து வந்து மன்னரிடம் கொடுத்தது. அதனைப் பார்த்த மன்னர் எவ்வித ஐயமுமின்றி வந்திருப்பவன் மந்திரவாதி மிருகாங்கிதன்தான் என முடிவுகட்டிவிட்டார்.

வளையல்காரனுக்கு எந்தவித சந்தேகமும் ஏற்படாதபடி அவன் நீராடிவிட்டுக் கரையேறுவதற்கு முன்னர் அவனுடைய உடைமைகளை வேதாளத்திடம் கொடுத்து அவற்றைக் கிடந்த இடத்திலேயே வைத்துவிடுமாறு செய்தார். ஆனால், உண்மையான மந்திரக்கோலைத் தன்னிடம் வைத்துக்கொண்டு அதே போன்ற போலியான கோல் ஒன்றை மட்டும் வேதாளத்திடம் கொடுத்தனுப்பினார்.

வளையல்காரன் நீராடிவிட்டுக் கரையேறி, உடைகளையும், உடைமைகளையும் எடுத்துக்கொண்டு மன்னர் விக்கிரமாதித்தனின் விருந்தை உண்ணும் மகிழ்ச்சியுடன், அதைவிட மேலாக உஜ்ஜயினி அரண்மனை அந்தப்புரத்திற்குச் செல்ல மன்னர் அளிக்கும் அனுமதியைப் பெற்றுக்கொண்டு சென்று இளவரசி விசித்திரகலையைக் கடத்திச் செல்லப்போகிறேனே என்ற மகிழ்ச்சி பொங்க மன்னர் விக்கிரமாதித்தனை நோக்கிச் சென்றான். தன்னிடமிருந்த மந்திரக்கோல் போலியானது என்ற சங்கதி அவனுக்குத் தெரியவில்லை.

மன்னர் விக்கிரமாதித்தன் வளையல்காரன் மீது சந்தேகங் கொண்டதற்கான அறிகுறிகள் எதனையும் காட்டிக்கொள்ளவில்லை. அவனை அழைத்து அமரச் செய்து, அவனுக்கு அறுசுவை அமுது பரிமாற ஏற்பாடு செய்தார். "இன்றிரவு என்னுடனேயே தங்கியிருந்துவிட்டு நாளை காலையில் உஜ்ஜயினி மாகாளி பட்டணம் செல்லலாம்" என்று வளையல்காரனிடம் தெரிவித்தார். ஆனால், அன்றிரவு தங்குவதற்கு வளையல்காரன் விரும்பவில்லை.

கூடிய சீக்கிரம் விசித்திரகலை இருக்குமிடம் செல்லவேண்டும் என்று பதற்றப்பட்டான். அவனுடைய பதற்றத்தை மன்னர் விக்கிரமாதித்தன் கண்டு, அவனுக்காகப் பரிதாபப்பட்டார்.

அரசனின் விருப்பப்படி அடுத்த நாட் காலையில் புறப்படுவதற்கு வளையல்காரன் ஒருவாறு ஒப்புக்கொண்டான். இருப்பினும், அந்தப்புரம் செல்வதற்கான அனுமதியை உடனே தந்துவிடுமாறு அவசரப்பட்டான். மன்னரும் தனது முத்திரை மோதிரம் பதித்த அனுமதி ஒலையை மந்திரவாதியிடம் கொடுத்தார்.

உஜ்ஜயினி மாகாளிப் பட்டணம் செல்லும் பாதை கரடுமுரடான பாதையென்றும், வழியில் கொடிய விலங்குகள் இருப்பதாகவும், இரவு நேரப் பயணம் பொல்லாதது என்றும் மன்னர் விக்கிரமாதித்தன் சொன்னார்.

மன்னர் விக்கிரமாதித்தன் உறங்கியதும், அவர் கொடுத்த அனுமதிப் பத்திரத்தையும் எடுத்துக்கொண்டு தன்னுடைய மந்திரசக்தியினால் உஜ்ஜயினி மாகாளி பட்டணம் சென்றுவிடலாம் என்று வளையல்காரன் திட்டமிட்டான். மன்னர் ஒய்வெடுக்கச் சென்றதும், வளையல்காரன் தனது உடைமைகளுடன் அந்த விடுதியிலிருந்து வெளியேறினான்.

தன்னிடமிருந்த மந்திரக் கோலை எடுத்து மந்திர உச்சாடனம் செய்து, உடனடியாக உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்துக்கு வானில் பறந்து செல்ல ஒரு கம்பளத்தை ஏற்பாடு செய்யும்படி கூறி, அக்கோலைத் தரையில் போட்டான். அக்கோல் தரையில் ஆடாமல் அசையாமால் அப்படியே கிடந்தது. மந்திரவாதி மீண்டும் மீண்டும் மந்திர உச்சாடனம் செய்தும் எதுவித பலனுமில்லை.

அப்போது மன்னர் விக்கிரமாதித்தன் வளையல்காரனின் முன் தோன்றினார். "மந்திரவாதி மிருகாங்கிதனே! உனது மந்திரசக்தி எதுவும் இனிமேல் பயன்படாது. உன் போலி வேடம் கலைந்துவிட்டது. உன்னுடைய தீய எண்ணமும் இனிமேல் ஈடேறாது. உன் விருப்பம் போல் நீ உஜ்ஜயினி மாகாளிப் பட்டணம் செல்லலாம்; ஆனால், அங்குள்ள அந்தப்புரத்திற்கு உன்னால் செல்ல முடியாது. அங்கு சென்றதும் அமைச்சர் பட்டி உனக்குரிய தண்டனை தருவார்" எனக்கூறிய மன்னர் தனது கைகளைத் தட்டினார். உடனடியாக உஜ்ஜயினியின் அரச காவலர்கள் நால்வர் அங்கு வந்து மந்திரவாதி மிருகாங்கிதனைச் சங்கிலியில் பிணைத்து அழைத்துச் சென்றனர்.

இராஜகுமாரன்

(மன்னன் வருவான்...)

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை *-காதில பூ கந்தசாமி-*

என்ன, இப்ப என்னெண்டு கேக்கிறன், ஏன் எல்லாரும் இப்பிடி கோழிச் சண்டை பாக்கிற மாதிரி வேடிக்கை பாத்துக் கொண்டு நிக்கிறியள். ஒரு தேசியப் பிரச்சனையில, இலங்கைத் தமிழற்ற தலைவிதிய நிர்ணயிக்கப்போற பென்னாம் பெரிய பிரச்சனையில, கொஞ்சம் அப்பிடி இப்பிடிப் பிணக்குகள் கிளம்பத்தானே செய்யும்?

நான் சொல்லுறது, இந்தச் சிவசிதம்பரத்தார் காலமாயிட்டதால வந்த இடப் பிரச்சினையச் சொல்லுறன். அது ஒரு தேசியப் பிரச்சினை இல்லையே...?

ஒரு கதிரை காலியானால் அதை நிரப்ப வேணுமெண்டதிலயே இந்தக் கூட்டுக் கட்சிகள் இப்பிடி அடிபட்டால் செத்தவர் என்ன நினைப்பார்?

"தான் எப்ப சாவன், திண்ணை எப்ப காலியாகுமெண்டுதான் பின்னால இருந்தவை தினந்தினம் பிரார்த்தனை செய்ததாயெல்லோ நினைப்பார்" எண்டெல்லாம் சிலபேர் என்னட்டக் கேட்டினம்.

அவை இப்பிடியெல்லாம் கேக்கக் கூடாது பாருங்கோ. அப்பிடிக் கேக்கிறதே இனத் துரோகம்.

முதலில அந்த சீற் காலியாப் போனது யாற்ற பிழை? அது அதக் காலியாக்கின ஐயாவிட பிழையேதவிர அந்தச் சீற்றின்ர பிழையில்லை. ஆனபடியால அந்தச் சீற்றை வெறுமனே விட்டிட ஏலுமோ? அந்தச் சீற்றை விடுறதால தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சினை தீராமல் போனால் சனம் யாரைத் திட்டும்? அதால, இனப்பிரச்சினையெண்டது சீற் பிரச்சினைதான் எண்டத எங்கட சனம் முதலில விளங்கிக் கொள்ள வேணும் பாருங்கோ.

"ஒரு சீற் காலியானல் அத ஒருமனசா ஒரு ஆளப் போட்டு நிரப்பலாம் தானே, தமிழற்ற விடிவுக்கெண்டு சொல்லிக் கொண்டுதானே கூட்டக் கட்டினவை? இப்ப ஏன் இப்பிடி நாலு கட்சிகளும் பிரிஞ்சு நிண்டு கொண்டு நாலு பக்கத்தால அறிக்கைகள் விட்டு ஏதோ எலும்புத் துண்டுக்குக் கடிபடுற நாய்க் கூட்டம் போல அடிபடவேணும்" எண்டு கேக்கிறவையும் இருக்கினம்.

அவைக்கு நான் என்ன சொல்லுறனெண்டால், அவை அடிபட்டால் உங்களுக்கு ஏதும் வலிக்குதோ? இல்லை, நீங்கள் கொண்டுபோய் ஆஸ்பத்திரியில சேக்கப் போறியளோ? அடிபட்டாலென்ன கடிபட்டாலென்ன விடுங்களன். கடைசியில ஏதும் ஒரு முடிவு வரும்தானே?

சீற்றைச் சும்மா வெத்துக்கு விட்டிட்டு வெறுவாய் சப்பிக்கொண்டிருக்கவே எங்கட வீர வசனக்காறர் இவ்வளவு வில்லங்கப்பட்டுத் தேர்தல் களத்தில குதிச்சவை?

இப்ப என்ன பெரிசாய் பிரச்சினைப்படுகினமெண்டு நீங்கள் இளக்காரமாப் பாக்கிறியள்? எங்கட கூத்தணிக்காரர் ஆசைப்படுறதில என்ன தப்பு? அவையின்ர சின்னத்திலதான் மற்றவை கேட்டவை. மற்றவையின்ர சின்னத்தில கேட்டு கூத்தமைப்பார் வெண்டிருக்க ஏலுமோ? அதாலதான் போனஸ் சீற் தங்களுக்குத்தானெண்டு நிக்கினம்.

ஆனாலும் அதுக்குள்ளயும் குத்துவெட்டே! சங்கரியார் யாழ்ப்பாணத்துக்காரரொருவரைக் கதிரையில இருத்தி விட நிக்கிறார், மற்றத் தொங்கலில சம்பந்தத்தார் மூதூர்காரரொருவரை ஏத்திவிட நிக்கிறாரெண்டு யாரும் பிழையாக் கதையாதேங்கோ. தேசியப் பிரச்சினைகள இப்பிடிப் பிழை பிழையாக் கதைச்சுத்தான் ஆக்கள் கெடுக்கிறது.

அதுபாருங்கோ, சங்கரியார் "தங்க்" பண்ணினதில குத்தமில்லை. அவர் என்ன செய்வார்? வாக்குக் குடுத்திட்டார். இளைஞர்களுக்கு முன்னால, பொதுக் கூட்டத்தில வாக்குக் குடுத்திட்டார். ரீவியில சொன்னாரெல்லே. கேக்கேல்லையே? எப்பிடி சிவசிதம்பரத்தார் சாவாரெண்டு அவருக்கு முன்னமே தெரிஞ்சு வாக்குக் குடுத்தாரெண்டு குறுக்கால போற புத்திய அவிட்டு விட்டு இங்க காற்தடம் போட்டுக்கொண்டு நிக்காதேங்கோ. எப்பிடியோ, சீற் காலியாகுமெண்டதத் தன்னும் தீர்க்க தரிசனமாத் தெரிஞ்சு கொள்ள ஏலாட்டால் எப்பிடி அவர் ஒரு பழுத்த அரசியல்வாதியா இருக்கேலும்? வாக்கக் காப்பாற்ற வேணுமெண்டால் சீற்ற அவர் சிபாரிசு செய்த ஆளுக்குத்தான் குடுக்கிறது நியாயம்.

அதேவேளையில சம்பந்தத்தார் சொல்லிறதும் நியாயம்தான். கட்சியின்ர செயலாளரா அவரிருக்கக்க அவர்தானே முடிவு சொல்ல வேணும்? அவர் கூத்தணிக்கு மட்டும்தானே செயலாளரெண்டு குறுக்கால விழுந்து கேளாதேங்கோ. கூட்டுக்கும் அவர்தான் தலைவரெண்டத மறவாதேங்கோ. கூட்டெண்டு சொல்லுறதுக்கென்ன, கூத்தணியின்ர சின்னத்திலயும் பெயரிலயும்தான் மற்றவை போட்டி போட்டதால அவர்தான் தேர்தல் ஆணையாளருக்கு தங்கட பிரதிநிதி யாரெண்டு அறிவிக்கிற அதிகாரம் கொண்டவர். அவற்ற மனசுக்கு மூதூரில ஒரு எம்பி இல்லையே எண்ட ஏக்கம். முந்தின மூதூர் எம்பி மூச்சடங்கிப் போனாரெண்ட ஒரு பட்சாதாபமோ என்னவோ.

இதுக்குள்ள மங்கையற்கரசி அக்காவுக்கு அதைக் குடுக்க வேணுமெண்டும் சில கூத்தணி வட்டாரங்கள் குரலெழுப்புது. முன்னாள் தளபதி அமிரண்ணைய மதிக்க வேணுமெண்ட ஆதங்கப்படி அதுவும் நியாயமானதுதான்.

ஆனால் மற்றப் பக்கம் சுரேஷ் கேக்கிறதும் நியாயமாத்தான் இருக்கு. "மற்றக் கட்சிகளின்ர தலைவர்மாரெல்லாருக்கும் சீற்றுக் கிடைச்சிருக்கு, எனக்குத்தான் கிடைக்கேல்லை, அதால அதத்தனக்கே தரவேணும்" எண்டு அவர் சொல்லிறதையும் தட்டிக் கழிக்க ஏலாது.

இங்கால காங்கிரஸ்காரரில குமரகுருபரனார் தனக்கெண்டும், குமார் அண்ணையின்ர அண்ணி தனக்கெண்டும் கேக்கறதுகள் எல்லாமே சரியான கோரிக்கைகள்தான்.

ஒரு சீற்றை வைச்சுக்கொண்டு இதையெப்பிடித் தீர்க்கிறதெண்டு எல்லாரும் என்னட்ட அட்வைஸ் கேட்டவை. நான் சொல்லுற சொலூஷன் வலு சிம்பிள் பாருங்கோ.

அந்த சீற்றை மெதுவாப் பார்லிமென்டில இருந்து கழட்டிக் கொண்டு வந்து சிவசிதம்பரத்தாற்ற சமாதிக்கு மேல வைச்சுக் கொளுத்திப் போடுங்கோ.

பிறகு, நோ சீற், நோ புறொப்ளம்!

யாவும் கலப்படமற்ற கற்பனை

# இந்தவாரம் உங்கள் பலன்

23.06.2002 தொடங்கி 29.06.2002வரை

**சோதிட மாமணி தில்லை**

## கிரக நிலை

| | | | |
|---|---|---|---|
| மிதுனம் | - சூரியன், செவ்வாய், வியாழன். | விருட்சிகம் | - கேது |
| இடபம் | - புதன், இராகு, சனி. | கர்க்கடகம் | -வெள்ளி. |

சந்திரன், விருட்சிகம், தனு, மகரம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் கஷ்டங்கள் தீரும். பணவரவு திருப்தி தரும். உத்தியோகத்தர்கள் எதையும் கவனமுடன் செய்வது நன்மைதரும். மாணவர்களுக்குக் கல்விச்சிறப்புண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் எதிலும் அக்கறையுடன் செய்வது நல்லது.

அதிஸ்ட நாள்: செவ்வாய்,
அதிஸ்ட இல.: 1.

### இடபம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். பெரியோர்கள் உதவியுண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் வார இறுதியில் தோன்றும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி,
அதிஸ்ட இல.: 4.

### மிதுனம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில்நிலை முன்னேற்றம் ஏற்படும். பணவரவு சிறந்து விளங்கும், உத்தியோகத்தில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 5.

### கர்க்கடகம்

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) எடுத்த கருமங்களில் வெற்றியும், பணவரவும் ஏற்படும். பெரியோர் உதவியுண்டாகும். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் அவதானத்துடன் செயற்படுவது நல்லது.

அதிஸ்ட நாள்: திங்கள்,
அதிஸ்ட இல.: 7.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) மறைமுக எதிர்ப்புக்கள் நீங்கும். தொழில் உயர்ச்சியுடன் பணவரவு உண்டாகும். உத்தியோகத்தில் பதவியுயர்வு வந்துசேரும். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சி ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்,
அதிஸ்ட இல.: 3.

### கன்னி

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) மனக்கலக்கம், தொழிலில் சிறிது பிரச்சனை, பொருள்வரவு வார இறுதியில் சிறப்புத்தரும். உத்தியோகத்தில் செல்வாக்கு ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேக்கநிலை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 5.

### துலாம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) மனக்குறை நீங்கும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோக ரீதியாக உயர்ச்சிகளுக்கு இடமளிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் குறைவாகப் பெறுவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி,
அதிஸ்ட இல.: 2.

### விருட்சிகம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் ரீதியாக முன்னேற்றம் ஏற்படும். வெளியிடப் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். உத்தியோகத்தில் இருந்து வந்த கஷ்டநிலை விலகும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பு ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்,
அதிஸ்ட இல.: 1.

### தனு

(மூலம், பூராடம்,உத்தராடத்து முதற்கால்) இனசன நன்மையும், காரியானுகூலமும் உண்டாகும். பெரியோர் பகையைத் தவிர்க்கவும். உத்தியோக ரீதியாகச் சிலர் பிரச்சனைக்கு ஆளாகுவர். மாணவர்களுக்குக் கல்வியில் முன்னேற்றமுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது.

அதிஸ்ட நாள்: வியாழன்,
அதிஸ்ட இல.: 4.

### மகரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழிலில் உயர்ச்சி ஏற்படும். மறைமுக எதிர்ப்புக்கள் நீங்கும். பணவரவு சுமாராக அமையும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்குக் கல்வித் தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 2.

### கும்பம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பணவரவு திருப்தி தரும். பிரயாணங்களில் அவதானத்துடன் நடந்து கொள்ளவும். உத்தியோகத்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 7.

### மீனம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) முயற்சிகளில் வெற்றியும், தொழில் மேன்மையும் ஏற்படும். பணவரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் கடின உழைப்புக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: வியாழன்,
அதிஸ்ட இல.: 1.


ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னாலை சிந்துரம் பொன் ஜுவல்ஸ்
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
33365


# கால் கொடை

கால் என்றால் அப்படியொரு கால்! பல அடி தூரத்தில் செல்பவர்களைக் கூட எட்டி உதைக்கக் கூடியளவு நீளமான கால் இந்த யுவதிக்கு. பிரிட்டனைச் சேர்ந்த ரேம் ஸ்டேஸி என்ற 17 வயது யுவதியின் கால்கள்தான் உலகிலேயே மிகவும் நீளமான கால்கள்.



தற்போதைக்கு 126.36 செ.மீ (1.26 மீற்றர்) நீளத்தில் இவரது கால்கள் இருக்கின்றன. இன்னும் வளரும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். ஏற்கனவே இந்த யுவதி அவரது தந்தையின் உயரத்தையும் தாண்டி 6 அடி 4 அங்குலத்திற்கு வளர்ந்துவிட்டார்.

சிறு வயது முதலே இவரது கால்களின் வளர்ச்சி வேகம் சற்று அதிகமாகக் காணப்பட்டது. பருவமடைந்ததன் பின்னர் அந்த வேகம் மேலும் அதிகரித்துக் கின்னஸ் சாதனை வரை சென்றுவிட்டது. பள்ளி மாணவியான ரேம் வகுப்பறைக் கதிரையில் அமர்ந்தால் கால்கள் நிலத்தில் நீள்கின்றன.

கால் என்றால் அப்படியொரு நீளமான கால்!



அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331



# நிபா வைரஸ்

மிக ஆபத்தான ஒரு வகை வைரஸின் தோற்றம் தான் இது. சி.ஜே.டி வைரஸ் அல்லது நிபா வைரஸ் என உலக சுகாதார ஸ்தாபனத்தால் அடையாளம் காணப்பட்டிருக்கும் இந்த வைரஸ் மிக அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பயங்கரமான ஒரு உயிர்கொல்லி!

கால்நடைகளில் இருந்து உருவாகும் இந்த வைரஸ் மனித உடலில் தொற்றினால் பாதிக்கப்பட்டவரின் மனநிலை சிறிது சிறிதாக மோசமாகி முதலில் வெறித்தன்மை போன்ற உணர்வு ஏற்பட்டு குறுகிய காலத்திற்குள் பைத்தியமான நிலைக்கு ஆளாகி இறப்பார்.

ஜப்பானில் என்ஸிபேலிட்டஸ் என்று மருத்துவ விஞ்ஞானத்தில் அழைக்கப்படும் நோய்க்கு ஒப்பான அறிகுறிகள் தான் காணப்படும் இந்த வைரஸ் சிந்தனையுடன் சம்பந்தப்பட்ட நரம்புகளையும் நாளங்களையும் மெதுவாக செயலிழக்கச் செய்யக் கூடியவை. பெரும்பாலும் பன்றிகளில் இருந்து உருவாகும் இந்த வைரஸினால் தாக்கப்பட்ட முதல் நபர் 1998ம் ஆண்டு மலேசியாவில் உயிரிழந்தார். ஏற்கனவே இந்த வைரஸ் தாக்கத்தால் பெருவாரியான மிருகங்கள் உயிரிழந்துள்ளன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரையில் ஆங்காங்கே ஒவ்வொரு சம்பவமாக அறியப்பட்டு வந்த நிபா வைரஸின் தாக்கம் சமீப காலத்தில் வேகமாக அதிகரித்து வருகிறது! என உலக சுகாதார ஸ்தாபனம் கவலை தெரிவித்துள்ளது. எச்.ஐ.வி போன்று இதுவும் மனித குலத்தின் கட்டுப்பாட்டை மீறிய ஒரு நோயாக உருவெடுத்துவிடுமோ என்ற அச்சம் அனைத்துலக சுகாதார அதிகாரிகளைக் கவலையடையச் செய்திருக்கிறது.



இந்த வைரஸ் மிக அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பயங்கரமான ஒரு உயிர்கொல்லி!

# பால் நடை

தண்ணீர்க் குடங்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைத்து நீர் சுமந்து வரும் பெண்களைப் பார்த்திருப்பீர்கள். அவர்கள் நடப்பது வீட்டுக்கும் கிணற்றுக்கும் இடையிலான தூரம் வரை மட்டும்தான். இங்கே பால் போத்தலை தலையில் சுமந்தபடி இந்த இளைஞர் 130.3 கிலோ மீற்றர் தூரம் தொடர்ச்சியாக நடந்து சாதனை படைத்திருக்கிறார். அஷ்ரிடா பியூர்மன் என்ற இந்த அமெரிக்கரின் பொழுது போக்கு விட்டம் குறைந்த சிறிய பொருட்களைத் தலையில் நிறுத்தி உடலைச் சமநிலைப் படுத்தி நடந்து திரிவதுதான். கடுமையான பயிற்சியின் பின்னர் 23 மணித்தியாலங்களும் 35 நிமிடங்களுமாக நியூயோர்க் வீதிகளில் நடந்து இந்த கின்னஸ் சாதனையை இவர் நிலைநாட்டினார்.

ஒரு போத்தலில் தண்ணீரை நிரப்பிக் கொண்டு இதே மாதிரியான சாதனைக்கு நீங்களும் முயற்சிக்கலாம்!

(தண்ணீரையே பயன்படுத்துங்கள் ஒரு போத்தல் பாலை ஏன் வீணாக நிலத்தில் கொட்டுவான்?!)



## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி பிரித்திகா 18.06.2002

[illegible]

## பிறந்தநாள் வாழ்த்து



செல்வி வெரோனிகா 20.06.2002

செல்வி மௌனிக்கா 04.07.2002

மாதகலைச் சேர்ந்த திரு.திருமதி நந்தகுமார்-உஷாநந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்விகள் வெரோனிகா தனது முதலாவது பிறந்தநாளை 20.06.2002 லும், மௌனிக்கா தனது மூன்றாவது பிறந்தநாளை 04.07.2002 லும் சுவிஸில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.

இவர்களை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், அளாமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனின் துணையுடன் நோய்நொடியின்றி சகல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அம்மம்மா, யாழ்ப்பாணம்.